214

214/1-50

T.P.H.

# மறுமலர்ச்சித் தமிழ் வாசகம்

ஏழாம் வகுப்பு




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1950
MADRAS

...ர்ஸ் பப்ளிஷிங் ஹௌவுஸ்
...காரத்தெரு, சென்னை — 1.

TB
031 (T)
N49
135587

# மறுமலர்ச்சித் தமிழ் வாசகம்

இரண்டாம் படிவம்

ஆக்கியோர்
பண்டிதை திரு. S. கிருஷ்ணவேணி அம்மாள்
முன்னைத் தலைமைத் தமிழாசிரியை
லேடி வில்லிங்டன் உயர்தரக் கலாசாலை, திருவல்லிக்கேணி.
&
இனியன்.
மேற்பார்வையாளர்:
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள்.
பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ. பி. எல்.
அவர்கள் முகவுரையுடன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JAN 1950
MADRAS

டீச்சர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்
53-56. பவழக்காரத் தெரு :: சென்னை. 1.
பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1-0-0

TB
031 N9
NX49

# முகவுரை

மறுமலர்ச்சித் தமிழ் வாசக வரிசையில் இரண்டாம் படிவத்தைப் பார்வையிட்டு மகிழ்ந்தேன்.

இவ் வாசக நூலிலுள்ள பாடங்கள் அரசாங்கத்தினர் வெளியிட்டிருக்கும் பாடத் திட்டத்திற்கு இணங்க எழுதப்பட்டுள்ளன. பாட விஷயங்களிற் சில தமிழ் நாட்டுப் பூர்வ காலத்திற்கு உரியனவாயும், சில தற்காலத்திற்கு உரியனவாயும், சில விஞ்ஞானம் பற்றினவாயும் அமைந்திருக்கின்றன. அனைத்தும் மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றன.

இந் நூலில் பயின்றுவரும் தமிழ்நடையும் மிகவும் திருப்திகரமாயுள்ளது. இலக்கணப்பிழை யாதுமின்றி, நல்ல தமிழில் மாணவர்களது உளங் கவரும் முறையில், அவர்கள் ஊக்கங்கொண்டு படிக்குமாறு பாடங்கள் நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன.

தேவாரம், திருப்புகழ் முதலிய பக்தி நூல்கள், திருக்குறள் முதலிய நீதி நூல்கள், பஞ்ச தந்திரம் முதலிய கதைச் செய்யுள், குமரேசசதகம் முதலிய நூல்கள், கலம்பகம் முதலிய பிரபந்தங்கள், தனிப்பாடல்கள் இவற்றினின்றும் எடுக்கப்பட்டுள்ளன. தற்காலக் கவிஞருள் பாரதி, சுத்தானந்த பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை என்ற மூவரது நூல்களினின்றும் பொறுக்குமணிகள் இதிற் கோக்கப்பட்டுள்ளன.

பழமையினின்றும் தோன்றிய மறுமலர்ச்சியே மிகவும் சிறந்ததாகும். இந் நெறியைப் பின்பற்றி இவ் வாசகம் அமைந்துள்ளமை கண்டு மகிழத்தக்கது.

இந்நூல் மாணவர்களுக்கு மிகவும் பயன்படுமென்று உறுதியாய் நம்புகிறேன். இதன் ஆசிரியர்கள் கல்வியுலகின் பாராட்டுக்கு உரியர்.

சென்னை
28-11-'49 } 135584 எஸ். வையாபுரிப் பிள்ளை

சென்னை-600 008.

FIRST PUBLISHED : *Novr.* 1949

# முன்னுரை

நம் நாட்டில் தற்போது தமிழ் முதல் மொழியாய் உள்ளது பலரும் அறிந்ததே. இதனல், மாணவர்கட்கு முன்னையினும் தமிழறிவு அதிகப்படும் என்பது திண்ணம். அதற்கேற்ப அரசாங்கத்தாரால் முதற்பாரம் முதல் ஐந்தாம் பாரம் வரை பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றியே பாட புத்தகங்கள் எழுதப்படினும், அவை, அருஞ்சொற்களின் மிகுதி, செந்தமிழ் நடை, இன்பச் சுவை, பிழையற்ற பதிப்பு ஆகிய இவற்றைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.

இம்முறையில் பன்னாட்களின் அனுபவத்தை ஒட்டியும், இளைஞரின் கல்வி அறிவு முதலியவற்றின் பெருக்கத்தைக் கருதியும், புதிய பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள எல்லாப் பொருள்களையும் தொகுத்தும், முதல் மூன்று பாரங்களுக்கும் தனித்தனி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் இலக்கணக் கோட்பாடுகளை இலக்கண நூலில் படித்துக்கொள்வார்களாதலின், அவற்றையே இங்குக் கூறுவது மிகை எனக் கருதி, இந்நூலின் இலக்கியத்திலுள்ள இலக்கணங்களைக் கண்டுபிடிக்கும் பழக்கம் ஏற்படுதற்பொருட்டு, இலக்கணம் என்னும் தலைப்பின் கீழ்ச் சில பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.

இந்நூலின் கண்ணுள்ள 'பயிற்சி' என்னும் தலைப்பு, அருஞ்சொற்பொருள், வினுக்கள், இலக்கணம் ஆகிய மூன்று தலைப்புகளிலுமுள்ள சிற்சில குறிப்புகளையும் தன்னிடம் கொண்டுள்ளது மட்டுமேயன்றி, ஒரு பாடத்தில் வகுப்பிற்கேற்ப எங்ஙெந்தப் பொருளைப்பற்றிக் கட்டுரை எழுதலாம் என்பதை மாணவர் அறிந்துகொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நான்கு தலைப்புக்களும் மாணவர் பாடத்தைத் தெள்ளத் தெளிதற்கு உறுதுணையாய் இருக்குமென்பது ஒருதலை.

தம்மால் இயன்றவரையிற் கண்ணுங் கருத்துமாய் நூல்களைப் பதிப்பிப்பதில் வல்லுநரான வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்களைத் தமிழுலகம் நன் கறியும். அவர்கட்குப் பல வேலைகளிருப்பினும், அவற்றிற் கிடையில் இந்நூலையும் பதிப்பித்துத் தருதற்கு ஒப்புக் கொண்ட அவர்களது அன்புடைமை என்றும் மறக்கற் பாலதன்று. அவர்களுக்கு எம் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எங்களை இப்பணியில் ஊக்குவித்த சென்னைப் பல் கலைக் கழகத் தமிழாராய்சித்துறைத் தலைவராயிருந்து அரும்பணி ஆற்றிய பேரறிஞர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை B. A., B. L. அவர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

கவியோகி திரு சுத்தானந்த பாரதியாரைக் தமிழுலகம் நன்கறியும். அன்னார் தம் "காலத்தை வென்ற கவி" என் னும் பாடல்களைப் பிரசுரிக்க அன்புடன் அனுமதி தந்ததற்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம். "கொடுத்து வைத்தது கிடைக்கும்" என்னும் சிறுகதை யைப் பிரசுரிக்க அனுமதி யளித்த குகப்பிரியை அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழகம் இதை அன்புடன் ஏற்று, மேலும் எங்களை இப்பணியில் ஊக்குவித்தருளின், அஃதொன்றே எமக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.

சென்னை<br>
25-10-49

ஆக்கியோர்

# பொருளடக்கம்


1. அவ்வையார் தூது .... 1
2. விஞ்ஞானத்தின் விந்தைகள் .... 7
3. வேளாண்மை .... 15
4. அவிவேக பூரண குரு கதை .... 25
5. கொலம்பஸ் .... 35
6. வீரப் பெண்மணிகள் .... 40
7. மலையா நாடு .... 48
8. அசோகரின் அன்பு உள்ளம் .... 54
9. குடிசைத் தொழில் .... 61
10. மரத்தின் பயன் .... 69
11. கொடுத்துவைத்தது கிடைக்கும்! .... 77
12. மகாபலிபுரச் சிற்பங்கள் .... 83
13. நெடுஞ்செழியனது வெற்றி .... 91
14. கவியரசியார் .... 98
15. உல்லாசப் பிரயாணம் .... 106
16. செய்தித்தாள் .... 115
17. வள்ளல் பேகன் .... 119
18. தமிழ்த்தனித் தலைவர் .... 126
19. தமிழிசை .... 135

I. கடவுள் வணக்கம் .... 140

II. நீதிச் செய்யுள்

1. திருக்குறள் .... 142
2. திரிகடுகம் .... 147
3. சிறுபஞ்சமூலம் .... 149
4. நீதி வெண்பா .... 151
5. இனியவை நாற்பது .... 154
6. நல்வழி .... 156



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JAN 1950
MADRAS

7. நன்னெறி .... 159
8. நீதிநெறி விளக்கம் .... 162
III. கதைச் செய்யுள்
1. யானையை வென்ற முயல் .... 165
2. செட்டியும் மகனும் .... 169
3. பழிவாங்கிய குரங்கு .... 173
IV. பல் சுவை:
1. சதகச் செய்யுள் .... 179
2. காலத்தை வென்ற கவி .... 181
3. விவேக சிந்தாமணி ... 182
4. தனிப் பாடல்கள் .... 183
5. சந்திரன் .... 184
6. செந்தமிழ் நாட்டின் சிறப்பு .... 187
7. இயற்கை வருணனை .... 188
8. திருவரங்கக் கலம்பகம் .... 189
9. முக்கூடற் பள்ளு .... 191
10. தொழில் .... 192
11. விடுகதை .... 193
V. ரகர றகர பேதங்கள் .... i

# மறுமலர்ச்சித் தமிழ் வாசகம்

(ஏழாம் வகுப்பு)

## 1. அவ்வையார் தூது

1. அதியமான் என்பவன் அருளும் ஆண்மையும் நிறைந்த ஓர் அரசன். இவன் சேர நாட்டைச் சார்ந்த தகடூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு, அதையடுத்த மலை நாட்டை ஆண்டு வந்தான். இப்பொழுது அந்நாடு தர்மபுரி என வழங்கிவருகிறது. இவன் தமிழினிடத்தும், தமிழ்ப் புலவரிடத்தும் மிக்க மதிப்புக்கொண்டிருந்தான் என்பதற்குத் தான் பெற்ற அரிய நெல்லிக் கனியைத் தமிழ்மூதாட்டியாராகிய அவ்வையாருக்குக் கொடுத்து மகிழ்ந்ததே தக்க சான்றாகும்.

2. இவன் காலத்தில் தொண்டைமான் என்னும் மன்னன் காஞ்சீபுரத்தில் அரசு செலுத்தி வந்தான். அவன் சேர சோழ பாண்டியர்களைப் போன்றே மிக்க சிறப்பு வாய்ந்திருந்தான். தமிழில் செய்யுள் செய்யும் புலமையும் அவனுக்கிருந்தது. அதியமான் நாளுக்கு நாள் மேன்மையடைவதும், இவனுடைய நாடு பெருகிவருவதும் தொண்டைமானுக்குப் பொறாமையை உண்டாக்கின. ஆதலின், அவன் அதியமான்மேல் போர் தொடுக்கத்

தீர்மானித்து அதற்கேற்ற ஏற்படுகளைச் செய்து கொண்டிருந்தான்.

3. தொண்டைமான் எண்ணம் அதியமானுக்குத் தெரிந்தது. இவன் போருக்குப் பின்னடைபவனும், தொண்டைமானுக்கு அஞ்சினவனுமல்லன். ஆயினும், இவனுக்குப் போர் செய்ய விருப்பம் இல்லை. "நான் தொண்டைமானேடு யுத்தத்துக்குச் செல்வேனாகில், அவன் தோற்பது நிச்சயம்; வெற்றி என்னுடையதேயாகும். ஆயினும், எங்களுக்குள்ள மண்ணாசை காரணமாக, எத்தனை வீரர்கள் உயிரை இழப்பார்கள்! அவர்கள் குடும்பங்கள் துக்கத்தில் ஆழ்வதற்கு நாங்களே காரணர்கள் அல்லவா? அவர்களுடைய கண்ணீர் அரசர்களுடைய அரசை அழிக்கும் படைகளல்லவா? ஆதலின், இப்போர் ஏற்படாவண்ணம் நிறுத்துவதே என் கடமையாகும்," எனத் தனக்குள்ளே சிந்தித்தான். எனவே, "தூதுவர் ஒருவரைத் தொண்டைமானிடம் அனுப்பி நமது ஆண்மையை அவனுக்குத் தெரிவித்து, யுத்தத்தை அவன் மேற்கொள்ளாதவாறு செய்வதே தக்கது," என இவனுக்குத் தோன்றியது. நற்குடிப்பிறப்பு, அரசனிடம் அன்பு, கல்வி, அறிவு, ஆராய்ச்சி, சொல் வன்மை, அஞ்சாமை முதலிய பல நற்குணங்கள் தூதுவரிடம் பொருந்தியிருக்க வேண்டுமல்லவா? 'இக்குணங்கள் யாவும் அமைந்தவர் யார்?' என அதியமான் சிந்தித்துப் பார்த்தான். இவன் மனத்திற்குத் தோன்றியவர் அவ்வையாரே ஆவர். ஆதலின்,

இவன் அவ்வையாரைத் தொண்டைமானிடம் தூது அனுப்பினன். அவரும் அக்காரியத்தைச்செய் தற்கு உடன்பட்டார்.



4. முத்தமிழ்த்தேர்ச்சியும், அரசியலைப்பற் றிய அறிவும் வாய்ந்த அவ்வையார் தன்னிடம் தூது வருவதைத் தொண்டைமான் அறிந்தான். தூதுவரை நடத்தும் முறையையும் பெருமையையும் அறிந்திருந்த தொண்டைமான், அவ்வையாரை அன்புடனும் பெருமதிப்புடனும் வரவேற்றான்.

5. தொண்டைமானுக்கு, "அவ்வையார் நம் பெருமையை அறிந்தால், அதை அதியமானுக்குத் தெரிவிப்பார். அப்போது அதியமான் நமக்கஞ்சி நம்மைப்பணிவான். அதற்கு நம்படைக்கலக் கொட்டிலே பொருத்தமானதாகும்," என்னும் எண்ணம் உண்டாயிற்று. உடனே அவ்வையாரைக் கொண்டு போய்த் தன் படைக்கலக் கொட்டிலைக் காண்பித்தான். அங்குள்ள ஆயுதங்கள் யாவும் நெய் பூசப் பட்டு, மயிற்பீலி சூட்டப்பெற்று, மிக்க ஒளியுடையனவாய் இருந்தன.

6. தொண்டைமான் தமக்கு அக்கொட்டிலைக் காட்டியதற்குக் காரணம் இன்னது என்பதை அவ்வையார் அறிந்துகொண்டார். அறிவு நிரம்பிய தூதுவராகிய அவருக்கு அதியமானின் ஆண்மைத் திறத்தை வெளியிடுவதற்கு அதுவே தக்க சமயம் எனத் தோன்றியது. அவர் தொண்டைமானை நோக்கி, "காஞ்சித் தலைவனே, உன் படைக்கலங்கள் மின்னல் போன்று ஒளிருகின்றன! நெய் பூசப்பட்டு, பீலியும் மாலையும் சூட்டப்பெற்று, அழகாக வைக்கப்பட்டுள்ளன! பார்ப்பவர் கண்களைக் கவர்கின்றன! அதியமான் படைக்கலங்களோ, கொட்டிலில் இருக்கும் புண்ணியத்தைச் செய்தில. அவற்றினிடம் கூர்மையோ, அழகோ, ஒளியோ இல்லை. யாவும் கூர்மை மழுங்கி, நுனி உடைந்து, பக்கங்கள் தேய்ந்து, கொல்லன் உலைக்களத்திற் கிடக்கின்றன!" எனக்கூறினர். அவ்வையாரின் சொற்கள், அதியமானைப் புகழாமல் புகழ்ந்ததை

யும், தொண்டைமானை இகழாமல் இகழ்ந்ததையும் தெரிவித்தன.

7. அவ்வையாரின் சொற்கள், "அதியமானும் அவன் படை வீரரும் பலமன்னருடன் போருக்குச் சென்று பகைவரைப் பல முறை வென்று வந்தமையின், அவன் ஆயுதங்கள் கூர் மழுங்கிக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன. நீயும் உன் வீரர்களும் போர் முகத்தையே கண்டிருக்க மாட்டீர்கள் போலும்! வீரத்தன்மை உங்களிடம் இருந்தால், உங்கள் ஆயுதங்கள் இந்நிலையிலிருக்குமா? சிறிது வீரமுடையவரையேனும் எதிர்த்துப் போர் புரியும் செயலிற் பழகாத நீங்கள், பெரிய வீரனாகிய அதியமானுடன் முதல் முதல் போருக்குப் புறப்படுதல் தகுதியன்று. அப்படிச்சென்றால், உங்களுக்குத் தோல்வியே உண்டாகும்," என்னுங் கருத்தைக் குறிப்பனவாகும்.

8. அவ்வையார் உரை, தொண்டைமானை, "அதியமான் படை வன்மையும் போர்த்திறனும் இல்லாதவனென நினைத்தல்லவா நாம் அவனிடம் போர் புரிய நினைத்தோம்! நாம் நினைத்தது தவறு!" என எண்ணும்படி செய்தது. அவன், "இனி அந்த எண்ணத்தை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்," என நினைத்து, அவ்வையாரிடம் சமாதான வார்த்தைகளைப் பேசி, அவரை வழியனுப்பினான்.

9. இதனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தூதுவரால் ஏற்பட்ட நன்மைகள் இவை எனவும்,

தூது செல்வதாகிய சிறந்த காரியத்துக்குப் பெண் பாலாரும் தக்கவராய் இருந்தனர் எனவும், இதற்கு அவ்வையாரே முன்னணியில் நின்றார் எனவும் அறிகின்றோம். இம்முறையில் தமிழகத்தின் உயர்வு பெண்களின் பெட்பு முதலியன விளங்குகின்றன அல்லவா?

அருஞ்சொற்பொருள்:

சான்று - சாக்ஷி, புலமை - அறிவு, உடன்பட்டார் - சம்மதித்தார், முத்தமிழ் - (இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும்) மூவகைத் தமிழ், தேர்ச்சி - தெளிவு, அரசியல் - ராஜரிக முறை, படைக்கலக் கொட்டில் - ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம், ஆண்மை - வீரம், மயிற்பீலி - மயில் இறகு, சாதுரியம் - சாமர்த்தியம், பெட்பு - பெருமை.

வினாக்கள்:

1. அதியமான் தமிழ்ப்புலவரிடம் வைத்த மதிப்பிற்குச் சான்று என்ன?

2. அதியமானுக்கு ஏன் போர் புரிய விருப்பமில்லை?

3. தூதுவருக்கு இருக்க வேண்டிய குணங்கள் யாவை?

4. தொண்டைமான், அவ்வையாருக்குத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டியதற்குக் காரணம் என்ன?

5. அவ்வையார் தூது செல்லுவதற்குப் பொருத்தமானவர் என்பதைச் சான்றுடன் விளக்குக.

6. அவ்வையார் வார்த்தைகள் எவற்றைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன?

இலக்கணம்:

1. இரண்டாம் வேற்றுமைக்கு முன் வல்லினம் என்னவாகும்? மூன்று உதாரணங்கள் தருக.

2. உடன்பாடு எதிர்மறை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது? இரண்டிரண்டு உதாரணங்கள் கூறுக.

3. இப்பாடத்திலுள்ள வினையாலணையும் பெயர்கள் எவை?

பயிற்சி:

1. இப்பாடத்தில் உள்ள மேற்கோள் வாக்கியங்களை எடுத்தெழுதுக.

2. அவ்வையாரின் சாதுரியத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் உள்ள வேறுபாட்டைப் பத்து வரிகளில் குறிப்பிடுக.

# 2. விஞ்ஞானத்தின் விந்தைகள்

1. மக்களுக்கு வியப்பை அளிக்கத்தக்க பல காரியங்களைச் செய்வதில் விஞ்ஞானம் முன்னணியில் நிற்கின்றது. இதன் விந்தைகளுள் ஒவ்வொன்றும் கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் ஆச்சரியத்தைத் தரக்கூடியதே.

2. விஞ்ஞானத்தில் உயிர் நூல், தாவர நூல், இரசாயனம், பௌதிகம் முதலிய அளவற்ற கலைகள் அடங்கியிருக்கின்றன.

3. இதன் ஒரு பகுதியாகிய பௌதிகத்தில் அடங்கிய மின்சாரத்தினால் பற்பல பயன்களை நாம் அடைந்துவருகின்றோம். அவற்றுள் ஒன்று வானொலி. ஆறாம்வகுப்பில் மின்சாரம் தானே

தன் சரிதத்தைச் சொல்லுவதாகப் படித்தோம். இங்கு வானொலியின் பயனைப்பற்றிச் சிறிது கவனிப்போம்:

4. வானொலியைக் கண்டுபிடித்தவர் மார்கோனி என்னும் இத்தாலியர். இவர் காலத்திற்கு முன்னே, மின்சாரமும் தந்தியும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இவற்றைக்கொண்டு மார்கோனி கம்பியில்லாமல் செய்தி அனுப்பும் ஒரு முறையைக் கண்டுபிடிக்க முயன்றார்.



மார்கோனி

5. இவர் இளமையிலேயே ஆகாயத்தில் பரவியுள்ள 'ஈதர்' என்னும் பொருளை ஆராயத்

தொடங்கினர்; அதன் மூலம் மின்சாரத்தினுல் செய்திகள் அனுப்பமுடியுமா என்று அறியப் பல சோதனைகளை நிகழ்த்தினர்; தம் அரிய சோதனைகளால், தூர தேசங்களுக்கும் தந்தியில்லாமலே செய்திகளை அனுப்பும் ஓர் அரிய முறையைக் கண்டுபிடித்தார். அதை இவர் வெளிப்படுத்திய போது பலர் நம்பவில்லை. அன்றியும், அம் மனிதர் இவருக்குத் தீங்கிழைக்கவும் முற்பட்டனர். அதனுல், இவர் தம் சொந்த நாடாகிய இத்தாலியை விட்டு இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு ஒரு தபால் நிலையத்திலிருந்து முதல்முதல் செய்தி அனுப்பினர். அது சிறிது தூரத்துக்கே சென்றது. ஆதலின், அதை மேன்மேலும் ஆராய்ந்து, அதிக தொலைவிற்குச் செய்திகளை அனுப்புவதற்குப் பல சோதனைகளை நிகழ்த்திக் கடைசியில் வெற்றியும் பெற்றார்.

6. இங்ஙனம் ஒலி பரப்பும் செயல் எங்ஙனம் நிகழ்கின்றது என்பதை ஆராய்வோம்: நாம் பேசும்போது உண்டாகும் ஒலி காற்றின் மூலம் பரவினுலும், அது சிறிது தொலைவுதான் செல்லும். முன்னர்க் கூறியவாறு ஆகாயத்தில் எங்கும் பரவியிருக்கும் ஈதர் மூலம் அனுப்பப்படும் மின் அணுச் சத்தியோ, பல மைல் தூரம் செல்லும் ஆற்றல் உடையது. அதை அடிப்படையாகக்கொண்டுதான் மார்கோனி தம் வேலையைத் தொடங்கினர்.

7. மார்கோனியே, பேச்சொலிகளை அலைகள் (மின்னலைகள்) ஆக்க ஒரு கருவியைச் செய்

தார். அக்கருவியின் முன் பேசப்படும் ஒலிகள் மின்னலைகளாய் மாறி வெளிவருகின்றன என்றும்,



மின் அலை பரப்பும் கருவி

அவை ஈதரின் வழியாக ஆகாயத்தில் பரவுகின்றன என்றும்; அம்மின்னலைகள் எந்தச் சத்தியைப் பெற்றிருக்கின்றனவோ, அச்சத்திக்கேற்ப, அதற்கென ஏற்படுத்தியிருக்கும் பெட்டியைத் திருப்பிஞல், அம்மின்னலைகள் பேச்சொலியாய் மாறி வெளிப்படுகின்றன வென்றும், இதற்குப் பேசப்

படுவதற்கு ஒரு கருவியும், வானொலி பெருக்கி என்னும் ஒரு பெட்டியுமே தேவை என்றும் அறிந்தார்.

8. இந்த மார்கோனியைப் பின்பற்றி பிளீமிங் முதலிய சிலர் வேலைசெய்தனர். இவரைத் தவிர டேவிட் ஹக்ஸ், மாக்ஸ்வெல் என்பவர்களும் இத் துறையில் உழைத்துவந்தார்கள்.

9. வானொலியால் ஏற்படும் நன்மைகள் அளவிறந்தன. நாம் கப்பலிலே சென்றால், அஃது ஓர் ஆபத்துமின்றிக் கருதிய கரையை அடையும் என்பதை நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. அதற்குப் புயற்காற்றினாலும், மிகுந்த அலைகளினாலும், கடலில் மறைந்துகிடக்கும் பாறைகளினாலும், மிதந்து வரும் பனி மலைகளாலும் கெடுதி ஏற்படலாம். மாலுமி எத்துணை கவனத்துடன் கப்பலைச் செலுத்தினாலும், சில போது இவ்வாபத்துக்கள் நேரக்கூடும். இயற்கையாக உண்டாகும் இவற்றை எதிர்த்து நிற்க எவ்வளவு வன்மையுடையவர்க்கும் முடிவதில்லை. அவ்வமயம் அக்கப்பலுக்கு வேறோர் உதவி வேண்டியிருக்கிறது. அஃதின்றேல், கப்பல் சின்னபின்னமாவதுமன்றி, அதில் உள்ள பொருள்களும் கடலுக்கிரையாகி, மக்களும் தண்ணீரில் அமிழ்ந்து மாய்வார்கள். இதனால் எத்தனை பொருள்களும், எத்தனை மக்களும், எத்தனை பெரிய கப்பலும் அழிய நேரிடும்! இவை யாவற்றையும் அழியாமல் காத்தற்கு ஓர் உயரிய தயாநிதி உண்டு என்னில், அது வானொலியேயாகும்.

10. ஒரு கப்பலுக்கு ஆபத்து நேர்ந்த மறு கணமே அக்கப்பலிலுள்ள வானொலிக்கருவி அதை உலகமெங்கும் பரப்புகிறது. உடனே பல வித மான உதவிகள் பறந்தோடி வரும். மக்கள் காப்பாற்றப்படுவார்கள். நோயுற்றவர் மருத்துவ சிகிச்சை பெறுவர். பல பொருள்கள் வெளியில் எடுக்கப்படும். இஃது எவ்வளவு பெரிய உதவி பாருங்கள்!

11. கப்பல் பிரயாணத்தைக்காட்டிலும் ஆகாய விமானப் பிரயாணம் பேராபத்தை விளைவிக் கக்கூடியது. கப்பலிலேனும் அதற்கு நேரப் போகும் விபத்தைச் சிறிது முன்னரே தெரிந்து கொள்ளவும் நங்கூரம் பாய்ச்சி அதை நிறுத்தவும் சில வசதிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றும் ஆகாய விமானத்துக்கு இல்லை. அன்றியும், ஒரு புறம் அடித்துக்கொண்டிருக்கும் காற்று, விமா னத்தின் எதிர் முகமாக அடிக்கத் தொடங்குமா யின், அதில் உள்ள நுட்பக் கருவிகள் பழுதுபடும். அப்போது விமானமும், அதிலுள்ள மக்களும் அழி வது நிச்சயம். அவ்வமயம் அங்ஙனம் நேரா வண்ணம் காப்பது இவ்வானொலியேயாகும்.

12. இங்ஙனம் வானொலி உலகிற்கு உண்டா கும் ஆபத்தைப் போக்குவது மட்டுமன்றி, மக்க ளுக்குப் பல நலங்களையும் விளைக்கின்றது.

13. பெண்டிர் காலையில் எழுந்தவுடன் தம் வீட்டு வேலைகளை மிகச் சுறுசுறுப்பாகவும் விரை வாகவும் செய்கின்றனர். பிள்ளைகள் பாடசாலைக்



கும், கணவர் உத்தியோகத்திற்கும் செல்லுகின்றனர். பகற்பொழுதில் பெண்களுக்கு மிக்க ஓய்வுண்டு. அவ்வமயம், வீணை கதைகளைப் பேசியும், வம்பளந்துங் காலத்தைப் போக்காமல், அவர்கள் மனத்தை இன்பத்தில் ஆழ்த்துவது எது? அது வானொலியே. அதன் உதவியால் சிறு சிறு நாடகங்கள், மாதரின் அரிய பேச்சுக்கள், பட்சணம் செய்யும் முறைகள், இனிய பாட்டுக்கள், ஆகிய இவற்றைக் கேட்டு இன்பத்தை அடைகின்றார்கள்.

14. வீட்டிலுள்ள குழந்தைகளும், தங்களைப் போன்ற இளைஞரின் சம்பாஷணைகள், நாடகங்கள், பாட்டுக்கள் முதலியவற்றைக் கேட்டு ஆனந்தமடைகின்றார்கள்.

15. தம் இல்லங்களில் வானொலிக் கருவி இல்லாதவரும், கடற்கரைக்கோ, மலர் வனம் போன்ற பொது இடங்களுக்கோ மாலை வேளைகளிற் சென்று இன்பத்தைப் பெறுகின்றனர்.

16. சங்கீதத்தாற் சந்தோஷம் அடையாதவர் இல்லையல்லவா? அச்சங்கீதம் கேட்டற்பொருட்டு எத்தனையோ பேர் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கின்றனர். மிகுந்த பணச் செலவின்றியே,


வானொலிக் கருவி

நாமே அதன் இன்பத்தைத் துய்த்தற்கும், பாட்டுக்கற்பதற்கும் வானொலி பயன்படுகிறது.

17. வானொலியின் உதவியினால், பண்டைய அரசரின் செங்கோன்மை, வீரம், ஈகை, பத்திமான்களின் வாழ்க்கை, அவர்களுடைய உபதேசங்கள், இக்கால நாட்டின் போக்கு முதலிய பலவற்றையும் அறிகின்றோம். இம்முறையில் மக்கள் வாழ்க்கைக்கும் வானொலிக்கும் எத்தகைய தொடர்பு உள்ளது என்பதை நாம் அறிதல் வேண்டும்.

18. வானொலி உலகிற்குப் புரிந்துவரும் நலங்கள் கணக்கில் அடங்குவன அல்ல. இவற்றின் உதவியின்றேல், உலகமே இத்துணைப் பரந்த ஞானத்தில், உயர்ந்த இன்பத்தில் இருக்கமுடியாதென்பது திண்ணம்.

19. இவ்வானொலியை மேன்மேலும் உயரச் செய்து பரவச்செய்த மற்றவரும் பெருமை பெற வேண்டியவர்களே. அவர்களுடைய உதவிக்கு உலகம் என்றும் நன்றி பாராட்டுவதாக!

அருஞ்சொற்பொருள் :

கலைகள் - வித்தைகள், பௌதிகம் - பூமி முதலிய பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சிக்கலை, புயல் - பெருங்காற்று, பழுதுபடும் - கெட்டுவிடும், நங்கூரம் - மரக்கலத்தை நீரில் நிலைக்கச் செய்யுங் கருவி.

### வினாக்கள் :

1. விஞ்ஞானத்தில் அடங்கின கலைகள் யாவை?

2. மார்கோனி ஏன் இத்தாலியை விட்டு இங்கிலாந்திற்குச் சென்றார்?

3. மார்கோனி வானொலியை எதைக்கொண்டு எவ்வாறு கண்டுபிடித்தார்?

4. வானொலி கப்பலுக்கு என்ன உதவிகளைப் புரிகின்றது?

5. பெண்கள் வானொலியினால் அடையும் நன்மைகள் யாவை?

### பயிற்சி :

1. மார்கோனி பேச்சொலிகளை அலைகளாக்க ஒரு கருவியைச் செய்தார்—இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக்குக.

2. உடனே பல விதமான உதவிகள் பறந்தோடி வருகின்றன. மக்கள் காப்பாற்றப்படுகின்றார்கள்—இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.

3. வானொலியின் பயன்களைப்பற்றி ஒரு பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதுக.

## 3. வேளாண்மை

1. பிறருக்கு அடிமைப்படாமல் சுதந்தரமாக நின்றுசெய்யும் தொழில்களுள் வேளாண்மை மிகச் சிறந்தது. இதற்கு விவசாயம், பயிர் வேலை, உழு தொழில் என்னும் பல பெயர்கள் உண்டு. செய்பவருக்கு மட்டுமேயன்றிப் பிறருக்கும் உதவிசெய்யும் தொழில்களில் முதன்மையில் நிற்பது இப்பயிர்த்

தொழிலே. உலகம் உழவன் கையிலேதான் உள்ளது. உழவன் தன் கையைப் பயன்படுத்தாமல் மடக்கிக்கொண்டிருப்பானாகில், உலகமே மடங்கிவிடும் என்பது உண்மை "உழவன் கை மடங்கின், உலகம் மடங்கும்," என்பது பெரியவர் வாக்கு. இது நிற்க.

2. மக்களுக்கு இன்றியமையாதன உணவும் உடையுமே. அவற்றை உதவுகின்றவர் வேளாளரே என்பதை யாவரும் அறிவர். வேளாண்மை என்பதற்கு 'ஈகை, கொடை' என்பனவும் பொருளாம். மற்றவருக்குக் கொடைபுரிபவன் எவனோ, அவனே வேளாளன் ஆகிறான். பயிர்த்தொழில் செய்பவருக்கு அமைந்திருக்கும் 'வேளாளர்' என்னும் இப்பெயர், எவ்வளவு பொருத்தமானதும் அழகியதுமாகும்! இத்தொழிலால் நாம் நம் வாழ்க்கைக்கு அவசியமான பல பொருள்களைப் பெறுகின்றோம். அவற்றுள் கரும்பு, பருத்தி ஆகிய இரண்டைப் பற்றி மட்டும் இங்குக் கவனிப்போம்.

## கரும்பு

3. கரும்பு புல்லினத்தைச் சார்ந்தது. இளைஞருக்கும் முதியவருக்கும் இதனிடம் மிக்க விருப்பம் உண்டு. கரும்பின் சாற்றிலிருந்து சர்க்கரை செய்யப்படுகிறது. இதை நாட்டுச் சர்க்கரை, பழுப்புச் சர்க்கரை என வழங்குவர். இதன் சக்கை அடுப்பெரிக்க உதவும். இதில் மாப்பொருளும், இரும்புச்சத்தும், சில வைட்டமின்களும் இருப்ப



கரும்புத் தோட்டமும் சர்க்கரைத் தொழிலும்

தால், இஃது உடம்பிற்கு நல்ல வன்மையைத் தருகின்றது. இதிலுள்ள நன்மைகளைத் தெரிந்து கொள்ளாத சிலர், 'அஸ்கா'ச் சர்க்கரையை உயர்வாகவும், இதைக் குறைவாகவும் நினைக்கின்றனர். பட்சணங்களுக்கும், காபி முதலிய பானங்களுக்கும் இதை உபயோகப்படுத்திக்கொள்வது நல்லது என்பதைச் சிறுவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

4. கரும்பு பயிராவதற்கு உஷ்ணமும் ஈரமும் கலந்திருக்கும் நிலம் நல்லது. அதிக மழையும் அதிக வெயிலும், இதை நன்கு வளரச்செய்யா. வண்டல் மண் இதற்கு ஏற்றது. நிலத்தின் வள

மைக்கும் பாதுகாப்பிற்கும் தக்கவாறு இஃது எட்டடி முதல் இருபத்தோரடி வரையும் நீண்டு வளரும்.

5. கரும்பிற்கு விதை இல்லாமையால், இதை ஓரடி அளவிற்குத் துண்டு துண்டாக நறுக்கி, இரண்டு அடிகளுக்கு ஒன்ருக, நான்கு அங்குல ஆழமுள்ள குழிகளில் நடுவார்கள். நட்டதும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அது பத்துப் பதினெரு மாதங்களில் முழு வளர்ச்சியை அடைந்து விடும். நெற்பயிரைப்போன்று கரும்புப் பயிரின் இடையிலும் பல விதச் செடிகள் வளரும். அவற்றைப் பிடுங்கி எறிந்து, இடையிடையே கொத்தி, கரும்பு சாய்ந்துவிடாதவாறு மண்ணை இத்துடன் அணைத்து வைப்பது நல்லது. கரும்பை நட்டதிலிருந்து கவனித்து வர வேண்டுவது அவசியமேயாயினும், நான்காவது மாதத்திலிருந்து ஆருவது மாதம்வரை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு எள்ளுப் பிண்ணுக்கை எருவாகப் போடலாம். கரும்பு முளைத்திருக்கும் இடத்தை மேடாகவும், அதைச் சுற்றிலுமுள்ள இடத்தைப் பள்ளமாகவும் செய்து, இதை வெட்டுமட்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

6. கரும்பின் உச்சியில் நீளமான சோலைகள் கொத்தாய் வளர்ந்திருக்கும். கரும்பு காற்றினல் அசையும் போது சவரி போன்று பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். இது சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள் முதலியவற்றில் பயிராகின்றது.

இதை வேருடன் பிடுங்குவதும், இரண்டு அங்குலம் தரையில் விட்டு வெட்டுவதும் உண்டு. அவ்வேரி லிருந்து திரும்பவும் கரும்பு உண்டாகக்கூடும். பெரும்பான்மையும் கரும்பை இரண்டு வகையாகப் பிரிக்கின்றார்கள். ஒரு வகை, பருமனாகவும், நிரம் பச்சாறு உள்ளதாகவும் இருக்கும்; மற்றொரு வகை, மெல்லியதாகவும், சாறு குறைந்ததாகவும் இருக்கும். கரும்பில் பல நிறங்கள் காணப்படும்.

7. கரும்பை இயந்திரங்களில் விட்டுச் சாற் றைப் பிழிந்தெடுத்துக் காய்ச்சி வெல்லம் செய்வார் கள். அதைக் காய்ச்சும் போது அதில் உள்ள அழுக்கை எடுப்பது பார்க்கத் தகுந்ததாகும். பின்பு அது வெண்மையாகக் காணப்படும். சிறிது குளிர்ந்த பின் அப்பாகை உருண்டை உருண்டை யாகச் செய்வார்கள்.

8. வடஇந்தியாவில் ஓர் ஏக்கருக்கு இருபது டன் கரும்பும், தென்னிந்தியாவில் ஓர் ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று டன் கரும்பும் பயிராகும். இருபது டன் கரும்பிலிருந்து ஒன்றரை டன் அல் லது இரண்டு டன் சர்க்கரை எடுக்கப்படுகிறது. இந்தச் சர்க்கரையைச் சுத்தம் செய்து வெள்ளைச் சர்க்கரை செய்கின்றார்கள். ஆயினும், பழுப்புச் சர்க்கரையே சத்துள்ளது.

9. முன்பெல்லாம் கரும்பு இரண்டு விரற்பரு மன்தானிருக்கும். ஆனல், இப்பொழுதோ, நமக்கு அதைவிட இரட்டிப்பான பருமனுள்ள கரும்பு

கிடைக்கிறது. இப்படி அதிக பருமனுள்ள கரும்பை உண்டாக்க, கரும்புடனே நாணல் என்பதையும் பயிர் செய்கிறார்கள். இதைக் கண்டுபிடித்து, கரும்பின் தரத்தை உயரச் செய்தவர் நம் நாட்டினரான சர். டி. எஸ். வேங்கடராமன் ஆவர். இவர் இன்னும் பல அரிய ஆராய்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறார்.

## பருத்தி

1. பருத்தி செடி வகையைச் சார்ந்த ஒரு புன்செய்ப் பயிர். இதிலிருந்து கிடைக்கும் பஞ்சுதான் நமக்கு உடையாகின்றது. மனித வாழ்க்கைக்கு உணவும் உடையும் இன்றியமையாதவை. ஆயினும், உணவில்லாமல் வெளிச்சென்று காரியங்களைச் செய்யலாம். உடையின்றி வெளிச்செல்ல முடியாது. ஆதலால், உணவைக்காட்டிலும் உடையே சமூக வாழ்க்கைக்கு அவசியமானதென்பதை அறிகின்றோம். முதன்முதல் தோன்றிய மானிடர் உடையில்லாமலே வாழ்ந்தனர்; பின்பு இலைகளையும், மரப்பட்டைகளையும், தோலையும் உடையாக உடுத்தினர். காலம் செல்லச் செல்லப் பருத்தித் துணி ஏற்பட்டது. அஃது அழகும் மென்மையும் உடையதாய் வளர்ந்தது. ஒரு தேசத்தின் நாகரிகத்தை ஒருவாறு குறிப்பதற்கு அந்நாட்டினர் உடைகளும் காரணமாகும். மற்றப் பிராணிகளிடமிருந்து மனிதனைப் பிரித்துக்காட்டும் வெளிக்குறி உடையே. இதனாற்றான், 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்,' என்றும், 'ஆறறிவு வாய்ந்த

ஆளுக்கு ஆடையே அறிகுறி,' என்றும் சில பழமொழிகள் வழங்கி வருகின்றன.

2. பருத்தியின் இயற்கை நிறம் வெண்மையாயிருப்பதால், இது பல நிறங்களையும் ஏற்றுக்கொள்ளும். பருத்திச் செடிகளில் பல வகைகள் இருக்கின்றன. பருத்தியைக்கொண்டு துணி நெய்யும் தொழில் முதன்முதல் இந்தியாவிலேதான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு சிறு குழாயில் பல கெஜத் துணியை அடக்கக்கூடிய மெல்லிய ஆடை இந்தியாவில் நெய்யப்பட்டதென்பதை நூல்களில் படிக்கின்றோம். எல்லாத் தொழிலிலும் பாவமற்ற தொழில் நெசவுத் தொழில் எனக்கருதியே, திருவள்ளுவர் அத்தொழிலை மேற்கொண்டார் எனத் தெரிகிறது.

3. பருத்திச் செடியில் காய்க்கும் காய்கள் முற்றிய பின்பு வெடித்துப் பஞ்சு வெளி வருகின்றது. பஞ்சு, காய்க்குள்ளிருக்கும் விதைகளைச் சுற்றிலும் வெண்மையான நார் போன்றிருக்கும். பஞ்சுக்கு முதலில் சிறிது மழையும், பின்பு வரண்ட உஷ்ணமும் வேண்டும். ஒருவகைப் பருத்தி முளைத்து ஐந்து மாதங்களிலும், மற்றொரு வகை முளைத்து எட்டு மாதங்களிலும் முதிரும். முந்தியதற்கு வரண்ட நிலமும், பிந்தியதற்குத் தண்ணீர் தேங்கி நிற்கும் கரிசல் நிலமும் வேண்டும். ஐந்து மாதப் பருத்திக்கு அதிக மழை வேண்டுவதில்லை. ஆதலால், அது பல இடங்களிலும் பயிராக்கப்படுகிறது. உலகிற் சுமார் மூன்றரைக்கோடிச் சிப்ப அளவுள்ள

பருத்தி விளைகின்றதாம். ஓர் ஏக்கர் நிலத்தில் கொட்டை எடுத்த பஞ்சு நானூறு இராத்தல் கிடைக்கிறதாம்.

4. இந்தியாவில் விளையும் பருத்தியிற் பாதி பம்பாய் ராஜதானியிலும், பீராரிலும் உண்டாகிறது. மற்றப்பாதி, சென்னை ராஜதானி, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பஞ்சாபு முதலிய இடங்களில் விளைகிறது. கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலிய இடங்களில் பருத்தி மிகுதியாய் உண்டாகின்றது. சில செடிகளின் பருத்தி குறுகிய சிலும்புகளுள்ளதாகவும், கரடு முரடாகவும் இருக்கிறது. கரிசல் நிலங்களில் விளையும் பஞ்சு மிருதுவாகவும் நன்றாகவும் இருக்கும். பம்பாய் மாகாணக் கரிசல் நிலம், சென்னைக் கரிசல் நிலத்தைவிடச் செழிப்புள்ளது. ஆதலின், அங்கு விளையும் பருத்தி சிறந்ததாகும். சிந்து கங்கைச் சமவெளிகளிற் பயிராகும் பருத்தி அதிகப் பயனைத் தருகிறது.

5. சில இடங்களிற் பஞ்சைச் சோளம், கம்பு முதலியவற்றுடன் சேர்த்துப் பயிரிடுவார்கள். பருத்திக்கு வேண்டாத உணவுப் பொருள்களே அவைகளுக்கு வேண்டும். ஆதலின், இரு வகைச் செடிகளும் தத்தமக்கு வேண்டுவனவற்றை உண்டு செழிப்பாக வளரும்.

6. கோடை காலத்தில் நிலத்தை உழுது உரமிட்டுச் சிறிது மழைத்துளி விழத் தொடங்கியதும்

விதை விதைப்பார்கள். பதினெட்டு அல்லது இருபது அங்குல இடைவெளி விட்டு விதைகள் விதைக்கப்படும். நிலம் வெடித்துப் போகாமலிருத்தற்காக மூன்று மாதங்களுக்குப் பின்பு செடிகளின் இடை இடையே உள்ள மண் கெட்டிப்படுத்தப்படும். நான்காம் ஐந்தாம் மாதங்களில் அவை பூக்கும். ஜனவரி மாதத்தில் பருத்தியைப் பறித்தெடுப்பார்கள். ஒரே தடவையில் எல்லாக் காய்களும் முற்றுவதில்லை. ஆதலால், அவற்றை நான்கைந்து முறை பறிப்பார்கள். மூன்றும் முறை பறிப்பதிலிருந்து விதைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

7. பருத்திச் செடியிலிருந்து எவ்வளவு பருத்தி கிடைக்கிறதோ, அவ்வளவு விதைகளும் கிடைக்கின்றன. அப்பருத்தி விதைகள் மாடுகளுக்கு உணவாகின்றன. அவை நெய் எடுப்பதற்கும், சில மருந்திற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றனவாம். செடிகளை அடுப்பெரிக்கின்றார்கள். இதனால், பருத்தியின் எல்லாப் பதிகுகளும் பயன்படுகின்றன என்பது தெரிகின்றது.

அருஞ்சொற்பொருள் :

சுதந்தரம் - உரிமை, வேளாளர் - பிறருக்கு உதவி செய்பவர், சக்கை - கோது, பானம் - பருகுவன, வளமை - செழுமை, சவரி - சாமரை, பழமொழி - முதுசொல், வரண்ட - காய்ந்த, கரிசல் நிலம் - செழுமையான கருநிறம் வாய்ந்த நிலம், பேல் - ஐந்நூறு இராத்தல் கொண்ட சிப்பம், உரம் - எரு, நிதி - செல்வம்.

### வினுக்கள் :

1. உழவைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
2. வேளாண்மைக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு யாது?
3. கரும்பிலிருந்து கிடைப்பது யாது? அதன் பயன் என்ன?
4. கரும்புப் பயிர் செய்வதற்கு எத்தகைய நிலம் நல்லது?
5. கரும்பை வளர்ப்பது எப்படி?
6. கரும்பிலிருந்து சர்க்கரையை எப்படி எடுக்கிருர்கள்?
7. பருத்தித்துணியின் வரலாறு யாது?
8. ஆடை என் மனிதருக்கு அவசியம் எனச் சொல்லப்படுகிறது?
9. இந்தியாவின் பருத்தித் துணியைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
10. பருத்திச் செடியைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
11. பருத்தி அதிகமாக உற்பத்தியாகும் இடங்கள் எவை?
12. பருத்தியைப் பயிராக்குவது எப்படி?

### இலக்கணம் :

1. இப்பாடத்திலிருந்து சுட்டுச்சொல், தொழிற் பெயர் இவற்றை எடுத்துக் கூறுக.
2. தொழிற்பெயர் விகுதிகள் யாவை?
3. குற்றியலுகரச் சொற்கள் நான்கை எடுத்தெழுதி, அவை என்னென்ன தொடர்கள் என்பதையும் சொல்லுக.

பயிற்சி :

1. சுதந்தரம், சக்கை, சவரி, வரண்ட, கரிசல் நிலம்—இவைகளை வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. கீழ் வருவனவற்றிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறுக.

i. அவற்றை உதவுகின்றவர் வேளாளரே என்பதை நாம் அறிவோம்.

ii. இஃது உடம்பிற்கு நல்ல வன்மையைத் தருகிறது.

iii. பருத்தியைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 4. அவிவேக பூரண குரு கதை

## ஆற்றைக் கடந்தது

1. ஓர் ஊரில் அவிவேக பூரண குரு என்னும் ஒரு சாமியார் இருந்தார். அவருக்கு மட்டி, மடயன், பேதை, மிலேச்சன், மூடன் என்னும் ஐவர் சீடர் இருந்தனர். அவர்கள் குரு ஏவிய காரியங்களைச் செய்துகொண்டு அங்கிருந்த ஒரு மடத்தில் வசித்து வந்தார்கள். அவர்கள் ஆறு பேரும், பக்கங்களில் இருக்கும் கிராமங்களில் உள்ள மற்றச் சீடர்களை விசாரிப்பதற்காக ஒரு நாள் காலையில் எழுந்து கால் நடையாகச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும்போது இரவாயிற்று. மூன்றாஞ்சாமத்தில் ஓர் ஆற்றங்கரையை அடைந்தார்கள். அவர்கள் அதைக்கடந்துதான் ஊருக்குச் செல்ல வேண்டும். ஆனால், அதைக்கடக்க அவர்களுக்குப் பயமா

யிருந்தது. ஆதலால், குரு தம் சீடரை நோக்கி, "இது மிகவும் பொல்லாதது! மோசஞ்செய்வது! இது விழித்திருக்கும் வேளையில் சென்றால் நம்மை விழுங்கிவிடும்! ஆகையால், மிலேச்சனே, இந்த ஆறு தூங்குகிறதா, விழித்திருக்கிறதா என்பதைச் சோதித்துப்பார்," என்றார்.

2. குருவின் ஆணையைச் சிரமேற்கொண்ட மிலேச்சன், அவ்வமயம் சுருட்டுப் பற்றவைப்பதற்கு எடுத்த கொள்ளிக்கட்டையைக் கொண்டுபோய், ஆற்றின் கரையில் நின்று, அதைத் தண்ணீரில் தோய்த்தான். உடனே தண்ணீர் சுரீரென்று புகைந்தது. அதைக்கண்ட மிலேச்சன், பதறிப் போய்த் தவறிக் கீழே விழுந்து, பதைத்து நடு நடுங்கி, மெல்ல எழுந்து, ஆசிரியரிடம் ஓடி வந்து, அலறிக்குழறி, 'ஐயா, நதியைக் கடத்தற்கு இது சமயமன்று! அது விழித்திருக்கிறது! நான் அதைத் தொட்டவுடனே நஞ்சுள்ள கருநாகம் போலச் சீறிக் கொதித்துக் கோபித்து இரைந்து புகைந்து எழுந்து பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது! அதன் உக்கிரத்துக்கு இலக்காகாமல், உங்கள் பரம கிருபையினாலும், என்னைப் பெற்றவர் தவத்தினாலும் யான் உயிர் பிழைத்தேன்! மீண்டு வந்தது தெய்வச் செயல்!' என்று பகர்ந்தான். அதைக் கேட்ட குரு, திடுக்கிட்டுப் பெருமூச்சுவிட்டு, "அப்பா, தெய்வ சங்கற்பத்தை யாரறிவார்கள்! அஃது உறங்கு மட்டும் நாம் காத்திருக்க வேண்டும்," எனக் கூற, யாவரும் அங்கிருந்த ஓரிருண்ட சோலையில் தங்கி

யிருந்தனர். இரவைக் கழித்தற்பொருட்டு, அவ்வாற்றின் இயல்புகளைப்பற்றி ஒவ்வொருவராகச் சொல்லிக்கொண்டே வந்தனர்.

3. அவர்களுள் மட்டி என்பவன் தன் குருவை வணங்கி, “சுவாமி, இந்நதியின் தந்திரத்தையும், மோசத்தையும், குரூரத்தையும் குறித்து என் பாட்டனர் பல முறையும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். என் பாட்டனர் பெரிய வியாபாரியாயிருந்தவர். ஒரு நாள் உப்பு மூட்டைகளை ஏற்றிய இரண்டு கழுதைகளை நடத்திக்கொண்டு, அவரும் அவர் கூட்டாளியும் இந்த ஆற்றில் இறங்கினர். அது கோடை காலமாய் இருந்ததனல், அத்தண்ணீரில் அவர்கள் வெப்பம் நீங்கக் குளித்து, கழுதைகளையும் குளிப்பாட்டினர்கள். அக்கரை சென்று சேர்ந்தபொழுதுஉப்புமூட்டைகள்தைத்ததுதைத்தபடியே இருக்க, உள்ளிருந்த உப்பையெல்லாம் இந்த ஆறு ‘தோலிருக்கச் சுளை விழுங்கியைப்போல’த் தந்திரமாய்த் தின்றுவிட்டிருந்ததைக் கண்டார்கள். ஆனல், அதைக் குறித்து அவர்கள் அதிகம் வருந்தவில்லையாம். ஏன்? ‘இஃது உப்பைக் கொள்ளையடித்துத் தின்ற செருக்கினலே தான் நம்மை விழுங்காமல் விட்டுவிட்டது! உப்புப் போனல் போகிறது!’ என்று சந்தோஷத்தோடு வீடு திரும்பினர்களாம்,” எனக் கூறி முடித்தான்.

4. அச்சமயம் குதிரை ஏறி வந்தவன் ஒருவன் அவ்வாற்றிற்குச் சிறிதும் அஞ்சாமல் தண்ணீரில் இறங்கிச் சென்றான். அதைப் பார்த்த

வுடன் அவர்களுக்கு ஓர் எண்ணம் பிறந்தது: "நம் குருவிற்கும் ஒரு குதிரையிருந்தால், அவரும் பய மில்லாமல் ஆற்றில் இறங்கிச் செல்லலாம். நாமும் அவர் பின்னே துன்பமில்லாமல் செல்லலாம். எப் படியேனும் ஒரு குதிரை வாங்கிவிட வேண்டும்," எனத் தீர்மானித்து, அதைத் தங்கள் குருவிற்குத் தெரிவித்தார்கள். அவரும், "இதுவும் உண்மை தான். ஆனல், இக்காரியம் இப்போது நடவாது. பின்பு பார்க்கலாம். சீக்கிரம் மடத்திற்குப் போகவேண்டும் ஆதலால், ஆற்றின் தூக்கத்தைச் சோதித்து வாருங்கள்," எனச் சீடருக்கு உத்தர விட்டார்.

5. உடனே பழைய மிலேச்சனே விரைந்து சென்று, முன் தண்ணீரில் தோய்த்ததனல் அணைந்துபோயிருந்த கட்டையை மீண்டும் அதில் தோய்த்தான். அதில் புகை கிளம்பாமல் தணிந் திருந்தது. இதைக் கண்டதும் அவன் ஓடோடியும் வந்து, "குருவே, இதுதான் ஆற்றைக் கடப்பதற்கு நல்ல சமயம்! இச்சமயத்தை விட்டால் வேறு சம யம் கிட்டாது! சத்தமில்லாமல், தாமதியாமல், விரை வாக எழுந்து வாருங்கள்! ஆற்றுக்கு நல்ல தூக் கம்! இப்பொழுது நாம் பயப்படவோ பின்னிட வோ வேண்டுவதில்லை," என்று கத்தினன். இதைக் கேட்ட குருவும் மற்றச் சீடரும் விரைவாய் எழுந்து, வாய்பேசாமல் ஆற்றை வந்தடைந்தனர்; ஒருவரை யொருவர்சேர்த்துக்கட்டிக்கொண்டு, ஆற்றில்இறங் கித் தண்ணீரும் அசையாதவாறு மெல்லக் காலைத்

தூக்கித் தூக்கி ஒவ்வோர் அடியாகத் தண்ணீருக்குள் வைத்து நடந்தனர். அப்போதும் அவர்கள் நெஞ்சம் பதைபதைத்துக்கொண்டே இருந்தது. ஒரு விதமாகக் கரையை வந்தடைந்து, "அப்பா! பிழைத்தோம்!" எனப் பெருமூச்சு விட்டனர்; மகிழ்வினால் ஆடிப்பாடினர்.

6. அவ்வமயம் மூடன், "நாம் எல்லாரும் சரியாகக் கரை வந்து சேர்ந்தோமா என்று எண்ணிப் பார்க்கலாம்," எனச் சொல்லிக்கொண்டே தன்னை விட்டு மற்றவரை மட்டும் எண்ணினான். அதனால், ஐந்து பேரே எண்ணப்பட்டனர். அவன் குருவைப் பார்த்து, "அப்பப்பா! ஐயையோ! இஃதென்ன துன்பம்! ஒருவனை எப்படியோ ஆறு விழுங்கிவிட்டதே! அவன் ஆற்றோடு போய்விட்டானே! ஐவர் மட்டுந்தானிருக்கிறோம்!" என்று சொல்லிக்கொண்டே தேம்பித் தேம்பி அழுதான். அவனைக் கையமர்த்தி, இருப்பவரை வரிசையாக நிறுத்தி, ஒவ்வொரு சீடரும் தத்தம் விரல்களை விட்டு எண்ணிப்பார்த்தனர். ஒவ்வொருவனும் தன்னைக் கூட்டிக்கொள்ளாமலே எண்ணியதால், ஐந்து பேரே கணக்குக்கு வந்தனர். இறுதியாகக் குருவும் தம்மை விட்டுவிட்டே எண்ணி, ஐவரே இருப்பதாகத் தீர்மானித்தனர். 'ஆபத்தில்லாமல் ஆற்றைக் கடந்தோம்!' என்னும் ஆனந்தமெல்லாம் அவர்களை விட்டுப் பறந்து போய்விட்டது. எல்லாரும் குய்யோ முறையோ எனக் கத்தத் தொடங்கினர். ஆற்றின்மேல் அவர்களுக்கு அடக்க முடி

யாத கோபம் பொங்கி எழுந்தது. ஆதலின், அவர்கள், "ஓ! பாவியாறே! வஞ்சனையாறே! பரம சண்டாள நதியே! புலி போன்ற கொடிய ஆறே! இவ்வுலகமும் அவ்வுலகமும் வாழ்த்தி வணங்குபவரும், தவமனைத்தும் திரண்டு ஓருருவெடுத்ததென்னுமாறு தோன்றிப் பலர் பாவத்தையும் ஒழித்தருளுபவருமாகிய பரமார்த்த குருவின் உத்தம சீடனை ஒரு நொடிப்பொழுதிற் கொள்ளைகொண்டனையே! சிறிதும் இரக்கமின்றிக் கிழங்கு போல விழுங்கி விட்டனையே! அச்சமென்பது சிறிதுமின்றிப் பழம் போலப் புசித்துவிட்டனையே! உன் மனம் இரும்போ! கல்லோ! நீ பெண்ணுடனும் ஆணுடனும் பிறக்கவில்லையா! நீயும் உலகத்தில் நிலைத்திருப்பாயா! அண்டத்தளவும் அலையெறிவாயா! கடல் போல முழக்கிக் கரை புரள்வாயா! குளிர்வெண் முத்தங்கொழித்திடுவாயா! இனி நீ உண்ணீர் வற்றி, ஊற்றுக்கண் அடைபட்டு, பள்ளந்தூர்ந்து, வெள்ளம் மாறி, உள்ளம் வெதும்பி, உருவு தோன்றாமல் பாழாய்ப்போ!" என அவ்வாற்றைப் பலவாறு தூற்றியும் சபித்தும் பித்துப் பிடித்தாற்போன்று தாறுமாறாக வைதுகொண்டுமிருந்தார்கள். ஆனால், அவ்வாற்றுடன் போனவன் தங்களுக்குள் யாரென்றும், எப்பெயரைக் கொண்டவனென்றும் அவர்கள் அறிய முயலவேயில்லை. அவ்வாராய்ச்சியில் அவர்கள் மனம் செல்லவுமில்லை.

7. இவை யாவற்றையும் நோக்கிக்கொண்டிருந்த அறிவுடைய வழிப்போக்கன் ஒருவன்,

இவர்களது மூடத்தனத்தைத் தெரிந்துகொண்டு, தன்னுள்ளே சிரித்தவனாய், "இவர்களுக்குத் தக்க படி புத்தி கற்பிக்க வேண்டும்!" என்றெண்ணி, "நீங்கள் பேசுவதிலிருந்து உங்களுள் ஒருவரை இந் நதி உண்டுவிட்டதென்பது தெரிகின்றது! அவரைத் திரும்பவும் மீட்டுக்கொடுப்பது அசாத்தியமான காரியம்! இஃது என்னைத் தவிர வேறு ஒருவராலும் செய்ய முடியாது! நான் மந்திர வித்தையில் வல்லவன்! அதர்வண வேதத்தை நன்கு கற்றிருக்கிறேன்! அதில் யான் இட்ட பிச்சைதான் பிறர்க்குண்டு! யட்சணி, மோஹினி, குட்டிச்சாத்தான் முதலானவைகளையும் யான் வசப்படுத்தியுள்ளேன்! அவைகள் யான் சொன்னபடி ஆடும்! எனக்கு நீங்கள் நல்ல பரிசு கொடுப்பீர்களானால் ஆற்றோடே போனவரை அரைக் கணத்தில் அழைப்பேன்! அப்பொழுதுதான் என் வல்லமை உங்களுக்குத் தெரியும்," எனச் செப்பினான்.

8. அவன் வார்த்தைகளைக்கேட்ட குரு மிகவும் மகிழ்வடைந்து, "அப்பா, நாங்கள் வழியறியாது வருந்தும் போது நீ எங்கள் குலதெய்வம் போல வந்து தோன்றினை! நாங்கள் வழிபடும் தெய்வந்தான் உன்னை இங்கு அனுப்பியிருக்கும்! நீ செய்யப்போகும் இப்பேருதவிக்கு நாங்கள் என்ன பதிலுதவி செய்யப்போகிறோம்! உன் குருவிற்குப் புண்ணியமாகப் போகிறது! இதை எப்பிறப்பிலும் மறவோம்! எப்படியேனும் பெரிய மனம் பண்ணிக் காணாமற்போனவனை அழைப்பித்

துக் கொடுத்தால், எங்கள் வழிச்செலவிற்காக வைத்துக்கொண்டிருக்கும் நாற்பத்தைந்து பணத்தை உன்னிடம் சேர்பித்துவிடுகிறோம்! தயவு செய்ய வேண்டும்!" எனச் சொல்லி, அவனை வேண்டிக் கொண்டார்.

9. வழிப்போக்கன் தன் கையில் வைத்திருந்த இருப்புப் பூண் போட்டு வச்சிர உலக்கையைப் போன்று கனத்திருந்த தடியைக் காட்டி, "இதிலேதான் யான் உங்களுக்குச் சொல்லிய மந்திரம் இருக்கிறது. நீங்கள் வரிசையாக நின்று, முகஞ்சுளியாமல், மகிழ்வாகக் கடவுளைத் தொழுது, கண்களை மூடிக் குனிந்துகொண்டிருங்கள். இத்தடி உங்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வோர் அடி அடிக்கும். அப்பொழுது நீங்கள் தனித்தனியே உங்கள் பேரைச் சொல்லி எண்ணிக்கொண்டே வந்தால், நீங்கள் ஆறுபேரும் இருப்பதாகக் காண்பீர்கள்! இதுவே ஆறு கொண்டவரைக் கொணர்தற்கு வழியாகும்," என்றான். அதற்கு அவர்கள் மிக்க சந்தோஷத்துடன் சம்மதித்தார்கள்.

10. அம்மந்திரக்காரன் அவர்களை வரிசையாக நிறுத்தி, முதலில் குருவின் நடு முதுகில் அத்தடியால் பலமாக ஓர் அடி அடித்தான். அவர், "அப்பாடா! போதும்! போதும்! நான்தான் பரமார்த்த குரு," என்றார். அவர் 'ஒன்று' என்றார். இவ்வாறே அவன் ஒவ்வொருவர் முதுகிலும் ஓங்கி ஒவ்வோர் அடி அடிக்க, அவர்கள் துள்ளித் துடித்து, "நான் மட்டி; நான் மடயன்; நான் பேதை;

நான் மிலேச்சன்; நான் மூடன்,'' என்று சொல்லிக்கொண்டே ஓடினர். மந்திரக்காரன் எண்ணிக்கொண்டே வந்தான். ஆறு பேரும் குறையாமல் இருந்தனர். இதைக் கண்டதும் அவர்கள், "ஆற்றில் சென்றவனை அழைத்துவிட்டீரே! நீரே பெரியவர்!'' என்று அவ்வழிப்போக்கனைப் பலவாருகத் துதித்துப் புகழ்ந்து, அவனுக்குக் கொடுப்பதாகக் கூறிய பணத்தை அவிழ்த்துக் கொடுத்துத் தங்கள் கிராமத்தை நோக்கி நடந்தார்கள்.

அருஞ்சொற்பொருள் :

ஏவிய - கட்டளையிட்ட, மூன்றும் சாமம் - இரவு இரண்டுமணி முதல் நான்குமணி வரையும் உள்ள காலம், ஆணை - கட்டளை, பதறி - நடுங்கி, அலறி - கதறி, குழறி - உளறி, உக்கிரம் - கொடுமை, திடுக்கிட்டு - மனந்தடுமாறி, கூட்டாளி - உடன் சேர்ந்து வாணிபம் செய்பவன், செருக்கு - களிப்பு, கையமர்த்தி - அமர்ந்திருக்கக் குறிப்புக்காட்டி, தூற்றி - பழித்து, தாறுமாருக - குழப்பமாக, அதர்வணம் - நான்கு வேதங்களுள் கடைப்பட்ட வேதம், பரிசு - வெகுமதி, வச்சிர உலக்கை - வயிரம் ஏறின உலக்கை.

வினக்கள் :

1. குரு ஆற்றைப்பற்றி என்ன கூறினர்?

2. ஆறு தூங்குகிறதா என்பதை அறிய மிலேச்சன் செய்ததென்ன?

3. மிலேச்சன் என்ன நிலையை அடைந்தான்?

4. 'மட்டி' என்பவன் ஆற்றைக் குறித்துக்கூறிய கதை என்ன?

5. அவர்கள் ஆற்றை எம்முறையில் கடந்தார்கள்?

6. அச்சீடர் ஆற்றை ஏன் சபித்தனர்? எப்படி?

7. வழிப்போக்கன் எப்படித் தன்னைப் பெருமைப் படுத்திக்கொண்டான்?

8. குரு அவனிடம் கூறியவை யாவை?

9. வழிப்போக்கன் எப்படி ஆறு பேரும் இருப்பதாக அவர்களை அறியச் செய்தான்?

10. குரு சீடர்களைப்பற்றி நீ தெரிந்துகொள்வது என்ன?

## இலக்கணம்:

1. குற்றியலுகரத்திற்கும், முற்றியலுகரத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

2. ஒரு, ஆறு, எழுந்து, கோபித்து, மூச்சு, அஃது, இது, நடு, பரிசு, குரு, தொழுது—இவற்றுள் குற்றியலுகரத்தையும் முற்றியலுகரத்தையும் பிரித்தெழுதுக.

3. இடுகுறிப்பெயரின் இலக்கணம் என்ன? சில உதாரணங்கள் கூறுக.

## பயிற்சி:

1. உணர்ச்சிக் குறிகளை எங்கெங்கிடுவது மரபு? அவை இந்தப் பாடத்தில் எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் வந்துள்ளன?

2. வினா வாக்கியங்கள் நான்கு எழுதுக.

3. இரண்டாம் வேற்றுமையை ஏற்று வந்த சுட்டுச் சொற்களைக் காட்டுக.

4. மட்டி சொல்லிய கதையைச் சுருக்கி எழுதுக.

# 5. கொலம்பஸ்

1. "ஒருவர் புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பது எப்படி? அவருக்கு எத்தனை வீரமும் விடாமுயற்சியும் இருத்தல் வேண்டும்?" என்பவற்றைப்பற்றி அறிந்துகொள்ள நீங்கள் விரும்புவீர்கள். அத்தகைய ஆற்றல் வாய்ந்தவருள் ஒருவரே கொலம்பஸ் என்பவர்.

2. கொலம்பஸ் என்பவர் தாமினிகோ கொலம்போ என்பவரின் புதல்வர். கொலம்போ, கைத்தறி நெசவாளர். கொலம்பஸ் இளமையில் தம் தந்தையாருடன் இருந்து நெசவுத் தொழிலைச் செய்து வந்தார்; பின்பு மாலுமித் தொழிலைச் செய்து வந்தார். அவர் கி.பி. 1478-ஆம் ஆண்டு லிஸ்பன் என்னும் ஊரில் வாழ்ந்த பிரெஸ்ட்ரெல்லோ என்னும் மாதை மணந்தார். அப்பெண்மணி கப்பல் அதிகாரியாயிருந்த பார்த்தலோமியூ பிரெஸ்ட்ரெல்லோ என்பவரின் புதல்வியார். அவர் போர்ச்சுகீஸ் அரசருக்கு உயிர்த்தோழராயிருந்தது கொலம்பஸுக்குப் பல நன்மைகளை விளைவித்தது.



கொலம்பஸ்

3. போர்ச்சுகீஸியருக்குப் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆசை அதிகம். அத

ஞல், அவர்கள் அடிக்கடி கப்பலில் அயல் நாடு களுக்குச் சென்ருர்கள். அவ்வாறு சென்ற மக்கள், அக்காலத்தில் ஒருவரும் பார்த்திராத மனிதர்களையும், நூற்றுக் கணக்கான அடி உயரம் வளரும் பைன் மரங்களையும், 'அண்டீலியா' என்னும் மாயமான பூமி முதலியவற்றைப்பற்றிய விசித்திரமான வரலாறுகளையும் கொண்டுவந்தார்கள். அவர்கள் சீனுவின் பண்டங்கள், ஜப்பானின் பொன் மயமான வீட்டுக் கூரைகள், பிரஸ்தர் ஜான் என்னும் கிறிஸ்தவ மன்னரின் அளவற்ற செல்வம் முதலியவைகளின் கதைகளையும் புனைந்துரைத்தார்கள். அவை யாவும் கொலம்பஸ் மனத்தைக் கவர்ந்து, அவரை வெளி நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தின.

4. முன்னர்க் கூறியவாறு மக்கள் சொல்லிய யாவும் உண்மையென்றே கொலம்பஸ் நம்பிவிட்டார். ஆதலின், அவர், "தாம் அந்நாட்டுக்குச் செல்லும் போது, அண்டீலியாவைப் பார்த்தும், அங்குத் தம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியும், பிரஸ்தர் ஜானுடைய படையோடு சேர்ந்து அந்நாட்டிற்கும் தம்முடைய நாட்டிற்கும் ஒற்றுமை ஏற்படுத்தியும் தம்முடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணங்கள் பலவற்றை எண்ணிஞர். இவற்றை நடை முறையில் கொண்டு வருவதென்பது எளிய காரியமா?

5. இவ்வெண்ணங்கள் எவ்லாம் முற்றுப் பெறச் செய்ய வேண்டுமாயின், அவர் அயல் நாடு

களுக்குயாத்திரை சென்றே ஆகவேண்டுமல்லவா? அவ்யாத்திரைக்கு அளவற்ற பொருளும், ஆட்களும், அரசரின் ஒத்துழைப்பும் வேண்டியிருந்தன. அவர் முதலில் இரண்டாம் ஜான் மன்னரிடம் சென்று, பிற நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்குத் தாமே அதிகாரியாய் இருக்க வேண்டுமென்றும், அந்நாட்டில் கிடைக்கும் பொருளில் பத்தில் ஒரு பங்கு தமக்கே சேரவேண்டுமென்றும் தெரிவித்தார். அவற்றிற்கு அம்மன்னர் ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு ஆர்கான் இளவரசரான பர்டினண்டு காஸ்டைல், சீமாட்டியாராகிய இஸபெல்லா ஆகிய அவ்விருவருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றார். 1492-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், பதினேழாம் நாள், அவ்விருவரும் கொலம்பஸூம் சேர்ந்து ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். ஆகஸ்டு மாதம் மூன்றும் தேதி, கூலியாட்கள், சமையற்காரர்கள், மாலுமிகள் ஆக எண்பத்தேழு பேர் சேர்ந்து மூன்று கப்பல்களில் பல்லாஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்டனர்.

6. அப்பிரயாணத்தில் நாட்கள் பல சென்றும், அவர்கள் ஒரு கடற்கரையையும் காணவில்லை. கப்பல் மாலுமிகள் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். ஆனல், கொலம்பஸ், தம்முடைய ஆளும் வன்மையாலும், யாவருடனும் அன்பாகப் பழகும் தன்மையாலும் அவர்களுடைய கலகத்தை அடக்கி, அவர்களை அமைதிக்குக் கொண்டுவந்தார். இறுதியில் 1492-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 12-ஆம்

நாள் பௌர்ணமி நிலவில் இறைவனருளால்கொலம்பஸ் ஒரு கரையைக் கண்டார். உடனே அவர் தம் கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டு, “இதோ வந்துவிட்டது நிலம்!” எனச் சத்தமிட்டார்; கரையில் இறங்கி அதற்குச் சான்செல்வடார் என்னும் பெயரைச் சூட்டி, தரையின்மேல் முழங்காலிட்டு அமர்ந்து நிலத்தை முத்தமிட்டு, அந்நிலத்தை அரசர் பெயரால் தமதாக்கிக்கொண்டார். அங்கிருந்த மக்கள் கொலம்பஸை அன்புடன் வரவேற்றார்கள்.

7. கொலம்பஸ் அந்த இடத்தில் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக் கியூபா என்னும் தீவைக் கண்டுபிடித்தார். அதில் ஏராளமான பொன் கிடைக்கும் என எண்ணியிருந்த அவருடைய மனக்கோட்டை இடிந்தது. அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அம்மக்கள் பேசும் மொழியையும் அவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

8. இறுதியில் கொலம்பஸ் நாற்பத்திரண்டு ஐரோப்பியருடனும், பன்னிரண்டு உள்நாட்டு மக்களுடனும் ஸ்பெயின் தேசத்துக்குத் திரும்பினர். அவரை ஸ்பெயின் நாடு மிக்க மதிப்புடன் வரவேற்றது. அவர் தம்முடன் கொண்டுவந்த அயல் நாட்டுக் கிளிகள், மிருகங்கள், புஷ்பங்கள், செடிகள் முதலியவை ஸ்பெயின் தேசத்தில் ஒரு விதக் கிளர்ச்சியை உண்டாக்கின.

9. கொலம்பஸ் இரண்டாம் முறை 1493-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்களில் மறுபடியும் தாம் முன் கண்டுபிடித்த தீவுக்குச் சென்று, மற்றுஞ்

சில தீவுகளைக் கண்டுபிடித்து, 1496-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உடல் நலம் மிகக் குறைந்து ஸ்பெயின் திரும்பினர்.

10. மற்றும் இரு முறை அவர் மேற்கூறிய தீவிற்குச் சென்று, சில புதிய இடங்களைக் கண்டு பிடித்து, ஊர் திரும்பி, 1506-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

11. அவர் அமெரிக்கா என்னும் புதிய உலகத்தைக் கண்டுபிடித்துப் பழைய உலகத்தைப் பற்றிய அறிவை ஊட்டினர். ஆதலால், அவர் பெயர், நாடு கண்டவர்களுள் முன்னணியில் நிற்கின்றது.

### அருஞ்சொற்பொருள்:

புனைந்துரைத்தல் - சிறியதைப் பெருக்கியும் பெரியதைச் சுருக்கியும் கூறுதல், உடன்படிக்கை - சம்மதிப்பத்திரம், துறந்தார் - நீங்கினர்.

### வினாக்கள்:

1. கொலம்பஸ் வெளி நாடுகளைக் கண்டுபிடித்தற்கு அவரைத் தூண்டியவை யாவை?

2. கொலம்பஸ் எண்ணிய அரிய காரியங்கள் யாவை?

3. பர்டினண்டோடும், இஸபெல்லாவோடும் கலந்து கொலம்பஸ் செய்துகொண்ட ஒப்பந்தம் யாது?

4. கொலம்பஸ் கரையைக் கண்டவுடன் செய்தவை யாவை?

5. அவர் சான்செல்வடாரில் கண்டுபிடித்த தீவு யாது? அவர் அங்கிருந்து ஸ்பெயினுக்கு வந்தபோது தம்முடன் கொண்டு வந்தவை யாவை?

6. கொலம்பஸ் எத்தனை முறை எந்தெந்த ஆண்டில் புதிய தீவிற்குச் சென்றார்? சென்றதனால் அவர் அடைந்த பயன் என்ன?

பயிற்சி :

1. உயிரீற்றுப் புணர்ச்சியை விளக்கி இரண்டு உதாரணங்கள் தருக.

2. ஆரம்பபத்தியை உன் சொந்த வார்த்தைகளால் சுருக்கிக் கூறுக.

3 கொலம்பஸின் விடாமுயற்சி, வல்லமை ஆகிய இவற்றைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

# 6. வீரப் பெண்மணிகள்

1. அவ்வப்போது நம் நாட்டில் உண்டாகும் சண்டையில் வீரத்துடன் போர் செய்கின்றவர் எவரோ, அவரையே நாம் வீரர் என்று சொல்லுகிறோம். அன்றியும், பிறருக்கு வீரத்தையூட்டி அவரைப் போருக்கு அனுப்புபவரும் வீரரேயாவர். இத்தகைய வீரர் முற்காலத்தில் பெண் மக்களுள்ளும் சிலர் இருந்தனர். அவர்கள், தாங்களே சண்டைக்குப் போகாவிடினும், நாட்டில் போர் உண்டாகுமாயின், தங்கள் தகப்பன், கணவன், மகன் முதலியவர்களுக்கு வீரத்தை ஊட்டி, போருக்கு அனுப்புவார்கள்; தங்கள் மக்களுக்குத் தாங்களே போர் உடை உடுத்து வீரத்துடன் போர் செய்யும்படி அறிவு புகட்டுவார்கள்; வாளை எடுத்துக் கையிற்கொடுத்துப் போர் முறைகளைச் சொல்லிப் புறமுதுகிடுதல் இழிவு என்பதை அவர்களுக்கு வற்

புறுத்துவார்கள். தங்கள் உறவினர், பகைவர் நேர் நின்று சண்டை செய்து, மார்பில் அம்பேற்று இறப்பின், அவர்கள் மகிழ்விற்கு ஓரளவிராது. தங்கள் சுற்றத்தார் தங்களைப் பிரிந்து இறந்துபடுதல் தங்களுக்குத் துன்பந் தருவதேயாயினும், அவர்கள் வீரங்கண்டு, மங்கையர்கள் மனம் மகிழ்வார்கள். நம் தமிழ் நாட்டில் இத்தகைய வீரத் தாய்மார் பலரிருந்தனர் என்பதை நாம் சங்க நூல்களைப் படித்தறிகின்ரேம். அவருள் சிலரைப்பற்றியேனும் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது அவசியமாகும்.

2. ஒரு வீரத் தாயார் வாழ்ந்து வந்த ஊரில் போர் தொடங்கியது. நான்கு புறமும் பகைவர் சூழ்ந்துகொண்டனர். அவ்வூர் அரசன், இளையவர், முதியவர், பிணியுற்றவர், பெண்டிர் முதலியவரை ஊரை விட்டுச் செல்லுமாறும், போர் புரியக் கூடியவர் போர்க்களத்திற்குப் புறப்படுமாறும் பறையறைவித்தான். அவ்வீர மங்கையரின் தந்தையார் உடனே போருக்குச் சென்ருர். அவர் யானைப் படையுடன் போரிட்டு, இறுதியில் வீர சுவர்க்கஞ்சென்ருர்.

3. அதைக்கேட்ட அவ்வீர மங்கையர் தந்தையரை இழந்த துக்கத்தில் ஆழ்ந்துவிடவில்லை; உடனே தம் கணவரைப் போருக்குச் செல்லத் தூண்டினர்; அவருக்கு ஊக்கந் தரத்தக்க வார்த்தைகளையும் கூறினர். அவர் இயல்பாகவே வீரராயிருப்பினும், தம் மனைவியார் கூறிய வார்த்தைகள் அவரைப் பெரிதும் உற்சாகப்படுத்தின. அஞ்

சாப் போர் வீரரான அவர், போர் உடையுடுத்து, ஆயுதங்களைக்கொண்டு கம்பீரமாகப் புறப்பட்டார். மனைவியாரும் மகிழ்வுடன் விடை கொடுத்தனுப்பினர்.

4. அவ்வீரர் பகைவரைத் துரத்தியடித்தார்; பலரைக் கொன்று குவித்தார்; பலரை முதுகிட்டு ஓடச்செய்தார். அவர் போர்த் திறமையைக்கண்டு யாவரும் மகிழ்ந்தனர். அவரது வாளுக்கிரையான யானைகளும் குதிரைகளும் கணக்கற்றன. அவர் உயிர் போகுமட்டும் சோர்வடையாது நின்று யுத்தஞ்செய்தார்; இறுதியில் உயிர் துறந்து வீர சுவர்க்கம் அடைந்தார்.

5. இச்செய்தி வீர மங்கையரை வருத்தாமலில்லை. ஆயினும், தம் கணவர் வேறு வகையில் இறவாமல், போர் முனையில் உயிர்விட்டது அவ்வீர மங்கையருக்குச் சிறிது ஆறுதலையளித்தது. "மக்களுக்கு ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. யாவரும் என்றேனும் ஒரு நாளைக்கு இறக்கவேண்டுபவரே. ஆயினும், அது சிறந்த மரணமாய் இருக்கவேண்டுமே! நம் நாட்டிற்காகப் போர் செய்து, பகைவரை முறியடித்து, வீரப் போர் புரிந்து உயிர் விடுதல் நல்ல மரணமன்றோ? அத்தகையவருக்கு வீர சுவர்க்கமன்றோ கிடைக்கும்!" என அவர் மகிழ்வடைந்தனர்.

6. மறு நாளும் போர்க்களத்தில் பகைவரின் பறையோசை கேட்டது. அதனால், போர் முடியவில்லை என்பதை அவ்வீர மங்கையர் தெரிந்து



மகனைப் போருக்கனுப்புதல்

கொண்டார். அவருக்கு ஒரே மகன் உண்டு. அவன், நெடுங்காலம் பிள்ளை இல்லாமல் இருந்து, தவத்தினால் பெறப்பட்டவன்; மிக்க அன்புடன் வளர்க்கப்பட்டவன். அவ்வீரத் தாயார் மனம் இவற்றை எல்லாம் எண்ணவில்லை. "நமது நாட்டிற்குச் சண்டை வந்துள்ளது. நம்மவர் தம்மாலான மட்டும் போர் புரிந்து வீரராய் ஒளிரவேண்டும்," என்னும் ஒரே நினைவுதான் அவருக்கிருந்தது. நாட்டிற்காக வீரப்போர் செய்வதற்குத் தமக்கு ஒரு மகன் இருப்பதை நினைத்து அவர் மகிழ்ந்தார்; அவனுக்குத் தாமே வெண்மையான உடைகளை உடுத்

தார்; எண்ணெய் தடவித் தலையைச் சீவி முடித்தார்; (வில்லொடு) வேலை எடுத்து அவன் கையில் கொடுத்தார்; சில வீர மொழிகளைக் கூறி, அவனை ஊக்கப்படுத்திப் போருக்கு அனுப்பினர். அஃதல்லவா வீரம்! அவரல்லவா வீர மாதரார் எனக் கூறத் தகுந்தவர்! அவரைப்பற்றிப் புறநானூறு என்னும் பழைய தமிழ் நூலிற் சொல்லப்பட்டிருக்கிறது.



தாய் தன் மகனைச் சோதித்தல்

7. அக்காலத்தில் மற்றொரு தாயார் இருந்தார் அவர் முதியவர். அவர் கூந்தல் வெள்ளிக் கம்பி போல நரைத்திருந்தது; தோல் சுருங்கியிருந்

தது. அவருக்கு ஒரே மகன் இருந்தான். நாட்டில் போர் ஏற்பட்டது. உடனே அவர் தம் மகனுக்கு ஊக்கம் ஊட்டி, அவனைப் போர்களத்துக்கு அனுப்பினர். அவன் அங்கு வீரப் போர் புரிந்து உயிர் துறந்தான். சிலர் அவன் மரணத்தை அறிந்து வந்து மூதாட்டியாரிடம், “உம் மகன் சண்டையில் முதுகிட்டு ஓடி இறந்தான்!” எனக் கூறினர். அச்சொல் அவரைத் திடுக்கிடச் செய்தது; அவருக்குக் கோபத்தை மூட்டியது. “ஆ! என் மகனு கோழையைப்போல முதுகிட்டான்! அவனு பகைவரை எதிர்த்து நின்று போர் புரிய வன்மையற்றுப் போனன்! அவனைப் பெற்றதனல் என்ன பயன்! யான் இப்போதே போர்க்களத்துக்குச் சென்று பார்ப்பேன்! இவர்கள் சொல்லியது உண்மையாயின், அவனுக்குப் பாலூட்டிய என் மார்பை இவ்வாளால் அறுத்தெறிவேன்!” எனத் தம் முதுமையையும் பாராமல், வாளைக் கையில் தாங்கிப் போர்க்களத்திற்குச் சென்றார்.

8. அங்குப் பிணங்கள் குவியல் குவியலாய்க் கிடந்தன. மூதாட்டியார் தம் மகனைக் காண, வாளால் அப்பிணங்களைத் தள்ளித் தள்ளிப் பார்த்தார்; தம் மகனது உடலைக் கண்டார்; அதை நன்ருகத் திருப்பித் திருப்பி நோக்கினர். மகன் மார்பில் அம்பு பாய்ந்திருந்தது. தம் மகன் பகைவர் முன்நின்று போர்புரிந்து மார்பில் அம்பேற்று இறந்தான் என்பதை அறிந்ததும் அவருக்கு அணை கடந்த ஆனந்தம் உண்டாயது. குதித்தார்! நகைத்

தார்! பாடினர்! "இவ்வீரனல்லவா என் மகன் என்பதற்குத் தகுந்தவன்! இதைக்காட்டிலும் எனக்கு வேறு பேறு யாது? இப்பொழுதல்லவோ இவனைப் பெற்றதனால் ஆகிய பயனை அடைந்தேன்!" எனப் பல சொல்லி அவனைப் பெற்ற காலத்தினும் பெரிதும் மகிழ்ந்தார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்னும் திருக்குறளை இங்கு நோக்க வேண்டும். இத்தகைய வீர மகளிரல்லவா முற்காலத்தில் நம் நாட்டை அலங்கரித்தனர்!

## அருஞ்சொற்பொருள்:

வற்புறுத்தல் - உறுதிப்படுத்தல், சங்கநூல் - சங்க காலத்தில் பல புலவர்களால் செய்யப்பட்ட நூல்கள், இயல் - சுபாவம், ஆவி - உயிர், துறந்து - நீங்கி, ஆறிலும் - ஆறு வயதிலும், நூறிலும் - நூறு வயதிலும், முறியடித்து - தோல்வியுறச்செய்து, வீர சுவர்க்கம் - வீரப் போர் புரிந்து இறந்தவர் அடையும் ஓர் இன்ப உலகம், அணை கடந்த - எல்லை நீங்கிய, உவக்கும் - மகிழ்வள், சான்றோர் - கல்வி கேள்வி முதலிய ஒழுக்கங்களில் சிறந்த நற்குண மக்கள்.

## வினக்கள்:

1. சிலர் 'வீர மாதர்' எனப் பெயர் பெற்றதற்குக் காரணம் என்ன?

2. தம் மகன் முதுகு காட்டி இறந்தான் எனக் கேட்ட போது வீரத் தாயார் சொல்லியவை யாவை?

3. அவர் தம் ஐயத்தைப் போக்கிக்கொள்ள என்ன செய்தார்?

4. இறுதியில் அவர் கண்டது என்ன?

### இலக்கணம்:

1. 'உடம்படுமெய்' என்பது என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

2. அதற்கு இப்பாடத்திலிருந்து இரண்டு உதாரணங்கள் எடுத்துக் காட்டுக.

3. எங்கெங்கு வல்லினம் மிகும்? வல்லினம் மிக்க தொடர்கள் நான்கை எழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

### பயிற்சி:

1. புறம், புரம் - வாள், வால் - இறந்து, இரந்து - அறிந்து, அரிந்து - அவன், அவண்: இவற்றிற்குப் பொருள் கூறுக.

2. இத்தகைய, அம்பேற்று, போரிட்டு, பன்னுட்கள், பாலூட்டி - இவற்றைப் பிரித்தெழுதுக.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்க:—

கடவுள் யாவருக்கும் — புரிவார்.
உடற்பயிற்சி மக்களுக்கு — தரும்.
கற்கக்கற்க — மிகும்.

4. நரை மூதாட்டியாரைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

# 7. மலையா நாடு

1. மலையா என்பது ஒரு தீபகற்பம். அது வடக்கில் சையாமையும் மற்ற மூன்று பக்கங்களி லும் கடலையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

2. அங்நாட்டார் ரொட்டி முதலியவற்றை மிகுதியும் உண்கின்றனர். அவர்கள் கொள்ளும் அரிசி உணவு மிகக்குறைவு. பழ வகைகளிலும், சிற்றுண்டிகளிலும் அவர்களுக்கு விருப்பம் அதிகம். அங்குள்ள சீனர்கள் குறைந்தது இரண்டு மணிக் கொருமுறை உண்பார்கள். பெரும்பாலார் மாமி சம் புசிப்பர். சமைத்த மாமிசம் முதலிய யாவும் வீதியில் வந்து விற்கும். உண்பதற்குத் தனி இடத் தையோ, நேரத்தையோ அவர்கள் பார்ப்பதில்லை. வீதியில் ஆங்காங்கே ஒரு மேசையும், சில நாற் காலிகளும் போடப்பட்டிருக்கும். அவர்கள் விரும் பிய போது தெருவில் கிடைக்கும் பண்டங்களை வாங்கி, அம்மேசையின்மேல் வைத்துச் சாப்பிடு வார்கள். அவர்கள் உட்கொள்ளும் உணவு மிகச் சூடாயிருக்கும். அஃது அவர்கள் வாயில் நுழையும் போது ஆவி கிளம்பும். பண்டங்களைப் பீங்கானில் வைத்து, சிறு குச்சியினால் வாயில் தள்ளுவார்கள். விற்பவனே அவற்றைத் தருவான். இரவு பன்னி ரண்டு மணிவரையும் அப்பண்டங்கள் தெருத்தெரு வாய் விற்கப்படும். ஆதலால், வீட்டில் சமைக்கும் வேலை அதிகமாக அவர்களைச் சார்தல் இல்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளையும் இப்படியே பழக்குகிறார்கள்.



மலேயா நாட்டிலுள்ள வீடுகள்

3. அந்நாட்டிலுள்ள சீனர், மலாய்க்காரர், ஆங்கிலேயர் முதலிய யாவரும் வீட்டில் இருக்கும் போது இடுப்பிற்கைலியும், மேலே சிப்பாவும் அணிந்திருப்பர். வெளியில் செல்லுங்கால், ஆடவர் ஆங்கிலேயரைப்போன்றே உடைதரிப்பர். சில சீனப்பெண்டிர், ஆடவர்களைப்போன்றே காற்சட்டை, மேற்சட்டைகளைப் போட்டுக்கொள்ளுவர். அதனால், சில போது இருபாலாருக்கும் வேறுபாடு காணப்படுவதில்லை. மலேயாப் பெண்கள் வீட்டிலிருக்கும்போது கைலியும், ஜாக்கெட்டும் தரித்திருப்பார்கள்; வெளியே போகும் போது தாவணி போன்ற ஒரு துண்டை மேலே போட்டுக்கொள்ளுவார்கள். சீனர் பெரும்பாலும் கறுப்புப் பட்டாடையே உடுப்பர். மற்றவர் பல நிறமுள்ள நூல் துணிகளைப் பயன்படுத்துவர். எவ்வாறாயினும்,

அவர்கள் உடை அழுக்கற்றனவாயும் அழகுடையனவாயும் இருக்கும். தொழிலாளரும் இவ்வித உடையை உடுப்பர். ஆதலின், அவ்வூரில் உடையினால் மக்கள் வேற்றுமையை அறிதல் அருமை.

4. ஏழை வீட்டுச் சிறுவரும் காற்சட்டை மேற்சட்டையோடு இருப்பர். இந்தியப் பெண்டிர்மட்டும் புடைவை உடுக்கின்றனர். அவர்களுள் செருப்பு அணியாதவரைக் காண முடியாது. அவர்கள் சாப்பாட்டு அறையிலும் மிதியடி போட்டுத்தான் உலவுவார்கள். உடையின்பொருட்டு ஆகும் பணச் செலவை அவர்கள் கவனிப்பதில்லை. அவர்கள் வருமானத்திற் பெரும்பகுதி உணவிற்கும் உடைக்கும் செலவாகும். இந்தியரைப்போன்று அவர்கள் பல நகைகளை அணிவதில்லை. தங்கநகைகள் சிலவற்றை அவர்கள் விரும்புகிறார்கள். செல்வர் தங்கக் காப்பைக் காலில் அணிவர்.

5. மலையாநாட்டின் பழங்குடிகள் மலாய்க்காரர்களே. அந்நாட்டில் வந்து குடியேறினவர் சையாம், சிலோன், பர்மா, ஜப்பான், ஜாவா முதலிய தேசத்தவர். அங்குச் சுற்றுப்புறமுள்ள காடுகளில் நீலகிரியிலுள்ள தோடர்களைப்போன்ற நாகரிகமற்றவர் சிலர் இன்னும் வசிக்கின்றனர். சீனர்களுக்குரிய புத்தர் கோயில்களுக்கு வருகின்றவர், முழுக்கோழி வாத்து முதலியவற்றை அவித்து, மசாலையும் சேர்த்துக்கொண்டு வந்து, புத்தருக்கு நிவேதனம் செய்கின்றனர். புத்தர் கொள்கைக்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது என்பதை யாவரும் அறிவர்.

6. அந்நாட்டு மக்களுக்கும், அந்நாட்டில் பல தலைமுறையாக வாழ்கின்றவருக்கும், அவண் குடியேறியிருப்பவர்க்கும் சிலவற்றில்மனநிலை ஒருமைப்பட்டுள்ளது. அந்நாட்டினர் உடலுக்கென உண்ணல், உடுத்தல், உலாவல், பல இன்பங்களைத் துய்த்தல் முதலியவற்றிற்கே தம் காலமும் பணமும் பெரிதும் வகுக்கப்பட்டுள்ளன எனக் கருதுவதாகக் காணப்படுகிறது. நம் நாட்டாரும் அங்குச் சென்றவுடன் அவர்களைப்போன்றே நடக்க முற்படுகின்றனர்.

7. அந்நாட்டிலுள்ள சீனர், சுறுசுறுப்புடையவர்; நுட்பமதியுடையவர்; புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பதிலும், எந்த இடத்தில் எந்தப் பொருள் கிடைக்கும் என ஆராய்வதிலும் ஊக்கமுடையவர். அவருட்பெரும்பாலார் வியாபாரஞ் செய்பவர். அங்குப் பெரிய செல்வருள் பலர் சீனரே. அவர்கள் ஏழைகளாய்விடினும், மனம் சோர்வடைவதில்லை; திரும்பவும் உழைத்துப் பொருள் தேட முயல்வார்கள். அவர்களுடைய இனத்தாரும் அவர்களை ஊக்கப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவருவார்கள். இந்தியத்தொழிலாளனை விடச் சீனத்தொழிலாளன் இரு மடங்கு வேலை செய்து அதிக கூலி பெறுவான். ஆனால், மலாய்க்காரர் சோம்பலுடையவர். அவர்கள் வறுமையுற்றேவாழ்கின்றார்கள்.

8. அந்நாட்டில் கீழ்த்தரப் பாடசாலைகளும், மத்தியதரக் கல்விச்சாலைகளும், உயர்தரக் கலா

சாலைகளும் உள்ளன. மலாய்க்காரருக்கும், மற்றவர்களின் ஏழைக் குழந்தைகளுக்கும் இலவசப் படிப்புக் கற்பிக்கப்படுகிறது. பள்ளிச்சம்பளம் நம் நாட்டைவிட அதிகம். ஒவ்வொரு குழந்தையின் பிறந்த தேதி மாத வருடக்குறிப்புக்களை நகராண்மைக் கழகத்தாரிடமிருந்து வாங்கித் தர வேண்டும். மலாய்க்காரருக்கென ஏற்படுத்தியுள்ள ஒரு கல்லூரியிலேதான் மலாய மொழி கற்பிக்கப்படுகிறது. மற்ற எந்தப் பள்ளிக்கூடத்திலும் தாய்மொழி கற்பிக்கப்படுவதில்லை. முதல்மொழி ஆங்கிலமே. அந்நாட்டு ஆடவர் பெண்டிர் இருபாலருள்ளும் எழுதப்படிக்கத் தெரியாதவர் சிலரே. ஆதலால், அம்மக்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொள்ளுகிறார்கள். மருத்துவத்திற்குத் தவிர, இஞ்சினீயரிங்கு முதலியவற்றிற்குக் கல்விச்சாலைகள் அங்கு இல்லை. பள்ளிக்கூட நேரம் காலை எட்டுமணி முதல் பகல் ஒரு மணி வரையுந்தான். ஒவ்வொரு நாளும் அங்கு மாலையில் மழை பெய்வதாற் பிற்பகலில் அங்குப்பாடசாலைகள் நடத்துவதில்லை. கல்வி கல்லாத வாலிபருக்கு இராப்பள்ளிகள் உண்டு. தொழிலாளரின் குழந்தைகளுக்கு இலவசப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், அந்நாடு நம் நாட்டிலிருந்து வேறுபட்டுள்ளது.

## அருஞ்சொற்பொருள்:

சிற்றுண்டி - (சிறு + உண்டி) இலேசான உணவு,
கைலி - மகம்மதியர் உடுத்திக்கொள்வதைப்போன்ற ஒரு

வகை உடை, நுட்பமதி - கூர்மையான அறிவு, கீழ்த்தரப் பாடசாலை - முதல்வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலை, மத்தியதரக்கல்விச் சாலை - முதல்பாரம் முதல் மூன்றும்பாரம் வரையுள்ள பாடசாலை, உயர்தரக் கல்லூரி - நான்காம் பாரம் முதல் ஆறும் பாரம் வரை உள்ளது.

## வினுக்கள் :

1. மலேயா நாட்டினர்க்கு ஏன் சமைக்கும் வேலை அதிகம் இருப்பதில்லை?

2. அந்நாட்டு மக்களின் உடையைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

3. புத்தர் வழிபாட்டைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

4. சீனருக்கும் மலாய்க்காரருக்கும் உள்ள வேறுபாடு யாது?

5. அத்தேசத்தின் கல்வித்துறை எவ்வாறுள்ளது?

## இலக்கணம் :

1. மக்கள், நகைகள், நூல், சீனர், பெண்கள்— இவற்றிற்கு இலக்கணம் கூறுக. (திணை, பால், எண், இடம், வேற்றுமை.)

## பயிற்சி :

1. ஆடவர், தொழிலாளி, மருத்துவன், சிறுமியர் - இவற்றிற்கு எதிரிடையான பால்களைக் கூறுக.

2. நான்கு அஃறிணை முடிபுகளை எடுத்துக் காட்டுக.

3. ஏழாம்பத்தியின் முதல் வாக்கியத்தை உண்டு என்னும் சொல்லால் முடிக்க.

4. கல்வி கல்லாத வாலிபருக்கு இராப்பள்ளிகள் உண்டு - இந்த வாக்கியத்தை உயர்திணை வாக்கியமாக்குக.

5. நுட்பமதி - இதைப்பொருத்தி ஒரு கலப்பு வாக்கியம் எழுதுக.

6. மலையாநாட்டு மக்களின் உணவைப்பற்றி இருபது வரிகளில் எழுதுக.

7. அவர் உடைகளைப்பற்றி உன் கருத்தைத் தெரிவிக்க.

8. சீனர், மலாய்க்காரர் இவர்களைக் குறித்து நீ அறிந்துகொண்டதை இருபது வரிகளில் எழுதுக.

# 8. அசோகரின் அன்பு உள்ளம்

1. இந்தியா ஒரு பெரிய தேசம். இது பல இராச்சியங்களாகப் பிரிவுபட்டிருக்கிறது. அப்பிரிவுகளுள் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் அரசர் ஆட்சி புரிந்து வந்தனர். ஆயினும், பல பிரிவுகளையும் தாமே ஆண்டு வந்த பேரரசரும் நம் நாட்டில் உண்டு. அவர்களுள் ஒருவரே அசோக சக்கரவர்த்தியார். இவர் கி. மு. 273ல் முடி சூட்டிக்கொண்டார். இவர் தந்தையார், பாட்டனர் முதலியவர்களும் பேரரசர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வட இந்தியாவையும், தென்னிந்தியாவிற் பெரும்பகுதியையும் ஆண்டு வந்தார்கள்.

2. அசோகர் ஆளுகைக்கு இந்தியாவில் தெற்குக் கோடி தவிர, மற்றவையெல்லாம் உட்பட்டிருந்தன. இன்னும் பல நாடுகளையும் வென்று தம் வசப்படுத்தவேண்டும் என்பது இவர் எண்ணம். இவருக்குப் பாடலி புத்திரம் தலைநகரமாயிருந்தது. தம் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் அசோகர் கலிங்க



அசோகர்

நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். அங்குப் பெரும்போர் நடந்தது. இரு திறத்தினர் சேனையிலும் பலர் உயிர் துறந்தனர்; பலர் உறுப்பிழந்தனர். இறுதியில் அசோகருக்கே வெற்றி கிடைத்தது. அக்களிப்பினால் வீரர்கள் தாங்கள் செய்வது இன்னதெனத் தெரியாமல், பல கொடிய செயல்களைப் புரிந்தார்கள்: கலிங்க நாட்டிற்குள் நுழைந்து சூறையாடினார்கள்; பெண்களையும், குற்றமற்ற குழந்தைகளையும் தங்கள் வாளுக்கிரையாக்கினார்கள்; பல அழகிய இடங்களையும் அழித்தார்கள்.

இவை யாவற்றையும் அசோகர் அருகிலிருந்து கண்டார். இக்கொடுமைகள் இவர் மனத்தை வருத்தின. ஆதலின், இவர் பின் வருமாறு சிந்திக்கத் தொடங்கினர்:

3. "ஓர் அரசன் தனக்கிருக்கும் நாட்டுடன் வாழத் திருப்தியுறாமல், பிறருடைய நாடுகளையும் பெறவேண்டும் என்னும் பேராசையினால் எத்தனை பேருக்கு எத்தனை துன்பங்களை உண்டாக்குகிறான்! எத்தனை உயிர்கள் மாய்கின்றன! எத்தனை பேர் உறுப்புக்களை இழக்கின்றனர்! எத்தனை பெண்டிர் கணவரையும், பிள்ளைகளையும் இழந்து பரிதவிக்கின்றனர்! எத்தனை இடங்களும், பொருள்களும் அழிகின்றன! ஓருயிரை உண்டாக்க நம்மால் முடியுமா? ஓர் அழகான இடத்தை அமைக்க எத்தனை நாட்களும் எவ்வளவு பொருளும் வேண்டும்! இவ்வளவையும் நம் படைகள் ஒரு விநாடியில் அழித்துவிட்டனவே! கலிங்க நாடு கலக்கமுற்ற நாடாகிவிட்டதே! இத்தனை நஷ்டத்திற்கும், துன்பத்திற்கும், தீமைக்கும் நாமல்லவோ காரணம்? இக்குற்றத்தை எப்படிப் போக்கிக்கொள்வது? இதற்குப் பரிகாரம் என்ன? நாம் இப்பாவத்திலிருந்து நீங்குவது எவ்வாறு? கருணாநிதியே, நீ இக்குற்றங்களைப் பொறுத்தருள்வாயாக!" எனக் கருதிப் பதறினர்.

4. அசோகர் மனநிலை மாறிவிட்டது. இவர் ஜனகரைப் போன்று ராஜரிஷி ஆனர். இனிப் பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் காரியங்களை

மேற்கொள்ளுவதில்லை எனவும், பிற நாடுகளைக் கைப்பற்ற ஆசை கொள்வதில்லை எனவும் உறுதி கொண்டார்.

5. இவரது சம்ஸ்தானத்திற்கு அருகில் பல சிறு இராச்சியங்களும், தெற்கே சேர சோழ பாண்டி நாடுகளும், சிங்களம் என்னும் தீவும் இருந்தன. அவற்றை இவர் கைப்பற்ற நினைத் திருப்பரேல், இவருக்கிருந்த தோள் வலியாலும், படை வலியாலும் அச்செயலை எளிதில் முடித் திருக்கலாம். ஆனல், அதில் இவர் மனத்தைச் செலுத்தவேயில்லை. அவ்வரசர்களிடம் இவர் மிக்க நட்பு பாராட்டி வந்தார்.

6. அக்காலத்தில் அசோக சக்கரவர்த்தி யாரைப்போன்று அவ்வளவு பரந்த இடத்திற்கு அரசராயிருந்தவர் எவருமிலர். அத்தகைய பெருஞ் செல்வத்தைப் பெற்ற இவர், அரச இன்பத்தை வெறுத்து, மக்களின் நன்மை ஒன்றையே கருதிச் சத்தியத்திற்கும் தருமத்திற்கும் கட்டுப்பட்டுச் செங் கோல் செலுத்தியது வியப்புக்குரிய செயலாகும்.

7. அசோகர், கலிங்கப் போர் முடிந்த வுடனே, புத்த மதத்தை மேற்கொண்டார். அச் சமயம் பரவுதற்பொருட்டுப் பல கோவில்களையும், மண்டபங்களையும் கட்டினர்.

8. அசோகர், “ பெரியவர்களிடம் மரியாதை யாக நடந்துகொள்ள வேண்டும்; பிறருக்குக கெடு தியை உண்டாக்கும் செயல்களைச் செய்தல்கூடாது;



அசோகரது தூண்

கொலையை அறவே கைவிடுதல் வேண்டும்; சத்தியத்தைக் கடைப்பிடித்து நடத்தல் நல்லது; உணவிற்காக எவ்வுயிரையும் கொல்லுதல் கூடாது,'' எனத் தம் குடிகளுக்குப் போதித்து வந்தார். கற்ற பெரியவர் பலரைத் தமக்கு அருகில் இருந்த நாடுகளுக்கெல்லாம் அனுப்பி, இக்கொள்கைகளைப் பரவச் செய்யுமாறு ஏற்பாடு செய்தார்; தம் பெண்ணையும் பிள்ளையையும் நற்போதனை செய்யச் சிங்களத்தீவிற்கு அனுப்பி வைத்தது யாவருக்கும் ஆச்சரியத்தை விளைத்தது. இவர் இவ்வாறு புத்த மத போதனைகளை எங்கும் பரப்பினர்.

9. இவர் தம் தேசத்திற் பொது இடங்களிலிருந்த தூண்கள், கற்பாறைகள், குகைகள் முதலியவற்றில் தம் போதனைகளைச் செதுக்குமாறு செய்தார். இது மக்கள் இவற்றைப் படித்துத் திருந்துவதற்கு வசதியாயிருந்தது.

10. அறச்செயலே அரசனது செங்கோலைக் காப்பது என்னும் பண்டைத் தமிழர் கோட்பாட்டை அசோகர் மேற்கொண்டொழுகினர்.

11. கல்வெட்டினுல் அசோகரைப்பற்றி வெளிப்படும் உண்மைகள் :

i. இவர் காலத்தில் பிரயாணத்திற்காகப்பல ஆயிர மைல்களுக்குப் பாதைகள் செப்பனிடப்பட்டன. பாதையின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டன.

ii. ஆங்காங்கே மருத்துவச் சாலைகள் பல நிறுவப்பட்டன.

iii. பல கிணறுகள் வெட்டப்பட்டன.

iv. மிருக பலி அறவே நிறுத்தப்பட்டது.

v. தூய வாழ்க்கையை மேற்கொள்ளுதல், தருமத்தைக் கடைப்பிடித்தல், இனிய சொற்களையே பேசுதல் முதலிய நன்னெறிகள் போதிக்கப்பட்டன.

12. இவர் ஏற்படுத்திய சாசனங்களிலெல்லாம் இவர் பெயர் பிரியதரிசனி என்றே பொறிக்கப்பட்டுள்ளது. இவர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்து கி. மு. 232-ஆம் ஆண்டில் இறந்தார்.

அருஞ்சொற்பொருள் :

ஆட்சி புரிந்து - அரசாண்டு, சூறை - கொள்ளை, வாளுக்கிரையாக்கினர் - வாளால் வெட்டி வீழ்த்தினர், பரிகாரம் - பிராயச்சித்தம், ராஜரிஷி - அரசை மேற்கொண்டிருப்பினும் மனத்துறவடைந்து முனிவரைப் போன்று பற்றற்றிருப்பவர், பரந்த - விசாலமான.

வினுக்கள் :

1. அசோகரின் சேனைகள் கலிங்கத்தில் செய்த கொடுமைகள் யாவை?

2. கலிங்கப் போருக்குப் பின்பு அசோகர் கொண்ட கருத்து யாது?

3. புத்தசமயம் பரவ அசோகர் செய்த செயல்கள் எவை?

4. அசோகர் தம் நாட்டினருக்குச் செய்த போதனைகள் யாவை?

5. புத்த சமயமும், நற்போதனைகளும் பிற நாடுகளிலும் பரவ அசோகர் என்ன செய்தார்?

### இலக்கணம்:

1. செய்வினைக்கும், செயப்பாட்டு வினைக்கும் உள்ள வேறுபாடு யாது? இவ்விரண்டுக்கும் இரண்டு வாக்கியங்கள் கூறுக.

2. ஆகுபெயர் என்பது என்ன? இரண்டு உதாரணம் கூறுக.

### பயிற்சி:

1. முன்னிலைச் சொற்கள் நான்கு கூறுக.

2. மூன்றும் பத்தியில் உள்ள உணர்ச்சிக் குறிகள் எவ்வுணர்ச்சியைத் தெரிவிக்கின்றன?

3. நான்கு கட்டளை வாக்கியங்களை எழுதுக.

4. அழிவு + உண்டாகிறது: இவற்றைப் புணர்த்திப் புணர்ச்சி விதி கூறுக.

5. அசோகருடைய பண்புகளைக் குறிப்பிடுக.

6. அழித்தனர், துன்பம், இழத்தல், நஷ்டம், பாவம், தீவினை, எளிது, அறம்—இவற்றிற்கு எதிர்ப்பதம் கூறுக.

7. அசோகர் புத்த சமயத்தைப் பரப்புவதற்குச் செய்த காரியங்களைச் சுருக்கி எழுதுக.

# 9. குடிசைத் தொழில்

## தேனீ வளர்த்தல்

1. குடிசையில் வாழும் மக்களால் செய்யப்படும் தொழிலே குடிசைத்தொழில் எனப்படும். இது பலருக்கும் பயன் தரும் சிறந்த தொழிலாகும். உலகத்திலேயே குடிசைத்தொழில் வல்லவர் ஜப்பானியரும், சீனருமாவர். அவர்கள் பலவற்றில் மேன்மையடைந்திருத்தற்குக் காரணம், அவர்கள் செய்து வரும் குடிசைத் தொழில்களே.

2. நம் நாட்டின் பரப்பு மிகப் பெரிது; செழுமை செப்புந்தரமுடையதன்று. சிறு உழைப்பினாலேயே பெரும்பொருளை ஈயும் வளப்பம் நம் நாட்டிற்குண்டு. அங்ஙனமிருந்தும், நாம் பஞ்சத்தினால் பரிதவிக்கின்றோம். தன் நாட்டை நாடி வந்தவர்க்கெல்லாம் மாடமாளிகைகளைக் கட்டிக் கொடுத்தவன், தனக்கென ஒரு குடிசையும் இல்லாது வாழ்கின்றான்; யாவர்க்கும் பட்டாடைகளை நெய்து தந்தவன், இன்று தான் உடுக்க ஒரு துணியும் இன்றித் துன்புறுகின்றான். இதுதான் நம் நாட்டின் இக்கால நிலைமை. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? நாம் நம்மையும் நம் நாட்டையும் அறவே மறந்து, அயல் நாட்டு வழக்க ஒழுக்கங்களில் அதிக மோகங்கொண்டு நடந்ததே என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். இப்போது யந்திரங்கள் மிகப்பெருகி மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கியிருக்கின்றன.

"இத்தொல்லை நீங்கவேண்டுமாயின், மக்கள் குடிசைத் தொழிலை ஆதரித்துப் பெருக்க வேண்டும்," என நம் அரும்பெருந்தந்தையார் காந்தியடிகளார் வற்புறுத்தி வந்தார்.

3. குடிசைத் தொழில்களுள் தேனீ வளர்த்தலும் ஒன்று. தேனீ ஐயறிவோடுங் கூடிய பறவை இனத்தைச் சேர்ந்ததாயிருப்பினும், அதன் சமூக வாழ்க்கையும், வகைகளும், வளர்ச்சியும் படிப்பவர்க்கு வியப்பை உண்டாக்கும் என்பது திண்ணம்.

4. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெருந்தகையாளரைப் போன்று, தேனீயானது, தன்னலத்தைச் சிறிதும் நோக்காமல், பெரிதும்




தேனீக்களின் பிரிவுகள்

உழைத்துத் தன் சமூகத்தைப் பெருக்குகின்றது. தேனீக்களில் இராணி ஈ என்றும், அலி ஈ என்றும், வேலைக்கார ஈக்கள் என்றும் வகைகளுண்டு.

5. இவற்றுள் இராணி ஈ, அலி ஈ, இவைகளுக்கில்லாத சில உறுப்புக்களும், பொருள்களும் வேலை செய்யும் ஈக்களின் உடலில் அமைந்திருக்கின்றன. இராணி ஈ வேலையொன்றும் செய்யாமல், ஒரே இடத்தில் இருக்கும். முட்டையிடுவது தான் இதன் வேலை. அம்முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்களை வளர்த்தல், கூடு கட்டுதல், உணவு திரட்டிக் கொண்டு வருதல் முதலியவை வேலைக்கார ஈக்கள் செய்யும் தொழில்கள்.


வேலை செய்யும் ஈயினது பின்னங் கால்

6. வேலை செய்யும் ஈயினது உடம்பின் கீழ்ப்புறத்திலிருந்து ஒருவித மெழுகு உண்டாகிறது. அதைக் கொண்டே அது கூடு கட்டுகிறது. அவ்வீயின் நாக்கு நீளமாய் இருக்கும்; வாய் உறுப்பு வண்ணாத்திப் பூச்சியின் துதிக்கையைப் போலும், ஒரு குழாயைப் போலுமிருக்கும். அதனால், தேனீ, பூக்களில் இருக்கும் இனிய திரவத்தை உறிஞ்சி எடுக்கும். இத்திரவம் தேனீயின் இரைப்பைக்குள் சென்றதும் தேனாக மாறுகிறது. அது தன் பின்னங்கால்களில் உள்ள மகரந்தப்பைகளைக் கொண்டு மலர்களிலுள்ள மகரந்தப் பொடிகளைச் சேகரிக்கிறது;

தன்னைக் காத்துக்கொள்ளக் கொட்டும் முள் ஒன்றைப் பெற்றிருக்கிறது. அதனால், அது தன் அருகில் வருபவரைக் கொட்டித்துரத்தும்.

7. ஈக்கள் மெழுகினால் கட்டும் கூட்டிற்குக் கணம் என்பது பெயர். இராணி ஈ, அக்கணத்தின் அடியில் முட்டையிடுகிறது. வெண்ணிறமுள்ள அம் முட்டை மூன்று நாட்களுக்குப்பின்பு நீர்ப்புழு வாக மாறுகிறது. வேலை செய்யும் ஈக்கள் தங்கள் இரைப்பையில் சேகரித்து வைத்திருக்கும் தேனை யும், மகரந்தத்தையும் ஊட்டி அப்புழுக்களை வளர்க் கின்றன; பின்பு வேண்டுமளவு உணவை அக் கணத்திற்குள் வைத்து, அதை மெழுகால் மூடி விடுகின்றன. அவ்வுணவை உண்டு வளரும் புழுக் கள், பன்னிரண்டு நாட்களில் நன்கு வளர்ந்து, நீலப் புழுவாய் மாறி, கணத்தைத் தொளைத்துக் கொண்டு வெளி வரும்.

8. வேலை செய்யும் ஈக்கள் மிகுதியான தேனைத் திரட்டுகின்றன; அதில் தாம் உண்டது போக மிகுந்ததைக் கணத்தில் சேர்த்து வைப் பதற்கும், கீழ்ப்பிரிவு ஈக்களை வளர்ப்பதற்கும் பயன்படுகின்றன.

9. காடுகளில் சென்று தேன் எடுப்பவர்கள் கூட்டின் கீழ் தீ வளர்ப்பார்கள். அதனால், சில ஈக் கள் இறக்கும்; சில பறந்து போகும்; பின்பு அத் தேனைப் பிழிந்து எடுத்துக்கொள்வார்கள். அவ் வமயம் அக்கூண்டிலிருக்கும் சிறு ஈக்களும் இறந்துவிடும். தேனீக்கள் திரும்பவும் கூடு கட்டு வதற்கு மிகவும் துன்பப்படுகின்றன.

10. செயற்கை முறையில் தேன் சேகரிப்பவர்கள், மரத்தால் ஒரு கூட்டைச் செய்வார்கள். அதனடியில் இருக்கும் பலகை ஒன்றில் நான்கு பக்கங்களிலும் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். அவற்றிற்கு அடைகாக்கும் அறைகள் என்பது பெயர். அவற்றில் ஈக்கள் நுழைவதற்குச் சிறு தொளைகள் இருக்கும். அப்பெட்டிகளை வேண்டும் பொழுது வெளியில் எடுக்கலாம். அப்பெட்டிகளைப் பொருத்தியிருக்கும் பலகையில் ஓர் அறை இருக்கும். அதிற்சட்டங்கள் உண்டு. முன்னர்க் கூறிய



அடை காக்கும் அறை

அறைகள் தேனீக்களை வளர்ப்பதற்கும், மேல் அறை தேனைச் சேர்த்து வைப்பதற்கும் பயன் படுத்தப்படுகின்றன. இவ்விரண்டு பிரிவுகளையும் தனித்தனியே பிரித்தெடுக்கலாம். தேன் கூட்டைப் போன்றே அமைக்கப்பட்டிருக்கும் இதற்குக் கற்



தேன்கூடு-கற்பனைக் கூடு

பனைக் கூடு என்பது பெயர். இக்கூட்டில் மழை, வெயில் படாத வண்ணம் ஒரு மேல் மூடி உண்டு. இக்கற்பனைக் கூண்டுகளில் தேனீக்களைச் சேர்ப்பதும், வளர்ப்பதும் எவ்வாறு என்பதைக் கவனிப்போம் :

11. சில சமயங்களில் இராணி ஈயும் வேலைக்கார ஈக்களும் தங்கியிருக்கும் கூட்டில் புதிய இராணி ஈ வந்து புகும். அப்போது அதிலிருந்த இராணி ஈயும் சில வேலைக்கார ஈக்களும் பறந்து போய் ஒரு மரக் கிளையில் கூட்டமாய்ப் படிந்திருக்கும். அச்சமயத்தில் அவற்றைக் கொண்டுவந்து கற்பனைக் கூட்டில் வைத்துக் கொள்ளலாம். வேலைக்கார ஈக்கள் தங்கள் காரியத்தைச் செய்யத் தொடங்கும்.

12. தேன் கூட்டின் ஒரு பாகத்தில் புகையிட்டு, அங்குள்ள ஈக்களைத் துரத்திவிட்டு, மற்றப் பாகத்தைக் கூட்டின் அடை காக்கும் அறையில் வைக்கலாம். கற்பனைக் கூட்டில் தேனீக்கள் அதிகமாயிருப்பின், அதிலிருந்து சில சட்டங்களை எடுத்துப் புதிய கூட்டில் வைத்து, ஈக்களை வளர்க்கலாம்.

13. சிலர் சட்டங்களில் மெழுகைப் பூசி வைப்பர். இம்மெழுகு அத்தேனீக்கள் எளிதாகக் கூடு கட்டுவதற்குப் பயன்படும். மேல் அறைகளில் உள்ள சட்டங்களில் தேன் நிரம்பியதும் அச்சட்டங்களை யந்திரத்தில் வைத்துத் தேன் எடுப்பார்கள். இப்படித் தேன் எடுப்பது தேனீக்களுக்குத் துன்பமும் நஷ்டமும் இல்லாத ஒரு முறையாகும். இந்தத்தேனும் சுத்தமானதாய் இருக்கும். இந்தியாவில் பல இடங்களில் இப்போது தேனீயை வளர்த்தலும் தேன் எடுத்தலும் நடைபெற்று வருகின்றன. இத்தொழிலுக்கு அதிக பணச் செலவும், அதிக இடமும், உழைப்பும் வேண்டுவதில்லை.



தேன் எடுக்கும் இயந்திரம்

அருஞ்சொற்பொருள் :

அறவே - முற்றும், மோகம் - ஆசை, ஆதரித்து - அன்பு செய்து, மகரந்தம் - பூந்தாது, கணம்-கூடு, சேகரித்து-திரட்டி.

விறுக்கள் :

1. குடிசைத் தொழிலில் வல்லவர் யார்?

2. நம் நாட்டின் இக்கால நிலைமை எவ்வாறுள்ளது? இதற்குக் காரணம் என்ன?

3. தேனீக்களில் எத்தனை வகை உண்டு?

4. அவற்றுள் ஒவ்வொன்றும் செய்யும் வேலைகள் எவை?

5. வேலைக்கார ஈக்கள் இராணி ஈக்கு இல்லாத எவ்வுறுப்புக்களைப் பெற்றிருக்கின்றன?

6. அவ்வுறுப்புக்களால் அவ்வீக்களுக்கு என்ன பயன்?

7. வேலைக்காரத்தேனீக்கள் புழுவை எப்படி வளர்க்கின்றன?

8. காடுகளிலுள்ள தேன் கூடுகளிலிருந்து எப்படித் தேன் எடுக்கின்றார்கள்? அதனால் ஏற்படும் தீமைகள் எவை?

9. தேனீயின் இயற்கைக் கூண்டிற்குப் பதிலாக இப்போது பயன்படுவது எது? அதன் அமைப்பு யாது?

10. கற்பனைக் கூட்டில் எந்தெந்த வகையில் தேன் கூட்டைப் பொருத்தலாம்?

## இலக்கணம்:

1. தன்வினைக்கும், பிறவினைக்கும் உள்ள வேறுபாடு யாது? இரண்டிற்கும் இரண்டு உதாரணம் தருக.

2. உவமான வாக்கியம் ஒன்றை எடுத்துக் காட்டுக.

## பயிற்சி:

1. தன்மை, முன்னிலை வினைமுற்றுக்களைக்கொண்டு முடியும் நான்கு வாக்கியங்களை எழுதுக.

2. இப்பாடத்தில் வேற்றுமை உருபுகள் விரிந்து நிற்கும் சொற்களைக் குறிப்பிடுக.

3. திருத்தி எழுதுக :—குடிசை தொழில், மிக பெரியது, இன்றி துன்புறுகின்றான், ஒப்பு கொள்ளுவர், வேலைச் செய்யும், கூடுக் கட்டல், திரட்டிகொண்டு, மகரந்த பொடி, உள்ளச் சட்டங்களில்.

4. குடிசைத் தொழிலைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

5. தேனீக்களின் வளர்ப்புப் பருவங்களை விளக்கமாகக் கூறுக.

6. தேனீக்களை வளர்த்துத் தேனை எடுக்கும் முறையை ஒரு பக்கத்தில் எழுதுக.

# 10. மரத்தின் பயன்

ஒரு நகரத்தில் ஒரு பெரிய இல்லம் இருந்தது. அவ்வில்லத்தைப் பார்க்கும் போதே அதில் வாழ்பவர் பெருஞ்செல்வராய் இருக்கவேண்டுமென்னும் எண்ணம் தோன்றும். அவ்வீட்டுக்குரிய தலைவனும் தலைவியும் சில மக்களுடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அறிவுள்ளவர்களாதலால், ஆண் மக்



ஆலமரமும் அதன் நிழலும்

களைப் போன்றே பெண் மக்களையும் படிப்பித்து வந்தார்கள். அவர்களுடைய இரு புதல்வியருள்

பெரியவள் பெயர் நீலாயதாட்சி; சிறியவள் பெயர் நளினாட்சி என்பது. பெரியவள் நான்காம் படிவத்திற் படித்து வந்தாள். சிறியவள் இரண்டாம் படிவத்திற் படித்து வந்தாள்.

அவ்விருவரும் ஒரு நாள் தம் வீட்டுத் தோட்டத்திலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தினடியில் உட்கார்ந்து, பின் வருமாறு பேசிக்கொண்டே தையல் வேலை செய்துகொண்டிருந்தனர்.

நளினாட்சி: அக்கா, இந்த ஆலமரம் எவ்வாறு நன்றாக நிழல் தருகிறது, பார்த்தயா!

நீலாயதாட்சி: இது நம் இருவருக்கு மட்டுமா நிழல் தருகிறது! மன்னனும் அவனைச் சேர்ந்த சேனைகளும் இம்மரத்தின் கீழ்த்தங்கினும், அத்தனை பேருக்கும் இது நிழலைத் தந்து அவர்கள் களைப்பைத் தீர்க்குமே! இதைப்பற்றி நீ படித்ததில்லையா?

நளினாட்சி: ஆமாம் அக்கா, இதைப்பற்றி யான் நான்காம் வகுப்பில் வெற்றி வேற்கை என்னும் நூலிலுள்ள பாட்டைப் படித்துள்ளேன். இவ்வளவு பெரிய மரம் ஒரு சிறிய விதையிலிருந்து உண்டாகிறதாம்!

நீலாயதாட்சி: அஃது உண்மைதான்.

நளினாட்சி: அப்படியானல், இந்த மரத்தில் இருக்கும் வேர், தண்டு, இலை, பூ, காய் முதலிய யாவும் அந்த விதையில் அடங்கியிருக்கின்றனவா?

நீலாயதாட்சி: அவ்விதையில் வேரின் சத்துப் பொருளும் தண்டின் சத்துப் பொருளும் மட்டும் உள்ளன.

நளினாட்சி : இந்த இரண்டு சத்துப் பொருளும் மரம் வளருவதற்கு எப்படி உபயோகப்படுகின்றன?

நீலாயதாட்சி : விதை பூமியில் ஊன்றி, அங்குள்ள சத்துப் பொருளையும், மேலே பாய்ச்சும் நீர் முதலியவற்றையும் பெற்று, வேரின் சத்துப்பொருள் வேராகப் பரவியும், தண்டின் சத்து மேலே முளையாகக் கிளம்பியும் வளர்கின்றன.

நளினாட்சி : ஒரு சிறு விதை எப்படி இவ்வளவு பெரிய மரமாகிறது என்பதை இப்போது நான் தெரிந்துகொண்டேன். நாம் தோட்டமுள்ள வீட்டில் ஏன் குடியிருக்க வேண்டும்?

நீலாயதாட்சி : நமக்குப் பிராணவாயு அதிகமாக வேண்டும். மரங்களுக்குக் கரியமிலவாயு அதிகமாக வேண்டும். நாம் கரியமிலவாயுவை வெளி விட்டுப் பிராணவாயுவை உட்கொள்ளுகின்றோம். மரங்களோ, பிராணவாயுவை வெளி விட்டுக் கரியமிலவாயுவை உட்கொள்ளுகின்றன. ஆகையால், மரங்கள் இருந்தால், நமக்குப் பிராணவாயு மிகுதியாகக் கிடைக்கும்.

நளினாட்சி : ஆம்; இதை நான் முன்னமே படித்திருக்கிறேன். நீ சொன்ன பின்புதான் அது நினைவிற்கு வந்தது. அஃதிருக்கட்டும். மரங்களில்லாவிட்டால், நாம் விடும் கரியமிலவாயு என்னாகும்?

நீலாயதாட்சி : அது நம் சுற்றுப்புறங்களில் உள்ள நல்ல காற்றை அசுத்தமாக்கிவிடும். அந்த அசுத்தக் காற்றை நாம் உட்கொள்ளுவதால், நமக்கும் பல வியாதிகள் வரும். பிராணவாயுவும் நமக்கு

நிறையக் கிடையாது.

நளினாட்சி: அப்படியானால், மரங்கள் நமக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன அல்லவா?

நீலாயதாட்சி: ஆம், பல வகைகளில் மரம் நமக்கு உதவி செய்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

நளினாட்சி: இன்னும் எவ்வகைகளில் மரம் உதவி செய்கிறது?

நீலாயதாட்சி: மழை இல்லாவிட்டால் எந்தச் சிறு உயிராவது வாழ முடியுமா?

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது."

எனத் திருவள்ளுவர் கூடக் கூறியிருக்கிறார் அல்லவா? அம்மழைக்குங்கூட மரம் காரணமாய் இருக்கின்றது.

நளினாட்சி: மழை பெய்வதற்குக் கடல், ஆறு, குளம் முதலியவற்றில் தங்கிய நீரன்றோ காரணம்? நீ சொல்வது எனக்குப் புதிதாய் இருக்கிறதே!

நீலாயதாட்சி: இது புதியதன்று. ஒருவேளை உனக்கு இது தெரியாமலிருக்கலாம். கடலில் நீரை நிறைய மொண்டுகொண்டே மேகங்கள் விரைவாகச் செல்லும்போது, உயர்ந்த மரங்களில் படிகின்றன. அவற்றின் குளர்ச்சி, மேகங்களிற் பட்டவுடன் அம் மேகங்கள்நீராக மாறி மழையைப் பெய்கின்றன.

நளினாட்சி: அப்படியானால், உயர்ந்த மரங்கள் இல்லாத இடத்தில் மழை பெய்வதில்லையா?

நீலாயதாட்சி: பெய்யும். ஆனால், மரங்கள் அடர்ந்திருக்கும் இடங்களிற் பெய்வதுபோல, அடிக்கடி மழை பெய்யாது.

நளினாட்சி: மரம் நமக்குச் செய்யும் வேறு நன்மை என்ன?

நீலாயதாட்சி: மரம், தான் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தாலும், மற்றவருக்கு நிழலைக் கொடுப்பதாகிய பேருதவியைச் செய்கிறது.

நளினாட்சி: மரம், இலை, பூ, காய், பழம் முதலிய எத்தனையோ பொருள்களையும் நமக்குக் கொடுக்கின்றது.

நீலாயதாட்சி: இத்தனை உதவி செய்கிற மரத்துக்கு நாம் என்ன உதவி செய்கிறோம் நளினா?

நளினாட்சி: நாம் விதையை மண்ணில் புதைக்கிறோம்; தண்ணீர் விடுகிறோம்; அப்போதைக்கப் போது நிலத்தைக் கொத்திவிட்டு மரத்தை வளரும்படி செய்கிறோம்.

நீலாயதாட்சி: நம் வீட்டில் வளர்க்கும் மரங்களுக்கு மட்டுமே நாம் இவ்வேலைகளைச் செய்கின்றோம். எத்தனையோ மரங்கள் தாமாகவே கானகத்திலும், வெளியிடங்களிலும் வளர்கின்றனவே! அவற்றிற்கு யார் இவற்றையெல்லாம் செய்கின்றவர்?

நளினாட்சி: மிருகங்களாலும், பறவைகளாலும், காற்றினாலும் விதைகள் ஆங்காங்கே பரவுகின்றனவாம். மழை பெய்யும்போது அவை மண்ணிற் புதைந்து முளைத்து வளர்கின்றனவாம்.

நீலாயதாட்சி: அப்படியானால், நம் உதவியில்லாமலும் மரம் வளரும் என்பதை நாம் தெரிந்து கொள்ளுகிறோமல்லவா?

நளினாட்சி: ஆனாலும், பல மரங்களை நாமே வளர்க்கின்றோம்.

நீலாயதாட்சி. அப்படி வளர்த்தும், மரத்திற்கு நாம் செய்யும் உதவி மிகச் சிலவே. அவற்றையும் நம் நன்மையைக் கருதியே செய்வதால், உதவி என்று சொல்லக்கூடாது. மரம் நமக்குச் செய்யும் உதவிகளோ, எண்ணிறந்தன. அன்றியும் மரத்தைத் 'தாளுண்ட நீரைத் தலையாலே தரும் நன்றியுள்ள பொருள்' என்றும் சொல்லுதல் வேண்டும்.

நளினாட்சி: பிறர் செய்த நன்றியை அறிதற்கும், அந்நன்றியைப் பாராட்டுதற்கும் மரத்திற்கு உயிர் இருக்கிறதா?

நீலாயதாட்சி: மரம் வளர்கிறது; உணவை உண்கிறது; தன் குடும்பத்தைப் பெருக்குகிறது; உயிருள்ள பிராணிகளைப்போல இன்னும் எத்தனையோ காரியங்களைச் செய்கிறதே!

நளினாட்சி: மரத்திற்கு நம்மைப்போல எல்லா அறிவுகளும் இருக்கின்றனவா?

நீலாயதாட்சி: இல்லை. அதற்குத் தொட்டால் அறியும் அறிவு மட்டும் இருக்கிறது.

நளினாட்சி: அதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

நீலாயதாட்சி: சில மலர்கள் நாம் தொட்டவுடனே வாடிவிடும். 'தொட்டாற்சுருங்கி' என்னும் ஒரு செடியைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா?



சர் ஜகதீஸ் சந்திர போஸ்

நளினாட்சி: இந்த ஓரறிவைக் கொண்ட மரம் மக்களுக்கு எத்தனை நன்மைகளைச் செய்கின்றது!

நீலாயதாட்சி: ஆம்! மரங்களுக்கு உயிர் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தவர் நம் நாட்டுவிஞ்ஞானியாரான சர் ஜகதீஸ் சந்திர போஸ் அல்லவா? இதோ! அவருடைய உருவப் படத்தைப்பார்.

நளினாட்சி: நல்லது, அப்படியானால் நமக்குப் பல பயன்களையும் தரும் மரத்தை நாம் போற்றிப் புகழ வேண்டுவதுதான்!

பொழுது சாய்ந்துவிட்டமையால் தமது சம்பாஷணையை முடித்துவிட்டு அவ்விருவரும் வீட்டிற்குள் சென்றனர்.

### அருஞ்சொற்பொருள் :

களைப்பு - இளைப்பு, சத்து - சாரம், பிராணவாயு - நாம் உயிர் வாழ்வதற்கேற்ற சுத்தமான காற்று, கரியமில வாயு - நமக்கு நோய்களை உண்டாக்கும் அசுத்தமான காற்று, விசும்பின் - வானத்திலிருந்து, துளி - மழைத் துளி, பசும்புல் - பசுமையான புல், தலை - நுனி, அரிது - கஷ்டம், கருதி - நினைத்து, தாள் உண்ட - வேரினால் உட்கொண்ட, தலையால் - உச்சியினால்.

### வினாக்கள் :

1. விதையில் உள்ள பொருள்கள் எவை?
2. சிறு விதை பெரிய மரமாவது எப்படி?
3. நமக்கு வேண்டும் வாயு எது? அதனால் நமக்கு உண்டாகும் நன்மை என்ன?
4. மரம் நமக்கு எப்படி உதவி புரிகிறது?
5. மரம் நமக்கு என்ன உதவிகளைச் செய்கின்றது?
6. மரங்கள் எப்படித் தாமாகவே வளர்கின்றன?
7. மரத்திற்கு இருக்கும் அறிவு எது?

### இலக்கணம் :

1. 'எச்சம்' என்பது என்ன?
2. அஃது எத்தனை வகைப்படும்? சில உதாரணங்கள் கூறுக.

### பயிற்சி :

1. நீலாயதாட்சி சொல்லும் பொருள்களைத் தனியே எடுத்தெழுதுக.

2. மாணவர்களில் ஒருவர் நீலாயதாட்சியாகவும், ஒருவர் நளினாட்சியாகவும் இருந்து சம்பாஷிக்க.

3. சம்பாஷணை, வாதம் ஆகிய இவ்விரண்டில் எது மிக்க அறிவு வளர்ச்சியைத் தரத்தக்கது?

4. மரத்தின் பயனைப்பற்றி ஒரு பக்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

5. ஆலமரம் பலருக்கும் நிழல் தருவதைப்பற்றி நீ படித்த செய்யுள் ஒன்றைக் கூறுக.

# 11. 'கொடுத்து வைத்தது கிடைக்கும்!'

(பத்திரிகையிலிருந்தெடுத்தது)

1. ஓர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு அதிகமாக உழைக்காமலே மிகுந்த பொருளைச் சேர்த்துவிட வேண்டும் என்னும் பேராசை இருந்தது. ஒரு நாள் காலை அவன் ஊருக்கருகிலிருந்த ஓர் ஏரி கரையின்மேல் நடந்துகொண்டிருந்தான்.

2. வலைஞர் சிலர் மீன் பிடிப்பதற்காக அவ்வேரியில் வலையை வீசினர். சிறிது நேரத்திற்குப் பின் அவ்வலையை இழுத்த போது அது மிகக் கனமாயிருந்தது. "இதில் ஏதோ ஒரு பெரிய பொருள் சிக்கி இருக்கிறது!" என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்ட வணிகன் செம்படவர்களைக் கூப்பிட்டு, "இந்த வலையில் இருக்கும் பொருளுக்கு நான் முப்பது ரூபாய் கொடுக்கிறேன்.

அதை எனக்கு விற்றுவிடுங்கள்,'' என்றான். அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

3. வலையைக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்த போது அதில் ஒரே ஒரு கொழுத்த மீன் இருந்தது. இது பேராசைக்காரனாகிய அவ்வணிகனுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கியது. ஆயினும், அவன் வேறு வழியில்லாமல் முப்பது ரூபாயைச் செம்படவருக்குக் கொடுத்துவிட்டு, மீனை வீட்டிற்குக் கொண்டுபோய்த் தன் மனைவியிடம் கொடுத்தான்.

4. அவள் அம்மீனைத் துண்டித்த போது அதன் வயிற்றில் மிக்க ஒளியையுடைய இரண்டு நாகரத்தினங்கள் மின்னிக்கொண்டிருந்தன. அவை அவள் கண்ணைப் பறித்தன. மிக்க ஆச்சரியத்தையடைந்த அவள், தன் கணவனுக்கு அவைகளைக் காட்டினாள். அவைகளைக் கண்டதும் வணிகன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. "நாம் கொடுத்த முப்பது ரூபாய்க்கு எத்தனையோ முப்பது ரூபாய்கள் இவற்றால் நாம் பெறுவோம்! நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! நாம் இலட்சாதிகாரி ஆவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. இனி நமக்கென்ன குறை! நம் கருத்து ஈடேறிவிட்டது!'' என்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தான். நாகரத்தினங்கள் பத்திரப்படுத்தப்பட்டன.

5. அந்தச் சமயத்தில் அந்த ஊர் அரசன் மகளுக்குத் திருமணம் ஏற்பாடாயிற்று. மாப்பிள்ளைக்கு வெகுமதி கொடுக்க இரண்டு உயர்ந்த கெம்

புகள் வேண்டுமென மன்னன் சில வியாபாரிகளிடம் சொல்லியிருந்தான். அந்தப்பேராசை வணிகனிடம் உயர்ந்த நாகரத்தினங்கள் இருக்கின்றன என்பதை அறிந்த அரசன், அவனை வரவழைத்து அவற்றின் விலையை விசாரித்தான். வணிகனுக்குப் பேராசை இன்னும் மிகுந்துவிட்டது. ஆதலின், அவன் மன்னனை நோக்கி, "அரசரே, இந்த நாகரத்தினங்கள் என் முன்னோர்கள் தேடி வைத்தவை. இவற்றைப்போன்றவை இவ்வுலகத்தில் எங்கும் கிடையா. இவற்றிற்கு விலை கூறவும் ஒருவராலும் இயலாது. ஆயினும், மகாராசாவே கேட்



வணிகன் இரண்டு கைந்நிறைய அள்ளுதல்

கும்போது யான் என்ன சொல்லமுடியும்? நாளைச் சூரியோதயம் முதல் பகல் பன்னிரண்டுமணி வரையில் என்னாற்சுமந்துபோகக்கூடிய பொன்னை விலை

யாகத் தரவேண்டும்,'' என்று கேட்டான். அரசனும் அதற்கு உடன்பட்டான்.

6. மறுநாட்காலை வணிகன் நூறு வண்டிகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசன் கட்டளையின்படி மந்திரியும் பிரதானியும் பொக்கிஷச்சாலையைத் திறந்துவிட்டனர். அச்சாலைக்குச் செல்லும் வழி பளிங்குக் கற்களாலும், சித்திரங்களாலும் செப்பனிடப்பட்டிருந்தது. வணிகன் அவற்றின் அழகில் மயங்கிச் சிறிது நேரத்தைக் கழித்தான். பொக்கிஷசாலைக்குள் நுழைந்ததும், தானியக் குவியலைப் போலப் பொன், வெள்ளி, வைரம், முத்து, பவழம் முதலியன குவியல் குவியலாகக் குவிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் வியப்புடன் பார்த்துக்கொண்டே கடைசி வரையும் ஒரு முறை போய்த் திரும்பினன். "எதை வேண்டுமானுலும் வாரிப்போகலாம் என மன்னன் கூறினனல்லவா? பொன்னைக் கொண்டு போகலாமா? முத்து, பவழம் முதலியவற்றை எடுத்துக்கொள்ளலாமா? எப்பொருள் அதிக விலைபெறும்! ஏன் நமக்கு வேண்டுமட்டும் வைரத்தைக் கொண்டு போகக் கூடாது! ஆனல், வைரத்திற்கு விலை கொடுத்து வாங்குவது சில செல்வர்க்குத்தான் முடியும்! ஆதலின், அவைகளை விரைவில் விலைப்படுத்த முடியாது. நம் வாணுட்களிலேயே அவை விற்பதும் அருமை! அவ்வாருனல் நாம் எண்ணியபடி இப்போதே பெரிய பணக்காரனுக முடியாதல்லவா? பொன்னையே

நிறையக் கொண்டு போகலாம்,'' என்று பல வித யோசனைகளைச் செய்துகொண்டிருந்தான்.

7. இங்ஙனம் அவன் சிந்தனையிலேயே பொழுதெல்லாம் கழிந்தது. கோட்டை வாயிலிலிருந்த மணி நடுப்பகலைக் குறிக்க, 'டாண், டாண்' என அடிக்கத் தொடங்கிற்று. அப்போதுதான் திடுக்கிட்டுத் தன் நினைவிற்கு வந்தான்; உடனே பொன் குவியலிடம் ஓடத் தொடங்கினான். அஃது அவன் இருந்த இடத்திற்கு அதிக தொலையில் இருந்ததால், அருகிலிருந்த வெள்ளி நாணயக் குவியலிடம் சென்றான்; இரண்டு கைந்நிறைய அள்ளி மடியிலிட்டான். உடனே காவற்காரன் அவனை, "வெளியே போ!" எனக் கத்தினான். அவன் வெளியே ஓடி வந்தான்.

8. வாயிலில் காத்திருந்த வண்டிக்காரர்கள் அவனோடு சண்டைக்கு வந்தார்கள். அவர்களுக்குக் கூலியைக் கொடுத்துவிட்டு, மீதியை எண்ணிப் பார்த்தான். எத்தனை ரூபாய்கள் இருந்தன தெரியுமா? சரியாக முப்பதே ரூபாய்! அந்தப் பேராசைக்காரன், "கொடுத்து வைத்ததுதான் கிடைக்கும்!" என எண்ணிக்கொண்டே வீடு திரும்பினான்.

9. அவன் அந்த மீனுக்காக எத்தனை ரூபாய் கொடுத்தானோ, அத்தனை ரூபாயே அவனுக்குக் கிடைத்தன.

அருஞ்சொற்பொருள்:

உழைக்காமல் - கஷ்டப்படாமல், பேராசை - மிக்க ஆசை, வலைஞர் - மீன் பிடிப்பவர், சிக்கி - அகப்பட்டு,

வாணுள் - ஆயுட்காலம், சிந்தனே - எண்ணம், திடுக்கிட்டு - அச்சங்கொண்டு, தொலே - நீண்ட தூரம்.

## வினுக்கள் :

1. வணிகன் தன் பேராசையை எதற்குப் பயன் படுத்தினுன்?

2. நாகரத்தினங்களேப் பார்த்ததும், வணிகன் எண்ணியவை யாவை?

3. இரத்தினங்களுக்கு வணிகன் சொன்ன விலே என்ன?

4. பொக்கிஷ அறைக்குள் நுழைந்து வணிகன் உடனே வேண்டிய பொருளேக் கொண்டு வாராததற்குக் காரணம் என்ன?

5. இறுதியில் வணிகனுக்குக் கிடைத்தது எவ்வளவு?

6. இக்கதையினுல் நீ தெரிந்துகொள்வதென்ன?

## இலக்கணம் :

உயிரீற்றுச் சொற்கள், வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகிய இவற்றின் முன் எவ்வெழுத்துக்கள் வந்தால் மிகும்? எவ்வெழுத்துக்கள் வந்தால் மிகாது? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

## பயிற்சி :

I.

| | |
|---|---|
| 1. பேசிக்கொண்டார்கள். | 4. இழுத்துக்கொண்டு |
| 2. வீட்டிற்குக் கொண்டு போய் | 5. மின்னிக்கொண்டிருந்தன. |
| 3. கண்ணேப் பறித்தன | 6. பத்திரப்படுத்தப் பட்டன |

7. இந்தப்பேராசை
8. வாரிப்போகலாம்
9. எண்ணிப்பார்த்தான்.
10. போய்த்திரும்பினர்
11. எடுத்துக்கொள்ளலாமா?
12. சாலைக்குச் செல்லும் வழி

இத்தொடர்களில் வல்லினம் மிகுந்ததற்குக் காரணம் கூறுக.

II. வலைஞன், பேராசைக்காரன், கணவன், அரசன், மகன், காவற்காரன் - இவற்றிற்குப் பெண் பால் பெயர் கூறுக.

III. இக்கதையை இருபது வரியில் சுருக்கி எழுதுக.

## 12. மகாபலிபுரச் சிற்பங்கள்

1. உலகில் மனிதன் தோன்றிய போது, சூரியன், சந்திரன், மலை, மரம், கடல் முதலிய இயற்கைப் பொருள்களையல்லாமல் செயற்கைப்பொருள்களைக் கண்டிருக்கமாட்டான்; இயற்கைப் பொருள்களையே உணவாக உண்டு, இயற்கை இடத்திலேயே வாழ்ந்து, இயற்கை அழகுகளையே கண்டு இன்புற்றிருப்பான். அவனுக்குச் சூரியன் எழுவதும், சந்திரன் மறைவதும், மரம் வளர்வதும், கடல் அலை வீசுவதும் ஆச்சரியமாகவே இருந்திருக்கும். காலம் செல்லச் செல்ல இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் அவன் மனத்தில் தோன்றியிருக்கலாம். அவன் ஆதித்தன் வெப்பத்தினுல் ஈரமான இடம் உலருவதைப் பார்த்து, ஈரத்தை இழுத்துக்கொள்ளும் சத்தி சூரியனுக்கு உண்டு

என்பதை அறிந்திருப்பான்; களிமண்ணைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து, ஓர் உருண்டை செய்து, வெயிலில் வைத்தவுடன், அது கெட்டியானதைப் பார்த்து, அம்மண்ணைக் குடைவுள்ள பாத்திரமாகச் செய்து காய வைத்திருப்பான்; பின்னர் அதன் மேல் தன் நகத்தினாலும், சிறு கொம்புகளைக் கொண்டும் சில கோடுகளைக் கிழித்து உலர வைத்திருப்பான். சின்னாட்களில் நெருப்பிலிட்டுச் சுடுவதை அவன் கண்டுபிடித்திருக்கக்கூடும்.

2. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் நாட்டில் சிறந்த சிற்பிகள் இருந்தார்கள். அவர்கள், முதலில் மரங்களில் பல சித்திர வேலைகளைச் செய்தார்கள்; பின்பு கற்களிலும், உலோகங்களிலும் தங்கள் வேலைப்பாடுகளை அமைக்கத் தொடங்கினார்கள். மகேந்திர வர்மன் காலத்தில் சிற்பிகள் குன்றுகளைக் குடைந்தெடுத்துக் கடவுளுக்குக் கோவில் சமைத்தார்கள். அவை குகைக்கோவில்கள் என வழங்கப்பட்டன.

3. மகாபலிபுரம் என்பது **மாமல்லபுரம்** என்பதன் மரூஉ. **மாமல்லன்** என்னும் பல்லவ அரசனுக்குத் தலைநகராயிருந்த காரணத்தால், இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இது பழைய காலத்தில் **மல்லை** எனவும் வழங்கப்பட்டது. இதைப் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகிய **திருமங்கையாழ்வார்**, ‘இனிய தண்ணார்ந்த கடல் மல்லை’ என்றும், ‘சங்கு தங்கு கடல் மல்லை’ என்றும் பாடியிருப்பதிலிருந்து அறியலாம். இது செங்கற்பட்டுப் புகை

வண்டி நிலயத்திற்குக் கிழக்கே ஏறக்குறைய இருபது மைல் தூரத்தில் உள்ளது.

4. அங்குக் குன்றைக் குடைந்து செய்த குகைக்கோவில் ஒன்றுள்ளது. அவ்வூரார் அதை **மகிஷாசுர மர்த்தனி கோவில்** என்றும், **யமபுரி மண்டபம்** என்றும் சொல்லுகின்றனர். அஃது ஒரு கூடம் போலக் காணப்படுகிறது. அதன்முன் ஆறு தூண்கள் இருக்கின்றன. நடுச்சுவரில் நான்கு திருக்கரங்களோடு கூடியதும், உமையை இடப்பக்கத்தில் கொண்டதுமான சிவபிரானது திருவுருவம் உள்ளது. அதன் இரண்டு திருவடிகளும் நந்தியின் மேல் பதிந்திருக்கின்றன. அவ்வுருவத்துக்குப்பின் புறத்தில் நான்முகனும் அரியும் கைகூப்பி நிற்பது போன்ற உருவங்கள் அமைந்திருக்கின்றன. உமையவள் மடியில் குழந்தை முருகன் அமர்ந்திருக்கின்றான். தென்பக்கத்தில் துர்க்கா தேவி வில் வளைத்து மகிஷாசுரன்மீது அம்புகளை எய்வது போலச் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவள் எட்டுக் கரங்களிலும் ஆயுதங்கள் பல இருக்கின்றன. அத்தேவியின் முகத்தில் வீரப் பொலிவும், அவ்வரக்கன் முகத்தில் அச்சக் குறியும் காணப்படுகின்றன. மகிஷாசுரன் வதையான பெரிய கதையை அச்சிற்பங்கள் சில விநாடிகளில் நம் மனத்தில் பதித்துவிடுகின்றன. சரிதத்தைப் படிக்கும்போது உண்டாகும் உணர்ச்சியைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமான உணர்ச்சியை அச்சிற்பங்கள் உண்டாக்குகின்றன என்பது பார்த்தவ

ருக்குத்தான் தெரியும். இன்னும் பல சிற்பங்கள் அக்கோவிலில் அமைந்திருக்கின்றன. யாவும் மனத்தைக் கவரக்கூடியனவே.

5. அம்மண்டபத்தின்மீது தெற்கிலுள்ள சுவரில் திருமால் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருப்பது பொறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாதிசேஷன் திருவடிகளுள் ஒன்று பூமியைத் தாங்கி நிற்பதாய் அமைந்துள்ளது. அஃது ஆதிசேஷனுலேயே இப்பூமி தாங்கப்படுகிறது என்னும் புராண வரலாற்றைத் தெரிவிக்கின்றது. அதன் அழகு காண்பவர் கருத்தைக் கவர்கின்றது.



பஞ்சபாண்டவர் இரதங்கள்

6. அங்குள்ள ஐந்து கோவில்களையும் பஞ்ச பாண்டவரின் இரதங்கள் எனக் கூறுகின்றார்கள். இங்ஙனம் கூறுவதற்குக் காரணம், அவை சக்கரங் களோடுங் கூடிய தேர்கள் போன்றிருத்தலே யாகும். அவை ஒரே கல்லில் செதுக்கப்பட்ட குகைக் கோவில்களேயாகும்.

7. அவற்றுள் ஒன்று பெரிதாயிருக்கிறது. அதைத் தருமராஜ ரதம் என்கின்றனர். அதில் எல் லாக் கோவில்களிலும் இருப்பது போன்ற கருப் பக் கிருகம் உள்ளது. அங்கு, சோமாஸ்கந்த விக் கிரகம் ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. பீமசேன இரதத்தின் முன் புறமும் பின் புறமும் மண்டபங் கள் இருக்கின்றன. அருச்சுனன் திரௌபதி ஆகிய இருவர் இரதங்களும் ஒன்ருய் இணைக்கப் பட்டுள்ளன. அதற்குள் ஒரு தேவியின் இரதம் செதுக்கப்பட்டிருக்கிறது. நகுல சகதேவர் இரு வருக்கும் ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோ வில்கள் இருக்கின்றன. முதலில் இந்த ஐந்து கோவில்களிலும் சிவலிங்கங்கள் அமைக்கப்பட் டிருந்தனவென்றும், பின்னர் அவற்றைக் கொண்டுபோய் வேறு கோவில்களில் பிரதிட்டை செய்துவிட்டார்கள் என்றும் சிலர் சொல்லுகின் றனர்.

8. அக்காலத்துச் சிற்பக் கலைகளை நாம் இந் தியாவின் பல இடங்களிலும் காணலாம். இவை யாவும் நம் தேசத்தின் பண்டைய நாகரிகத்தின் சிறப்பையும், சிற்பக்கலையின் சீர்மையையும்,



பாறைச் சிற்பங்கள்

சிற்பிகளின் நுட்பமதி, பொறுமை, கலைத்தேர்ச்சி, அவர்களை ஆதரித்த அரசர்களின் அறிவுடைமை முதலியவற்றையும் காட்டுகின்றன. அச்சிற்பிகள் பொருளாசையினால் இவ்வேலைகளைச் செய்திருக்க முடியாது. அவர்களுக்கு இஃது இன்பந்தருந் தொழிலாகவே அமைந்திருத்தல் வேண்டும்.

9. நம் பண்டைய கோவில்கள் கடவுள் வழிபாட்டிற்கு மட்டுமேயன்றி, பண்டைய மன்னர் வரலாற்றை அறிதற்கும், சிற்பத்தின் செம்மையை உணர்தற்கும் நிதிகளாய்த் திகழ்கின்றன. இச் சிற்பக்கலை ஓங்கி வளர்வதாக!

அருஞ்சொற்பொருள்:

ஆராய்ச்சி-பொருள்களின் உண்மைத் தன்மைகளைத் தெரிந்துகொள்வதற்குச் செய்யும் முயற்சி, ஆதித்தன்-சூரியன், உருவம்-வடிவம், கருப்பக்கிருகம்-கடவுளின் திருவுருவத்தை வைக்கும் உள்ளிடம், பிரதிட்டை செய்து-ஸ்தாபனம் செய்து, நுட்பமதி-கூர்மையான அறிவு.

வினாக்கள்:

1. முதல் முதல் மனிதன் எப்படி வாழ்ந்திருப்பான்?

2. சித்திரம் எப்படி வளர்ந்திருக்கக்கூடும்?

3. மகேந்திர வர்மன் காலத்தில் சிற்பிகள் செய்த வேலைகள் யாவை?

4. மகாபலிபுரத்தைக் 'கடல் மல்லை' என வழங்குவதற்கு ஆதாரம் யாது? இஃது எங்கேயுள்ளது?

5. 'யமபுரி மண்டபம்' என்பது எதற்கு வழங்கும் பெயர்?

6. பஞ்சபாண்டவர் இரதங்கள் ஐந்தையும் பற்றித் தனித்தனியே சொல்லுக.

7. சிற்பக்கலைகள் எவ்வெவற்றை விளக்குகின்றன?

இலக்கணம்:

1. இப்பாடத்திலிருந்து இரண்டு தொழிற்பெயர்களை எடுத்துக் காட்டுக.

2. கீழ் வருவனவற்றிற்குச் சொல்லிலக்கணம் சொல்லுக :—

சித்திரம், கற்றவர், கோவில், தூண்கள், மனத்தில்.

3. இப்பாடத்திலிருந்து ஐந்து பால்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

4. சின்னாட்களில், வேறொரு, இஃதொரு - இவற்றைப் பிரித்தெழுதுக.

5. ஏழாம் பத்தியிலுள்ள உயர்திணை அஃறிணைப் பெயர்களையும், ஒருமை பன்மைகளையும் கூறுக.

பயிற்சி :

மகாபலிபுரத்தைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

# 13. நெடுஞ்செழியனது வெற்றி

1. பாண்டியன் நெடுஞ்செழியன் வீரமும் நீதியும் நிறைந்தவன். அன்பும் அருளும் அவனிடம் குடிகொண்டிருந்தன. புலவரைப் போற்றி அவர்கள் மதிப்பிற்கேற்ற பரிசளித்தலும், இரவலர் விரும்பியதை ஈதலும் நெடுஞ்செழியன் விடாது மேற்கொண்ட செயல்களாகும். குடிகளின் நன்மை தீமைகளிலும் அவன் பங்கெடுத்துக்கொண்டான். அவன் செங்கோல் இனிது நடைபெற்றது. இம்முறையில் அவனது புகழ் எங்கும் பரவியது. சேர நாட்டுக் குடிகளும், சோழ நாட்டுக் குடிகளும் தத்தம் மன்னரைப் புகழாமல், பாண்டியனையே புகழ்ந்தார்கள். இது சோழர்களுக்குப் பொறாமையை உண்டாக்கியது.

2. முதலில் சேரலிரும்பொறை என்னும் சேர மன்னன், பாண்டியன்மீது போருக்குச் சென்றான். அவன் படைகள் பாண்டியன் படைகளுக்கு முன் நிற்காமல் தோல்வியடைந்தன. சேரனும் கட்டுண்டான். ஆயினும், கருணைக்குணம் நிறைந்த பாண்டியன், சேரனை விடுவித்து, அவனுக்குப் புத்திகூறி, அவன் நாட்டிற்கு அனுப்பினான். பாண்டியனது நற்குணத்தைக் கண்கூடாகக்கண்ட சேரன், அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தன் நாட்டை அடைந்தான்.

3. இச்செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது. மிக்க வன்மைவாய்ந்த சேர அரசன் ஒருவன், தன் இனத்தானுக்கு நேர்ந்த பரிபவத்தைக் கேட்டு மிக்க வருத்தங்கொண்டான்; உடனே பாண்டியன் மேல் படையெடுக்க எண்ணினான்; ஆயினும், தான் ஒருவனால் அக்காரியம் முடியாதென்று வாளாவிருந்தான்.

4. சோழனும் பாண்டியனது பெருமிதத்தைக் கேள்வியுற்றான். அவன் குடிகளும் பாண்டியனையே பெருமைப்படுத்துவது அவனுக்குப் பொறாமையை உண்டாக்கிற்று. ஆயினும், தனக்குத் தக்க துணை வலி கிடைக்குமட்டும் பாண்டியனோடு போர் புரியச் சோழனும் விரும்பவில்லை.

5. அச்சோழன் கருத்தை ஒற்றர்களால் சேரன் அறிந்தான். அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவன் தான் பாண்டியன் மீது போர் தொடுக்க எண்ணியிருந்ததைத்

தூதுவர் மூலம் சோழனுக்குத் தெரிவித்தான். இதைக் கேட்ட சோழன் மிக மகிழ்ந்தவனாய், "உங்கள் மன்னனுடன் கலந்து பாண்டியனிடம் யுத்தம் செய்ய யான் சித்தமாயிருக்கிறேன். உங்கள் நாட்டுக் குறுநில மன்னரையும் உடன் கூட்டிக் கொள்ளுமாறு உங்கள் அரசனுக்குத் தெரிவியுங்கள். யானும் என் சிற்றரசர்களோடு வருகிறேன். இன்னும் எட்டு நாட்களில் போருக்குப் புறப்படலாம்," எனத் தூதுவரிடம் சொல்லியனுப்பினான். அதன்படியே சேர சோழராகிய இரு பேரரசர்களும் ஐந்து சிற்றரசர்களும் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது போருக்குப் புறப்பட்டார்கள்.

6. இஃது ஒற்றர் மூலம் பாண்டியனுக்குத் தெரிந்தது. அவ்வரசர் தன்னைக் கேவலமாக இழித்துரைத்தனர் என்பதை அறிந்த நெடுஞ்செழியன் சினமும் வருத்தமும் கொண்டான். அவன் மனம் துடித்தது; உடல் பதைத்தது. அவன் தன் மந்திரிகளைக் கூட்டி, "அறிவு நிரம்பிய அமைச்சர்களே, சேர சோழரும், குறுநில மன்னர் ஐவரும் என்னுடன் போர் செய்ய வருகின்றனராம்! என்னை 'அற்பன், ஆண்மையற்றவன், சிறுபடையுடையவன்' என அவர்கள் இகழ்ந்து பேசுகிறார்களாம்! இப்பேச்சு, பிறர் தம்மை மதிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் பேசப்படுகின்றதேயன்றி, வேறன்று. என் படைத்திறனும், வீரமும், புயவலியும் அவர்கட்கு நன்றாகத் தெரியும். அவ்வாறிருந்தும், என்னிடம் பகை கொண்டது எவ்வளவு அறி

யாமை! தமிழ் நாடாகிய ஒரு நாட்டில் வாழும் அரசரே இப்படிப் பகை கொண்டால், மற்றவரைப் பற்றி என்ன சொல்ல முடியும்? அவர்கள் ஏளனத் திற்கு இடங்கொடுத்துவிட்டார்களே! அவர்கள் யாவரும் சேர்ந்து வந்தால், என்னை வென்றுவிட முடியும் என நினைத்தார்கள் போலும்! அவர்கள் அன்றி, இவ்வுலகமே கூடி வந்தாலும், பாண்டியன் நெடுஞ்செழியனை வெல்ல முடியாது என்பதை அவர் கள் அறியாமற்போனதுதான் பரிதாபம்! அவர்க ளோடு செய்யப்போகும் போரிலே, நான் வெற்றி பெறவில்லையானால், என் குடிகள் தங்களுக்குப் போதுமான உணவும் உடையும் இருக்க இடமும் இல்லாமையால் மிகவருந்தி, 'எங்கள் மன்னன் மிகக் கொடியவன்! அவன் செங்கோல் கொடுங்கோலாய் உள்ளது!' என என்னைப் பழிப்பார்களாக! நல் லிசைப் புலவர் என்னை வெறுத்து, என் செயல் களைப் புகழ்ந்து பாடாதிருப்பார்களாக! தமிழ் நாட்டு மக்கள் என்னை மதிப்புடன் நினையாமற்போ வார்களாக! பின் வருவதை முன்னரே அறியும் அறிஞர்களே, நால்வகைப் படைகளையும் இப்போதே திரட்டுங்கள்! அக்கோழைகள் தங்களுக்குப் பாண் டியன் அஞ்சுபவன் அல்லன் என்பதை அறியட் டும்!" எனக் கோபமும் வீரமும் தோன்றப் பேசி அவ்விடமிருந்து சென்றான்.

7. நெடுஞ்செழியன் நீராடி, வெண்மையான ஆடைகளை அணிந்து, இறைவனை வழிபட்டான்; பாண்டியருக்கு அடையாளமாகிய வேப்ப

மாலையைச் சூடி, தன் ஆயுதங்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு, அந்தப்புரத்தில் சென்று விடை பெற்று, வீதியில் வந்தான். அலங்கரித்த பட்டத்து யானைமேல் ஏறி மிக்க கம்பீரத்துடன் செல்லும் மன்னனையும், நாற்படைகளையும் கண்ட குடிகள், "எம் அரசர் வெற்றி மாலையைச் சூடுவாராக! நெடுஞ்செழியராகிய சிங்கத்தைக் கண்டதும், பகைவராகிய நரிகள் ஊளையிட்டு ஓடுவனவாக! பாண்டியர் வாழ்க! அவர் கொற்றம் நீடூழி வாழ்க!' என மனமார வாழ்த்தி, மலர் மழை பொழிந்தார்கள்.

8. பகைவர் சேனை மதுரைக்குச் சமீபத்தில் தங்கியிருந்தது. அவ்விடத்தை அடைந்ததும், பாண்டியன் போர் தொடங்குமாறு தன் படைகளுக்குப் பணித்தான். குதிரையோடு குதிரையும், யானையோடு யானையும் மோதின. வீரரோடு வீரர் மலைந்தனர். சிறிது நேரத்திற்குள் பல விலங்குகளும், மக்களும் பிணங்களாய் விழுந்தார்கள். உதிரவெள்ளம் பாய்ந்தது. வில், வாள், வேல் முதலியன மின்னலெனச் சுழன்றன. இப்போர் நெடுநேரம் நடந்தது. இது முடியுடையரசரும் சிற்றரசரும் சேர்ந்து செய்த போராதலால், **மாபெரும்போர்** என வழங்கப்பட்டது.

9. நெடுஞ்செழியன் வாளைத் தாங்கிப் போர் செய்யப் புகுந்தான். அவ்வாறு புகுந்தவன் வெட்டி வீழ்த்திய யானை குதிரைகளையும், போர் வீரர்களையும் கணக்கிடுதற்கு முடியாது. சிற்றரசர்களும் செந்நீரைச் சிந்தினர்கள். சோழ சேரர்களுக்கும்

பாண்டியன் முன் நிற்க முடியவில்லை. பாண்டிய மன்னனது வீரம் அவர்களுக்கு வியப்பை உண்டாக்கியது. அப்போதுதான், அவர்கள், தாங்கள் செய்தது பிழையென்றும், பாண்டியனை எதிர்த்து வந்தது அறியாமை என்றும் அறிந்தார்கள். அவர்கள் சேனைகள் யாவும் பல திசைகளிலும் ஓட்டம் பிடித்தன. எல்லாப் பக்கங்களிலும் சேர சோழர்களின் சேனைகள் சிதறடிக்கப்பட்டன. ஆயினும் இரு பேரரசரும், சிற்றரசரும் "நாம் சோராமல் போர் புரிந்தே ஆகவேண்டும். வெற்றி பெற்றால், மண் ஆளலாம்; இல்லையானல், விண் ஆளலாம்," என்னும் தீர்மானத்துடன் நெடுஞ்செழியனை எதிர்த்து நின்றனர்.

10. ஆயினும், அஞ்சா நெஞ்சமும், கலங்கா ஆண்மையும் வாய்ந்த பாண்டியனை அதிக நேரம் சண்டையில் நிறுத்த அவர்களால் முடியவில்லை. அவர்களுடைய மற்றச் சேனைகளும் மூலைக்கு மூலை ஓடி ஒளித்தன. சேனைகளை இழந்த மன்னர் மனம் சிந்தனையிலாழ்ந்தது; என்ன செய்வதென்பதறியாமல் திகைத்தது. சிறிது பின்னிட்டனர் அம்மன்னர்.

11. அம்மன்னரின் எண்ணத்தை அறிந்த பாண்டியன் அவர்களை நெருங்கினன். "இனி இங்கிருந்தால் நாம் இறப்பது நிச்சயம்!" என்பது அம்மன்னருக்குத் தெரிந்தது; ஆதலின், புறங்காட்டி ஓடத் தொடங்கினர். "இக்கோழைகளை விடக்கூடாது!" என எண்ணிய பாண்டியன், அவர்களைத்

துரத்திக்கொண்டே சென்றான். அவன் படைகளும் உடன் சென்றன. யாவரும் முடிவில் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூருக்கு அருகில் இருக்கும் தலையாலங்கானம் என்னும் இடத்தைச் சேர்ந்தனர். இப்போது அந்த இடம் தலையாலங்காடு என வழங்கப்படுகிறது.

12. அங்குப் பாண்டியனுக்கும் சேர சோழருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அப்போர் இன்ன தன்மையுடையதெனக் கூற ஒருவராலும் முடியாது. பாண்டியனது போர்த்திறத்தை அறிதற்கு அது தக்க இடமாயிருந்தது. பகையரசராகிய ஆனைக் கூட்டத்துள் பாண்டியனாகிய சிங்கம் நுழைந்தது. அவன் யாவரையும் சின்னபின்னமாகச் செய்தான்; வாளைத் தாங்கிச் சுழன்று சுழன்று வந்தான். அப்போது எங்கும் பாண்டியனது உருவமே காணப்பட்டது. அவன், பகையரசர் உயிரை உண்ணும் யமன் போன்றிருந்தான்; பகையரசர் எழுவரையும் தலையாலங்கானமென்னும் அவ்விடத்தில் முழுவதும் தோற்கடித்தான். உயிர் தப்பியோட நினைத்த அவர்கள், இருந்த இடம் தெரியாமல் மறைந்தார்கள். ஆதலாற்றான் நெடுஞ்செழியனுக்குத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் சிறப்புப் பெயர் அமைந்தது.

13. முடி மன்னர் மூவரையும், சிற்றரசர் ஐவரையும் தன்னந்தனியனாய் நின்று தோற்கடித்து வெற்றி மாலை சூடிய நெடுஞ்செழியனது வீரம், தமிழுலகம் என்றும் மறக்கக் கூடியதன்று. தமிழ் நாடு வாழ்க! தமிழ் மக்கள் வாழ்க!

## அருஞ்சொற்பொருள் :

இரவலர்-யாசிப்பவர், செங்கோல்-நீதியாட்சி, கோணுது-மாறுபடாமல், படைகள் - சேனைகள், நேர்ந்த - உண்டான, பரிபவம் - இழிவு, வாளா - ஒன்றுஞ் செய்யாமல், பெருமிதம் - மிருந்த பெருமை, துணை வலி - உதவி செய்வதற்கேற்ற துணைவரது வலிமை, குறுநில மன்னர் - சிற்றரசர், ஒற்றர் - பிறநாடுகளுக்குச் சென்று அங்கு நடப்பவைகளை மறைந்திருந்து அறிபவர், எளனம் - பரிகாசம், பரிதாபம்-இரக்கப்படத் தக்கது; பணித்தான்-கட்டளையிட்டான், மலைந்தனர் - போர் செய்தனர், செந்நீர் - இரத்தம், திகைத்தது - மயங்கியது, சின்னபின்னமாக - சிறு சிறு கூருக.

## வினுக்கள்:

1. சேர சோழருக்குப் பாண்டியனிடம் ஏன் பொருமை உண்டானது?

2. சேரன் பாண்டியனுடன் போர் செய்ய நினைத்ததற்குக் காரணம் என்ன?

3. பாண்டியனுடன் போர் செய்யச் சென்ற மன்னர்கள் யார்?

4. ஏன் யாவரும் சேர்ந்து போருக்குச் சென்றனர்?

5. அமைச்சரிடம் பாண்டியன் கூறியவை யாவை?

6. இதிலிருந்து நாம் அவன் என்ன இயல்பை உடையவன் என அறிகின்ருேம்?

7. அப்போருக்கு மாபெரும்போர் எனப் பெயர் வந்ததற்குக் காரணம் என்ன?

8. பாண்டியனுக்குத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் சிறப்புப் பெயர் வந்ததன் காரணம் என்ன?

### இலக்கணம்:

1. வினையாலணையும் பெயரை விளக்குக.

2. அஞ்சுபவன், புகுந்தவன், பாண்டியன், மன்னர்-இவை என்ன பெயர்கள்?

3. செய்தி வாக்கியத்திற்கும் கட்டளை வாக்கியத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

### பயிற்சி :

1. மூன்று உணர்ச்சி வாக்கியங்களைக் கேள்வி வாக்கியங்களாக மாற்றுக.

2. இரண்டு உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக்குக.

3. இப்பாடத்திலிருந்து ஐம்பால் மூன்று இடங்களுக்கும் உதாரணங்கள் கூறுக.

4 குடி, போர், அணி, இறை, பணித்தல்-இவற்றிற்கு இரு பொருள் கூறி, வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

5. நெடுஞ்செழியனது போர்த்திறத்தை இருபது வரிகளில் எழுதுக.

6. புகுந்தவன்-இச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர்களாக மாற்றி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

## 14. கவியரசியார்

1. கவிஞர் எனக் கூறுவது எவரை? கவி பாடும் திறம் இயற்கையிலேயே அமைந்து, சமயம் வாய்த்தபோது தமக்குண்டாகும் அரிய கருத்துக்களை உள்ளடக்க முடியாமல் பாடல்களாக வெளிப்படுத்தும் அறிஞரையே கவிஞர் எனக் கருதுகின்

றனர். கவிஞர்கட்குச் சோலை, மலை, கடல், ஆறு முதலிய இயற்கைப் பொருள்களைக் காணுங்கால் இன்பம் பெருக்கெடுத்தோடுகிறது. அப்பெருக்கின் போக்கு வீடாகப் பல கவிகள் உருக்கொண்டெழுகின்றன. அக்கவிகள் இலக்கணப்பொருத்தமும், இலக்கியச் சுவையும், பொருளாழமும் உடை



கவியரசியார், 1879—1949

யனவாயிருத்தல் கண்கூடு. இங்ஙனம் கவி இயற்றும் வன்மை யாவருக்கும் இயற்கையிலேயே அமைவதில்லை. இவ்வன்மை வாய்ந்தவர் மிகச் சிலரே

யாவர். அச்சிலருள் ஒருவரே நம் சரோஜனி தேவி யார். இக்காலப் பெண்ணுலகில் இவர் ஒருவரே இயற்கைக் கவிஞராய் இலங்கினர் எனல் மிகையாகாது. இவரை நம் இந்தியா மட்டுமன்றி, உலகமே நன்கறியும்.

2. 'தோன்றிற் புகழொடு தோன்றுக,' என்னும் பொய்யா மொழியார் வாக்கியத்துக்கு இவர் இலக்கியமாய் வாழ்ந்தார். கவி பாடும் வன்மை இளமையிலேயே அமைந்து, உயர் கவிஞர் போற்றும் கவிகள் பல இயற்றினமையால், இவரைக் கவியரசியார் எனவே பலரும் வழங்கினர்.

3. இவர் 1879-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 13-ஆம் நாள் ஐதராபாதில் தோன்றினர். இவர் தந்தையாரின் பெயர் அகோரநாத சட்டோபாத்தியாயர் என்பது. அவர் ஆகம புராண இதிகாசங்களை நன்கு கற்றவர்; விஞ்ஞானக் கலையில் தேர்ந்து, டாக்டர் பட்டம் பெற்றவர். நைஜாம் அரசில் ஓர் உயர்ந்த உத்தியோகம் அவருக்குக் கிடைத்திருந்தது. அத்தகைய பெரியாரின் புதல்வியார் கல்வியறிவிற்சிறந்து விளங்குவதற்குத் தடை யாது?

4. சரோஜனி தேவியார் மிக்க சுறுசுறுப்புடன் கல்வி கற்றார்; தம் பன்னிரண்டாம் வயதிலேயே மெற்றிக்குலேஷன் பரீட்சையில் மாகாணத்தில் முதல்வராய்த் தேறினர். இவரை விஞ்ஞானக் கலையில் வல்லுநராக்கவேண்டுமென்பது இவருடைய தந்தையாரின் விருப்பம். அதன்

135584

பொருட்டு இவர் 1895-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். விஞ்ஞானம் கற்பதிலும் இவருக்கு விருப்பம் இருப்பினும், கவி பாடுவதிலேயே இவர் மனம் மிகுதியும் பதிந்திருந்தது. இயற்கையாய் அமைந்த இவ்வியல்பை மாற்ற மற்றவரால் முடியுமா? அன்றித் தம்மால்தான் ஆகுமா? இவ்வியற்கை இயல்பல்லவா இவரைத் தம் பதின்மூன்றாம் வயதிலேயே ஆயிரத்து முந்நூறு அடிகளையுடையதும் விழுமிய கருத்துக்கள் அடங்கியதுமாகிய ஒரு பாடலைப் பாடுமாறு செய்தது! அக்கவியைப் பெரிதும் கொண்டாடியவர் ஆங்கிலேயரேயாவர். நாளேற ஏற இவர் இலக்கியத்திலும், கவி இயற்றுவதிலும் மிக்க புலமை பெற்றார்; சொற்பொழிவாற்றலிலும், இவர் சிறந்தவர் என்னுமாறு பெரும்புகழேற்றார். இங்கிலாந்தில் இவர் இருக்கும் போது இவருக்கு உடற்பிணி உண்டாயினமையின், தாம் கருதிச் சென்ற கலையைக் கற்று முடிக்காமலே இவர் இந்தியாவுக்குத் திரும்ப நேர்ந்தது.

T3
031(D)
N49

5. தேவியாரது கவியும் கல்வியும் இங்கிலேயிலிருக்கும்போது, கோவிந்தராஜுலு நாயுடு என்பவர் நைஜாம் சம்ஸ்தானத்தில் மருத்துவராய் (டாக்டர்) இருந்து வந்தார். அவர் சிறந்த அறிஞர்; அருள் நிறைந்த உள்ளமும் விரிந்த மனப்பான்மையும், பழைமையும் புதுமையுமான உயரிய கொள்கைகளும் மேற்கொண்டொழுகுபவர். செம்மையான சீர்திருத்தத்தைக் கடைப்பிடிப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். அவர் பிரம சமாஜத்

135584
Chennai-600 008.

தைச் சர்ந்தவர். அவரது இரக்க உள்ளம் எளிய வர் பலரையும் வாழ்விக்கும்.

6. இச்சீர்மைகள் வாய்ந்த கோவிந்தராஜுலு நாயுடுவுக்கும், நம் கவியரசியாருக்கும் நட்பு உண்டாயிற்று. அந்நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து, ஊன்றிய அன்பாய் மாறியது. அவ்வன்பு இவர்களிருவருக்கும் மணத்தைக் கூட்டி வைத்தது. 1898-ஆம் ஆண்டு இவருக்கும் கோவிந்தராஜுலு நாயுடுவுக்கும் பிமரசமாஜக் கொள்கையின்படி மணம் நிகழ்ந்தது. இவ்விருவரும் இன்பத்துடன் இல்லறத்தை நடத்தி வந்தனர். அறிஞருக்கும், சீர்திருத்தக்காரருக்கும், அரசியல் வாதியருக்கும் இவருடைய இல்லம் புகலிடமாய் இருந்தது. இவருக்கு இரண்டு புதல்வரும், இரண்டு புதல்வியரும் தோன்றினர். இவர் இல்லறத்தை மேற்கொண்டொழுகிய காலத்திலும் இவர் உள்ளம் கவி பாடுவதிலேயே ஆழ்ந்து நின்றது. இவருடைய கவிகள் இந்தியாவை மட்டுமேயன்றி உலக முழுவதையும் அழகுபடுத்தின. இவர் கவிகளைப் புகழ்ந்துரையாதவர் இலரெனவே கூறலாம். இவருக்கு அறிஞர் 'கவியரசியார்' என்றும், 'கவிக்கோகிலம்' என்றும் சில பட்டங்களைச் சூட்டினர்.

7. சரோஜனி தேவியார் அரசியல் காரியங்களிலும் நுழைந்து சில நலங்களைச் செய்யத் தொடங்கினர். இந்தியரிடம் இவர் அன்பையும் அனுதாபத்தையும் காட்டி வந்தார்; ஐதராபாதில் வெள்ளத்தினல் பெருஞ்சேதமுண்டான போது,

ஏழைகள் பட்ட துன்பத்தைப் பொருளாய்ப் பொது மக்களிடம் பொருள் பெற்று, அவர்கட்கு உதவி செய்தார். அதன்பொருட்டுத் தேவியார் மேற் கொண்ட முயற்சி பெரிதாகும். இவர் சொற்பொழி வில் வீரமும், இனிமையும், பொருட்செறிவும் பொருந்தியிருந்தன. அவை கேட்பார் மனத்தைப் பிணித்தன. உண்மையை எடுத்துரைப்பதற்கு இவர் சிறிதும் அஞ்சுவதில்லை. பஞ்சாபு படுகொலை முதலிய சிலவற்றில் அரசாங்கத்தார் இந்தியர்களை நடத்திய கொடுமைகளை இவர் யாவரும் அறிய எடுத்துக் கூறி, மக்களுக்குள் கிளர்ச்சியை உண் டாக்கினர். இதனல் சினங்கொண்ட அரசாங்கத் தார்; தேவியார்மீது வழக்குத் தொடுப்பதாய்த் தெரிவித்தனர். ஆயினும், அதற்குச் சிறிதும் பயப் படாமல், தாம் சொன்னவை யாவும் உண்மை என நிலை நாட்டி, இறுதியில் அவர்களையே மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செய்தார். ஈதன்றோ வீரம் என்பது! சங்க காலத்திற்குப் பின்பு இத்தகைய ஆண்மை பெற்ற மங்கையர் இந்தியாவில் இருந் திருப்பரோ என்பது ஐயமே!

8. அமெரிக்கர் 1928-ஆம் ஆண்டு காந்தியடி களைத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்திருந்தனர். அவ்வமயம் அவருக்குப் போக இயலாமையால், தம் பிரதிநிதியாக நம் தேவியாரை அவ்விடத் திற்கு அனுப்பினர். இவர் அங்குச் சென்று, இந் தியாவின் மேன்மை, காந்தியடிகளின் சத்தியாக் கிரக நிலை, இந்தியர் சுயராஜ்யம் பெற வேண்டு

மென்பதன் கருத்து முதலியவற்றை அவர்களுக்கு எடுத்தோதினர்; அங்கிருந்த இந்தியருக்கு உண்டாயிருந்த துன்பங்களை ஒழிப்பதற்கு மிகவும் முயன்ருர். 'இந்தியாவைச் சுயேச்சை நாடாக்கவேண்டும்; இந்தியாவைப் பல வகையிலும் முன்னேற்றவேண்டும்; இந்தியர்களுக்கு' ஏற்பட்டுள்ள துன்பங்களை நீக்க வேண்டும்,' என்பவைகளே இவருடைய முக்கிய நோக்கங்கள். அவற்றின்பொருட்டு இவர் பெரும்பாடு பட்டார்.

9. காங்கிரசு கமிட்டிக்குத் தலைமை வகித்தும், அங்கத்தினராய் இருந்தும் இவர் செய்த காரியங்கள் பல. இவர் இரு முறை நம்பொருட்டுச் சிறைவாசம் செய்தார். ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவர் ஐக்கிய மாகாணத்துக்குக் கவர்னராயமைந்தார். அங்கும் இவர் செய்த சீர்மைகள் அனேகம். காந்தியடிகள் உயிர் நீத்த பொழுது இவர் கொண்ட துயரம் அளவிடற்பாலதன்று. அப்பெரியாருக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் யாவற்றையும் இவர் அருகிலிருந்து நடத்தினர்.

10. பல வகையிலும் சிறப்புற்று, இந்தியாவிற்கே தம் உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்து வாழ்ந்த நம் கவியரசியார், 1949-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர். இஃது இந்தியாவிற்கு மட்டுமேயன்றி, உலகிற்கே பெரு நஷ்டமாகும்.

இந்திய மக்களை வாழ்வித்தற்கு வந்து தோன்றிய கவியரசியாரின் ஆன்மா இன்பத்தில் திளைத்து வாழ்வதாக!

## அருஞ்சொற்பொருள் :

சமயம் வாய்ந்துழி - காலம் நேர்ந்த போது, கண்கூடு - வெளிப்படையாகத் தெரிந்த விஷயம், இயற்றும் - செய்யும், இலங்கினர் - விளங்கினர், தோன்றின் - பிறந்தால், இலக்கியமாய் - உதாரணமாய், இயல்பு - சுபாவம், விழுமிய - சிறந்த, நிகழ்ந்தது - நடந்தது, கிளர்ச்சி - எழுச்சி, பொருட்செறிவு - பொருள் மிகுதி, படுகொலை - கொடிய கொலை, இறுதி - கடைசி, அர்ப்பணம் செய்து - சமர்ப்பித்து.

## வினாக்கள் :

1. 'கவிஞர்' என்பவர் யார்? அவர் செயல் யாது?
2. சரோஜனி தேவியார் எத்திருக்குறளுக்கு இலக்கியமாய் வாழ்ந்தார்?
3. கவியரசியாரின் தந்தையாரைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
4. இவர் இங்கிலாந்துக்கு எப்போது எக்காரியத்தை முன்னிட்டுச் சென்றார்?
5. அங்கு இவருக்குப் புகழளித்தது யாது?
6. தேவியார் யாரை மணந்தார்? அவரைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
7. இவர் கவியைப்பற்றிக் கூறுக.
8. இவருக்குக் கிடைத்த பட்டங்கள் யாவை?
9. இவர் மக்களுக்குச் செய்த உதவிகள் யாவை?
10. இவரது வீரத்திற்கு ஓர் உதாரணம் கூறுக.

பயிற்சி :

1. கீழுள்ள தொடர்களை வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

வாய்ந்துழி, கண்கூடு, உருக்கொண்டு, மிகையாகாது, நாளுக்கு நாள், புகலிடம், பொருட்செறிவு, முன்னேற்றம், உடனிருந்து.

2. செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக :—

i அதன்பொருட்டு இவரை இங்கிலாந்துக்கு அனுப்பினர்.

ii இவர் அரசியல் காரியங்களிலும் நுழைந்து சில நலங்களைச் செய்யத் தொடங்கினர்.

iii இந்தியரிடம் இவர் அன்பையும் அனுதாபத்தையும் காட்டி வந்தார்.

3. பிரித்து எழுதுக :—

வல்லுநராக்க, முந்நூறு, அந்நட்பு.

4. சரோஜனி தேவியார் அரசியலில் நுழைந்த பின்பு செய்த செயல்களைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 15. உல்லாசப் பிரயாணம்

## குற்றாலச் செலவு

1. உலகப் பிரயாணங்கள், சமயசம்பந்தமான யாத்திரை, புதிய இடங்களைக் கண்டுபிடித்தல், தொழில் தேடுவதற்கும் மனத்திற்கு மகிழ்வு உண்டாதற்கும் சில அற்புதக் காட்சிகளைக் காணுதற்கும் சில இடங்களுக்குச் செல்லுதல் எனப் பல வகைப்படும். இவற்றுள் இறுதியிலுள்ளதைத்தான் உல்லாசப்பிரயாணம் என உரைப்பர்.

2. இச்செலவை மாணவரும் பெரியவரும் மேற்கொள்ளுதல் உண்டு. ஆனால், இதில் மிகுந்த விருப்பம் கொள்பவர் மாணவரேயாவர். இளைஞர் களுக்குத் தாங்கள் வசிக்குமிடத்திற்கு அருகிலுள்ள இடங்கட்குப்போக முடியுமேயன்றிக் கல்லூரி மாண வரைப்போன்றும், பெரியவர்களைப் போன்றும் அதிக தொலையிலுள்ள இடங்கட்குச் செல்ல முடிவ தில்லை. அதனால், அவர்கள் போய்க் காண முடியா ததும், உல்லாசமாகச் சென்று கண்டு உவப்பதற் கேற்றதும், அவர்கள் மனத்தையும் அறிவையும் விரிவடையச் செய்வதும், இயற்கை அழகும் வளங்க ளும் நிறைந்ததும், அவர்கள் பெரியவர்களான பின்பேனும் இன்றியமையாது கண்டு களிக்க வேண்டுவதும், இளமை மனத்தில் உருவகப்படுத்தி மகிழக்கூடியதுமான குற்றாலத்தின் உல்லாசப் பிரயாணத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்:

3. நம் நாட்டின்கண் இயற்கையழகு வாய்ந்த இடங்களுள் திருக்குற்றாலம் சிறந்ததாகும். இது திரு நெல்வேலி ஜில்லாவிலுள்ள தென்காசிக்கு ஏறக் குறைய மூன்றரை மைல் தூரத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ளது.

4. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றிலும் இது விசேஷம் பெற்றிருக்கிறதென வைதிகர் சொல்லுவர். இஃது உடல் நலத்திற்கு ஏற்றதா யும் இயற்கை இன்னலங்கள் வாய்ந்ததாயுமிருத் தலின், இங்குச் செல்லவும் வசிக்கவும் பலர் விரும்பு கின்றனர்.



திருக்குற்றாலத்தின் வட அருவி

5. தென்காசியிலிருந்து திருக்குற்றாலத்திற்குச் செல்ல அழகிய சாலை ஒன்றுள்ளது. அச்சாலையின் இரு புறமும் ஆலமரங்கள் தழைத்து நின்று, செல்பவர் ஆதித்தன் வெப்பத்தினல் அல்லலுரு வண்ணம் நிழல் தருகின்றன. அவ்வூருக்கு ஐந்து மைல் சுற்றளவில உள்ள சோலைகளும், நெல் வயல்களும், நீர் நிலைகளும், மண்டபங்களும் காண்பவர் மனத்தை ஆனந்தத்தில் ஆழ்த்தும். குரங்குகள் சாலையோரத்தில் இருக்கும் மரங்களில் தாவித் தாவிக் குதிப்பதும், பழங்களைப் பறித்துத் தின்ப

தும், வீசுவதும் பார்க்கத்தக்க காட்சிகளாகும். திரு ஞான சம்பந்தரும்,

"பக்கம் வாழைப் பாய்கனி யோடு பலவின்றேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்குங் குற்றாலம்"

என்றும்,

"மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்"

என்றும் வாயாரப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

6. குற்றாலத்தில் சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் இருக்கிறது. அப்பெருமானுக்குத் திருக்குற்ற்றால நாதர் என்பதும், அம்மனுக்குக் குழல்வாய் மொழி அம்மை என்பதும் பெயர். அவ்வாலயத்தின் வெளி மண்டபத்தில் நின்று நோக்கின், வானளாவி நிற்கும் குற்றாலமலையைக் காணலாம். அதன் உயரமான சிகரத்திற்குப் பஞ்சந்தாங்கி என்பது பெயர். நாட்டின் மற்றப் பகுதிகளில் அந்த இடம் மட்டும் எப்போதும் செழிப்புடனிருந்து மக்களைப் பஞ்சமின்றித் தாங்குவதால், அதற்கு இப்பெயர் அமைந்தது. அம்மலையின் உச்சியில் மூன்று சிகரங்கள் இருத்தலின், அது திரிகூடமலை என்னும் வேறொரு பெயரையும் பெற்றிருக்கிறது.

7. அம்மலையின்மேல் தேக்கு, கோங்கு, புன்னை, தென்னை, மா, பலா, கமுகு முதலிய மரங்கள் அடர்ந்திருக்கும். சந்தனம், ஏலம், சாதிக்காய் முதலியன பழுத்து மணம் வீசும். மல்லிகை, செண்பகம், முல்லை, பாதிரி முதலியன மலர்ந்து வருபவரை வரவேற்கும். பச்சிளங்கொடிகளும், பூக்

கொடிகளும் இயற்கை அன்னையை அலங்கரித்து நிற்கும்.

8. அம்மலையிலிருந்து பல அருவிகள் கீழ் ஓடிவருகின்றன. அந்நீர் வீழ்ச்சிகளுக்கு வட அருவி, சண்பக அருவி, தேனருவி, ஐந்தருவி எனப்பெயர்கள் வழங்குகின்றன.

9. அருவிகள் மலையிலிருந்து புரண்டோடி வரும் போது, போரை நோக்கிச் செல்லும் போர் வீரரைப்போன்று காணப்படும். அவற்றினோசை கடலோசையினும் விஞ்சியிருக்கும். இரு புறமும் தெறிக்கும் நீர்த்துளிகள் பெண்கள் ஆடும் கழங்கு போலும், முத்துக்கள் போலும் தோன்றும் என்றும், அந்நீரின் வெள்ளம் எங்கும் பரந்து சிறுமிகள் கட்டும் சிற்றில்களை அடித்துக்கொண்டு போகும் என்றும் குற்றாலக் குறவஞ்சி என்னும் நூல் கூறுகிறது.

"முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
[டோடும்."

என்பது அவ்வருணனை.

10. வட அருவி: இது ஏறக்குறைய நூற்றைம்பது அடி உயரத்திலிருந்து விழுகிறது. குற்றாலத்தின் செழுமை முதலிய சிறப்புக்களுக்கெல்லாம் இவ்வருவியே காரணமாகும். இவ்வருவியில் நீராடுவதன்பொருட்டே பல திசைகளிலிருந்தும் மக்கள் திரண்டு வருகின்றார்கள். ஆனால், இவ்வருவியில் எப்போதும் நீரோட்டமிராது. வைகாசி, ஆனி, ஆடி

மாதங்களிலேயே நீர் நிறைந்து பாயும். அக்காலத்திலேதான் உடல் நலமடைதற்கும், இயற்கை அழகைக் காண்பதற்கும் பல செல்வர் இங்கு வருவர். இங்கு யாத்திரை வருபவர் தங்குவதற்குப் பல சத்திரங்களும் தனி வீடுகளும் இருக்கின்றன. அவரவர் நிலைக்குத் தக்கவாறு அவற்றை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளுகின்றனர். உணவுப் பொருள்கள் யாவும் இங்குக் கிடைக்கும். பொருள்களுக்கு இங்கு விலை சிறிது அதிகமாகவே இருக்கும்.

11. வட அருவியின் கீழ் நின்று நீராடுபவருக்கு ஆபத்து நேராதவாறு பிடித்துக்கொண்டு நிற்க இரும்புக் கம்பிகள் நாட்டப் பெற்றிருக்கின்றன; இரும்புச் சங்கிலிகளும் உண்டு. நீராடுபவர் சிரசில் நிறைய எண்ணெய் தேய்த்துக்கொண்டே இவ்வருவியின் கீழ் நிற்பர். அவ்வெண்ணெயைப் போக்குதற்குச் சிகைக்காயோ, சவுக்காரமோ வேண்டுவதில்லை. தலையின்மீது விழும் இந்நீர் வீழ்ச்சியே அழுக்கையும் எண்ணெயையும் போக்கிவிடும். முதன்முதல் இதன் கீழ் நின்று நீராடுபவருக்கு இத்தண்ணீரின் வீழ்ச்சியினால் தலை சிதைந்துவிடுவது போல இருக்கும். சிறிது நேரத்திற்குப் பின்பு இவ்விடத்தை விட்டு வரவே மனமெழாது. எவ்வளவு நேரம் இந்நீர் வீழ்ச்சியின் கீழ் நின்று நீராடினும், ஆசை முற்றுப் பெறுதல் இல்லை; குளித்த பின்போ, உடலில் ஒரு வித வன்மையும், மனத்தில் ஒரு விதக் கிளர்ச்சியும் உண்டாகும். இங்கு வருபவர்கள் சின்னாட்களேனும்

இருந்து நீராடாமல் திரும்புவதில்லை. பல மூலிகை களிலும் விழுந்து புரண்டு ஓடிவரும் இவ்வருவி நீர், பித்தம் முதலிய மூளை சம்பந்தமான வியாதிகளையும், பல வித நோய்களையும் தீர்க்கின்றதாம். இங்கு வரு கின்றவர் சிலர் மூன்று பொழுதிலும் அருவியில் நீராடுகின்றனர். இவ்வருவி பாயும் இடம் முற்றும் கற்பாறையாய் இருக்கிறது. இது பூமியில் விழுந்து பெருகி, ஒரு நதி போன்று பாய்கிறது. இதற்குச் சித்திரா நதி என்பதும் பெயர்.

12. சண்பக அருவி: மலையின்மீது ஏறி ஒன் றரை மைல் சென்றால், அங்கு ஓரருவி இருக்கிறது. இதற்குச் சண்பக அருவி என்பது பெயர். இது சண்பக மரங்களுக்கிடையிலிருப்பதால் இப்பெயர் பெற்றது. இது சுமார் முப்பதடி உயரத்திலிருந்து வந்து வட அருவியுடன் கலந்துவிடுகிறது.

13. தேனருவி: சண்பக அருவியின் பக்கத்தில் செல்லும் பாதையில் சென்றால், இரண்டு மைலுக் கப்புறம் மிக்க ஓசையுடன் ஓடி வரும் தேனருவி உள்ளது. இங்குத் தேனடைகள் காணப்படுத லால் இதனைத் தேனருவி என்கின்றனர். தேனரு விக்குப் புதியவராகச் செல்பவர் யாவரேனும் வழி தெரிந்தவர்களின் துணைக்கொண்டே செல்ல வேண்டும். இல்லையானால், சென்ற வழியைக் கண்டு பிடித்துத் திரும்பி வருவது கடினம்.

14. ஐந்தருவி: கோவிலுக்கு மேற்குப் பக்கத் தில் மூன்று மைலுக்கப்பால் ஐந்தருவி என்னும் அருவியுள்ளது. இங்கு ஐந்து அருவிகள் தனித்

தனியே வந்து ஒன்று கூடுவதனால், இதற்கு இப் பெயரமைந்தது. இது முப்பதடி உயரத்திலிருந்து விழுகிறது. இதற்குச் செல்லும் வழியில் இயற்கை அழகுகள் நிறைந்திருக்கின்றன.

## அருஞ்சொற்பொருள் :

உவப்பது - மகிழ்வது, இன்னலம் - இனிய நன்மை, சாலை - இரு பக்கங்களிலும் மரங்கள் நிறைந்த பாதை, அல்லல் - துன்பம், ஆதித்தன் - சூரியன், பஞ்சந்தாங்கி- பஞ்சகாலத்திற் பாதுகாப்பது, குற்றாலக்குறவஞ்சி-குற்றால மலையைப்பற்றிக் குறத்தி சொல்லுவதாகப் பாடிய ஒரு நூல்.

## வினாக்கள் :

1. 'உல்லாசப் பிரயாணம்' என்பது என்ன ?
2. உல்லாசப் பிரயாணம் எத்தகையது?
3. திருக்குற்றாலம் எங்குள்ளது?
4. இம்மலையின் இயற்கை அழகைப்பற்றியும், இங்குப் பாயும் அருவியைப் பற்றியும் கூறுக.
5. வட அருவியின் பெருமை எப்படிப்பட்டது ?
6. மற்ற அருவிகளைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

## இலக்கணம் :

தன்வினைகள் பிறவினைகளாகும்போது என்னென்ன மாறுதல்களை அடைகின்றன ?

## பயிற்சி:

1. பிழை திருத்தி அமைக்க :—

i. அவன் தன் தந்தையுடனும் அண்ணனுடனும் சென்றோம்.

ii. நானும் என் தமக்கையும் மாமியும் பார்த்தேன்.

iii. அரண்மனையும் அதைச் சூழ்ந்த தோட்டமும் அழகாய் இருந்தது.

iv. ஆசிரியரும் பிள்ளைகளும் சேர்ந்து படத்தை வரைந்தான்.

2. முதல் பத்தியிலுள்ள அல், தல், கை விகுதிகளைப் பெற்ற தொழிற்பெயர்கள் யாவை?

3. இப்பாடத்திலுள்ள படர்க்கைப் பன்மை, தன்மைப் பன்மை வார்த்தைகளை எடுத்துக்காட்டுக.

4. தன்வினை, பிறவினை—இரண்டிரண்டு உதாரணங்கள் குறிப்பிடுக.

5. தடித்த எழுத்திலுள்ள சொற்கள் எச்ச வினையா, முற்று வினையா?

i. மரங்கள் **அடர்ந்திருக்கும்**.

ii. மக்கள் **அடர்ந்திருக்கும்** இடத்தில் பல நோய்கள் **பரவும்**.

iii. சந்தனம், ஏலம், ஜாதிக்காய் முதலியன **பழுத்து** மணம் **வீசும்**.

iv. இங்கு **வீசும்** காற்று மிகக் குளர்ச்சியாயிருக்கிறது.

6. குற்றாலமலையின் இயற்கை வளத்தைக் குறித்து இருபது வரியில் எழுதுக.

7. அங்குள்ள நீர் வீழ்ச்சிகளையும், அவற்றில் **நீராடுவதனால்** உண்டாகும் நலங்களையும் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## 16. செய்தித்தாள்

1. உலகில் ஆங்காங்கே நடைபெறும் செய்திகளை எங்கும் பரப்பும் பத்திரிகைகளைச் செய்தித்தாள் என வழங்குகின்றோம். இதில் ஆண்டுச் சஞ்சிகை, மாதச் சஞ்சிகை, வாரச் சஞ்சிகை எனப் பல பிரிவுகள் இருக்கின்றன. ஆண்டு மாத வாரச் சஞ்சிகைகளில் இலக்கியக் கட்டுரைகள், தொடர்கதைகள் முதலியனவும், உலகச் செய்திகள் சிலவும் இருக்கும். தினப்பத்திரிகைகளில் உலகவாழ்க்கைக்கு வேண்டும் செய்திகள் பலவும் இருக்கும். படித்தவர்களுள் பலர் தினப்பத்திரிகையைப் படித்தே பிறரைப் பற்றியும், பிற இடங்களைப் பற்றியும், அங்கங்கு நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளுகின்றனர்.

2. நம் இந்தியாவில் பத்திரிகைகளே இல்லாத ஒரு காலம் இருந்தது. அச்சு யந்திரங்கள் ஏற்பட்ட பல வருஷங்களுக்குப் பின்பே ஒவ்வொரு பத்திரிகையாக வெளி வரத் தொடங்கிற்று. ஆயினும், இப்போதுள்ள பத்திரிகைகளும் போதுமானவையல்ல. இன்னும் உயரிய பொருள்களைக் கொண்ட பத்திரிகைகள் பல வெளி வரல் வேண்டும். இப்போது பெரும்பான்மையாகப் பத்திரிகைகளில் வெளி வருவன, வேடிக்கை, விகடம், கட்டுக்கதை என்பவைகளே. மக்கள் திருத்தமான மொழியைக் கற்றுக்கொள்ளவும், சிறந்த அறிவைப் பெறவும் பொருத்தமான செய்தித்தாள்கள் இன்

னும் பல வேண்டும். நம் நாட்டு மக்களுள் பெரும்பான்மையாருக்குப் பத்திரிகைகளைப் படித்துப் பல பொருள்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாவதில்லை. மேல் நாட்டு மக்களுள் பெரும்பான்மையோர், பத்திரிகைகளிலேயே எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொண்டு, அறிவும் அனுபவமும் பெறுகிறார்கள். இவற்றால் மேல்நிலை அடைந்தவர் கணக்கற்றவராவர்.

3. இப்பத்திரிகைகளைச் சிலர் சொந்தமாக வாங்கிப் படிக்கின்றனர். மாணவ மாணவிகளுக்கு அந்தந்தப் பள்ளிக்கூடங்கள் இவைகளைத் தருவிக்கின்றன. ஆனால், கீழ்த்தரப்பள்ளிகளில் செய்தித் தாள்களை வரவழைப்பதில்லை.

4. இப்போது அரசாங்கத்தார் வாசக சாலை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதில் பல விதப் பத்திரிகைகளும் இருக்கும். அங்குப் படிக்கும் நேரத்தைக் குறித்திருத்தலால், குறித்த நேரத்தில் சென்றால்தான் படிக்க முடியும். ஆடவர்களுள் சிலர் அவண் சென்று படிப்பர். இதனால் அவ் வாசகசாலைக்கு வரும் பலருடைய நட்பும் கிடைக்கும்; பணச் செலவில்லாமலே, பத்திரிகையைப் படித்து, அதன் பயனை அடையலாம். ஆனால், பெண்களுக்கு இத்தகைய வாசகசாலை ஒன்றும் இல்லை. பெண்களுடைய சங்கங்கள் சிலவற்றில் இந்த வசதி இருக்கிறது. ஆயினும், பெண்கள் அதிகமாக அங்குச் சென்று படிப்பதில்லை.

5. மாணவருக்கு நூல் நிலையத்தைப்போல வே செய்தித் தாள்களும் அவசியமாகும். ஏனெனில், அவர்கள் பாடபுத்தகங்களையே படித்துக் கொண்டிருப்பின், அவர்கள் அறிவு அவ்வளவு விரிவடைதல் அருமை. வேறு பல நூல்களைப் படிப்பது போலச் செய்தித் தாள்களையும் படித்தல் நல்லது. அப்போது அவர்களுக்கு உலகப் போக்கும் கால நிலையும் தெரியும். எல்லாச் செய்தித் தாள்களையும் ஒவ்வொரு மாணவரும் வாங்கிப் படிக்க முடியாது; அதிகப் பணச் செலவாகும். ஆதலின், இவ்வுதவியைச் செய்வதற்குப் பொது இடங்களே தக்கனவாகும். எல்லாப் பாடசாலைகளிலும் வாசகசாலை வைத்துச் செய்தித் தாள்களை வரவழைத்து அவற்றைப் படிக்குமாறு குழந்தைகளை ஊக்குதல் நலமளிப்பதாகும். ஆயினும், மாணவர் பத்திரிகைகளைப் படிப்பதிலேயே அதிக நேரத்தைப் போக்குமாறு அவர்களை விடுதல் கூடாது அவர்கள் அவற்றினிடம் அதிக விருப்பத்தை வைத்துவிடுவார்களானல், மற்றப் பாடங்களில் அவர்கள் மனம் செல்லாது.

6. செய்தித் தாள்களினல் வெள்ளி, பொன், உணவுப் பொருள்கள் முதலியவற்றின் விலைகள் தெரிகின்றன; வீடுகள், உத்தியோகங்கள் எங்கெங்குக் காலியாய் இருக்கின்றன என்பதையறியலாம்; ஆயிரமைலுக்கு அப்பால் நடக்கும் விஷயங்கள், பெரிய சங்கங்களில் பேசும் பேச்சுக்கள், புகை வண்டி புறப்படும் நேரம், திருமண நிகழ்ச்சி

கள், நாட்டு நடப்புக்கள், பல புதிய ஆராய்ச்சியின் நன்மைகள், சீதோஷ்ண நிலைமை, அங்கங்கு நடக்கும் விளையாட்டுப் பந்தய முடிவுகள் முதலிய பலவற்றைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ளலாம். பொதுவாகக் கூறின், செய்தித் தாள்கள் தெரிவிக்காத விஷயங்களே இல்லையென்று சொல்லிவிடலாம்.

அருஞ்சொற்பொருள் :

செய்தித்தாள்கள்-உலகச் செய்திகளைத் தெரிவிக்கும் பத்திரிகைகள், ஆர்வம்-விருப்பம், வாசக சாலை-பலபேர் சென்று பத்திரிகைகளை வாசிக்கும் இடம், வல்லுனர்-தேர்ச்சி பெற்றவர்.

வினாக்கள்:

1. 'செய்தித் தாள்' என்னும் பெயர் பத்திரிகைக்குப் பொருத்தமுடையது தானா?

2. இஃது எத்தனை வகைப்படும்?

3. செய்தித் தாள்களினால் நாம் பெறும் பயன்கள் யாவை?

4. வாசகசாலையினால் நாம் என்ன நன்மையை அடைகின்றோம்?

5. மாணவருக்கும் செய்தித் தாள்களுக்கும் உள்ள தொடர்பு யாது?

இலக்கணம் :

1. 'உடம்படு மெய்' என்பது யாது? இஃது எத்தனை வகைப்படும்?

2. கட்டளை வாக்கியத்திற்கும், வினா வாக்கியத்திற்கும் வேறுபாடு யாது?

பயிற்சி :

1. இவ்வாக்கியங்களைத் திருத்தி எழுதுக :—
   - i. நேற்று அவன் விரைவாக வருவான்.
   - ii. கமலாவும், பார்வதியும் நடித்தால் நன்றாக இருந்தது.
   - iii. நானும் தம்பியும் கோவிலுக்குப் போய் வந்தேன்.
   - iv. நீ எப்போது திரும்பி வருவீர்?
   - v. வேலைக்காரி நாளைக்கு வந்தாளா?

2. செய்தித் தாள்களின் பயன்களை ஒரு பக்கத்தில் எழுதுக.

3. வாசக சாலைக்கும் நூல் நிலையத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

# 17. வள்ளல் பேகன்

## காட்சி—1

**இடம் :**—அரசசபை

**காலம் :**—காலை

**பாத்திரங்கள் :**—பேகன், கபிலர், பரணர்.

[வள்ளல் பேகன், புலவர்களுக்குப் பரிசில் வழங்குகிறான்.]

**பேகன் :** வாருங்கள், வாருங்கள்! என் உள்ளம் கவர்ந்த புலவர் பெருமக்களே, தயை செய்து இப் பீடத்தில் அமருங்கள்! உங்கள் வரவு நல்வரவாகுக! உங்கள் வரவால் என் நாடு புனிதமுற்றது!

**கபிலர் :** திருமகள் கண்ணோக்கம் பெற்ற பெரு மகனே, வரையாது கொடுக்கும் வள்ளலே, உன்

ஈகை, இன்னர் இனியார் என்னும் பாகுபாடின்றி நடந்து வருகின்றது. இரப்பார் 'போதும்' என்னுமளவும் ஈந்து உவக்கும் எம் அண்ணலே, உன் கொடையின் நலம், உன்னிடம் அணுகியவர் வறுமையை முற்றும் போக்குமென்பது நிச்சயம்.

பேகன் : கபிலர் பெருமானே, பரிசனவேதி தன்னைச் சேர்ந்த தாழ்ந்த உலோகத்தையும் பொன்னாக்குவது போல, உங்கள் சேர்க்கையே என்னை இத்தகைய உயர்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது என்பதில் ஐயமின்று. எனது நன்றி என்றும் உங்கட்கு உரியதாகுக !

பரணர் : கருணையே உருவெனக்கொண்ட காவலனே, பேரறிவு படைத்த பெருமகனே, நின் புகழ் பல நாடுகளிலும் பரந்துளது. போர்க்களத்திலும் நீதி நோக்கும் போர்வல்லவனே, என்றேனும் உன் அம்புகள் அஞ்சி ஓடினவரைப் பின்தொடர்ந்தனவா ? முதியருக்கும் இளைஞருக்கும் இடுக்கண் இழைத்தனவா? ஆவினையும் அந்தணரையும் அலக்கழித்தனவா ? நங்கையரை நடுக்கமுறச் செய்தனவா? இல்லையே! இவைகளினலல்லவா நின்வீரம் பகைவராலும் பாராட்டப்படுகிறது?

பேகன் : உலகினர் போற்றும் பரணரே, நல்லார் கூட்டுறவால் அடையாத பொருள் யாதுளது? உங்கள் அன்பேஎனக்கு ஆண்மையை அளித்தது. உங்கள் கருணையே என் அறிவை வளர்க்கின்றது. ஆகவே, நான் பெறும் புகழ் முழுதும் உங்கள் அருளால் கிடைத்ததேயாகும். நான் என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன்.

**கபிலர்:** மதி நலம் படைத்த மன்னவனே, கொடைத்திறம் மிக்க கொற்றவனே, நின் வள்ளன்மை திருமாலுக்கு மூவடி மண் தந்த மகாபலியின் அறத்தையும் பின்னிடச்செய்வது! ஒளியாது கொடுப்பதனாலேதான் நின் கரம் அளவு கடந்து நீண்டிருக்கிறது போலும்! கற்பினுக்கணியாம் கண்ணகியைக் காதற்கிழத்தியாகப் பெற்றுள்ள காவலனே, பாவலரது பாமாலை பூண்டு களிப்பெய்தும் செல்வனே, நின் வள்ளன்மை என்றும் விளங்குக! நின் செங்கோல் ஓங்குக!

**பேகன்:** புலமைச் செல்வர்களே, உங்கள் அன்பு என்னை அளவு கடந்து புகழும்படி செய்துளது! பெருந்தகையீர், இன்று யான் மனமுவந்து ஈயும் இச்சிறு பரிசில்களை என்றும் போல இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கபில பரணர்:** உன் திருவுளப்படியே ஆகுக! நீ பல்லாண்டு இன்புடன் வாழ்வாயாக!

## காட்சி—2

**இடம்:**—மலையைச் சார்ந்த காடு

**காலம்:**—மாலை நேரம்

**பாத்திரங்கள்:**—பேகனும் காவலனும்

**பேகன்:** (ஒதுக்கிடத்திலிருந்து வெளி வந்து) என்ன மழை! என்ன மழை! காவல, இன்று பெய்த மழையைப்போல என்றும் பெய்ய யான் கண்டதில்லை! குளிரோ, நம்மை நடுங்கச் செய்கி

றது! வாடையோ, வழி நடக்கவொட்டாது நம்மைத் தடுக்கிறது! பாவம்! இப்பேய்க்காற்றில் அகப்பட்ட இம்மரங்கள் நிற்க முடியாமல் தத்தளிக்கின்றதைப் பார்!

காவலன் : ஆம் அரசரே, மழை நின்றும் காற்றின் வேகம் குறைந்திலது. பொழுதோ, சாய்ந்துகொண்டிருக்கிறது. நாம் விரைவில் ஊரடைதல் வேண்டும். (இருவரும் விரைந்து நடக்கின்றனர்.)

பேகன் : (சிறிது நின்று) ஆ! அதோ! அதோ! அம்மணல் மேட்டின்மீது பார்! ஒரு பறவை குளிரால் நடுங்கிக்கொண்டிருக்கிறது! ஐயோ! பாவம்! அதன் அருகில் செல்வோம் விரைந்து வா!

காவலன் : (வேகமாய்ச் சென்று அவ்விடத்தை அடைந்து) வேந்தரே, இஃது ஓர் ஆண்மயில்; மழையில் முற்றும் நனைந்து குளிரால் நடுங்கிக்கொண்டிருக்கிறது. மாரிகாலத்தில் பறவைகளெல்லாம் நனைந்து துன்புறுவது இயல்புதானே! இதில் வருந்தத்தக்கது யாதுள்ளது?

பேகன் : என்ன சொன்னாய் காவல! இப்பறவையின் நடுக்கம் உன் கண்ணிற்குத் தோன்றவில்லையா? மயில், மேகத்தைக் காணின் மகிழ்ந்து தன் தோகையை அழகுற விரித்தாடித்தானும் மகிழ்ந்து பிறரையும் இன்பத்தில் ஆழ்த்தும் இயல்புடையதன்றோ? அங்ஙனமிருக்க, இக்குளிருக்கு ஆற்றாத இம்மயில் நடுக்கத்துடன் அசைந்துகொண்டிருப்பதைப் பார்! இதனால், இது வாடையால் வருந்துகிறதென்பது தெரியவில்லையா? இதனைத் தெரிந்து

கொள்ளாத உன் நிலையினை என்னவென்று இயம்புவது! நம்முயிரைப்போன்றே பிற உயிரையும் பேண வேண்டுவது நம் கடமையல்லவா? (மயிலைப் பார்த்து) அந்தோ! மயிலே, நின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கது! நீ பேசும் தன்மை பெற்றிருப்பின், நின் துன்பத்தைப் பிறரிடம் சொல்லிப் போக்கிக்கொள்வாயல்லவா? நின் துன்பத்தைக் கண்டும் அதனைப் போக்காது செல்பவர்கள் கருணையற்றவர்களேயாவார்கள். அம்மம்ம! இவ்வுலகம் துன்பத்தாலும், துயரத்தாலுமே நிரப்பப்பட்டுள்ளது! நான் காணும் ஒவ்வோர் உயிரும் ஏதோ ஒரு வகையால் இன்னலுற்றிருக்கிறது! அந்தோ! அந்தோ! இம்மயில் எவ்வளவு நடுங்குகிறது! இதன் துன்பத்தைக் காண என் கண்கள் கூசுகின்றன! மனம் வேதனையில் ஆழ்கின்றது! இதனைப் போக்க யாது செய்யலாம்! (சிறிதுநேரம் யோசித்து) ஆம்! ஆம்! இதுதான் தக்க உபாயம்! இதோ யான் போர்த்திருக்கும் இப்போர்வையே இதன் துன்பத்தைத் துடைக்கவல்லது. மயிலே, இனி நீ கவலையொழிவாயாக! இதோ இக்கலிங்கத்தை உன்மேல் போர்த்துகிறேன். இது உன் குளிரைப் போக்கும். அதனால், நீ துன்பம் நீங்கி இன்புற்றிருப்பாய்.

[அருகில் சென்று அப்போர்வையை மயிலுக்குப் போர்த்தி மன்னன் மனம் மகிழ்கிறான்.]

காவலன்: (தனக்குள்) நம் மன்னர் புத்தி இப்படியும் மாறுமா! மழை காலத்தில் மழை பெய்வதும், பறவைகள் நனைவதும் இயற்கைதானே!

அவை தம் குளிரைப் போக்கிக்கொள்ளுதற்கெனக் கடவுள் அவற்றுக்கு அடர்ந்த இறகுகளைக் கொடுத்திருக்கின்றாரல்லவா ? இந்த எண்ணம் அரசருக்கு இல்லை போலும்! இருந்தால், விலை பெற்ற இப்பட்டை இதன்மீது போர்த்துவாரா! இதுவும் ஒரு கொடையா! நாள்தோறும் புலவர்களும், கவிவாணர்களும், வறியவர்களும் அரசஅவைக்கு வந்தவாறேயிருக்கின்றார்கள். ஊர்நடுவில் இருக்கும்குளம் யாவருக்கும் நீர் வேட்கையைப் போக்குவதைப் போன்று, இம்மன்னர் அனைவருக்கும் வேண்டுவன ஈந்து அவர்களது வறுமையைப் போக்குகின்றார். இது சிறந்தததுதான். ஆனால், தான் பெற்ற பொருளின் ஏற்றமறியாத இம்மயிலுக்கு இக்கலிங்கத்தை இட்டது மிக்க அதிசயந்தான்! இவ்வரம்பு கடந்த செய்கை இவரை வறுமைக்குள் வீழ்த்தாதோ! (சிறிது யோசித்து) அரசர் செய்கையை வெறுக்கும் நான்தான் அறிவற்றவன். இன்றைய காரியம் நம் வேந்தர் தம்முயிரைப் போன்றே பிற உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுகிறார் என்பதற்கும், இவர் பெரிய வள்ளல் என்பதற்கும் எடுத்துக்காட்டாய் இருக்கிறது. இது யாவருக்கும் அமைவதொன்றோ! ஈகையும், தயையும் பிறவிக்குணமென்று நீதி நூல்கள் பேசுகின்றன அல்லவா? இஃது இவரது பிறவிக்குணம். இச்சிறந்த செய்கையை நாடறியச் செய்தலே நமது கடனாகும்.

[காவலனும் அரசனும் செல்கின்றனர்.]

## அருஞ்சொற்பொருள் :

பீடம் - இருக்கை, புனிதம் - தூய்மை, வரையாது - அளவு செய்யாமல், ஈகை - தருமம், பாகுபாடு - பிரிவு, ஈந்து + உவக்கும் - கொடுத்து மகிழும், பரிசனவேதி இரும்பைப் பொன்னுக்கும் கருவி, ஆவினை - பசுவை, இடுக்கண் - துன்பம், கொற்றவன் - மன்னவன், பரிதபிக்கத்தக்கது - இரங்கத்தக்கது.

## கேள்விகள் :

1. கபிலர் வள்ளலை எங்ஙனம் புகழ்கின்றனர்?

2. பேகன் புலவர்களிடத்துக் கொண்டிருந்த கருத்துக்கள் யாவை?

3. பேகனுடைய தன்னலங்கருதாத் தன்மையை விளக்குக.

4. இறுதியில் காவலன என்ன தீர்மானத்திற்கு வந்தான்?

## பயிற்சி :

1. வரையாது, பரிசனவேதி - இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

2. இரண்டாவது காட்சியைக் கதைப்போக்கில் கூறுக.

3. உங்களுள் மூவர் பேகன், பரணர், கபிலராய் இருந்து சம்பாஷிக்க.

# 18. தமிழ்த் தனித் தலைவர்

1. நம் நாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவு, ஒழுக்கம், நாகரிகம் முதலியவற்றில் மற்ற நாடுகளினும் முன்னணியில் நின்றதென்பது யாவரும் அறிந்ததே. அதற்குக் காரணம், நம் நாட்டுப் புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல்களுமே என்னலாம்.

2. இத்தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் நடைபெற்றன. அவ்வக்காலங்களில் இருந்த புலவர்கள், தத்தம் புலமைக்கேற்பப் பல நூல்களை வெளியிட்டார்கள். ஆயினும், அவற்றுள் பல, கடல் வெள்ளம், தீ, பிறர் கொடுமை, தமிழர் கவனக்குறைவு, கறையான் திறமை முதலியவற்றால் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. பின்பு எஞ்சி நின்றன மிகச் சிலவேயாகும். அவைகளும் ஓலைச் சுவடிகளாயிருந்தமையின், கற்றவர்க்கும் அவற்றைப் படித்தறிதல் கடினமாயிருந்தது. இப் பெருங்குறையை நீக்கித் தமிழையும் தமிழரையும் வாழ வைத்த பெருந்தகையார் **மகாமகோபாத்தியாய தாட்சிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர்** என்பவராவர். சுருங்கச் சொல்லின், தமிழ் நாட்டை இலக்கியங்களால் உயிர்ப்பித்தவர் இவரே எனக் கூறுதல் மிகையன்று. இவரைத் தமிழுக்குழைத்த ஒப்பற்ற தலைவர் எனச் செப்புதலே பொருத்தமுடையதாகும். இத்தகைய சீரியர் வாழ்க்கை வரலாற்றை நம் இளைஞர்கள் அவரவர் வகுப்பிற்கும்,

கல்விக்கும், வயதிற்கும் ஏற்பச் சிறிதேனும் அறிதல் இன்றியமையாததாகும்.

3. இப்பெரியார் தஞ்சை ஜில்லாவில் உள்ள பாபநாசத்திற்கு அடுத்த உத்தமதானபுரத்தில் 1855-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 19-ஆம் தேதி



வேங்கட சுப்பய்யருக்கும் சரஸ்வதியம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினர். இவருடைய பிள்ளைத்திரு

நாமம் வேங்கடராமன் என்பது. ஆனால், இவரை எல்லாரும் சாமிநாதன் என்றே வழங்கினர்.

4. ஐயரவர்கள் முதல் முதலில் படித்தது திண்ணைப்பள்ளிக்கூடம். இளமையிலேயே இவர் சிறிது சங்கீதமும் பயின்றார்; பின்பு தமிழில் ஆர்வங்கொண்ட இவர், அரியலூர்ச் சடகோபய்யங்கார் அவர்களிடமும் விருத்தாசல செட்டியார் அவர்களிடமும் சிறு சிறு பிரபந்தங்கள் சிலவற்றையும், சில இலக்கண நூல்களையும் கற்றார். ஆயினும், அவற்றுடன் இவருக்குத் தமிழில் இருந்த ஆர்வம் அடங்கிற்றிலது. ஆதலின், திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்க வேண்டுமென்னும் அவா இவரைத் தூண்டிற்று. அவ்வமயம் இவருக்கு வயது பதினேழு.

5. அதன்பொருட்டு இவர் தந்தையார், இவரை மாயூரத்திற்கழைத்துச் சென்று, பிள்ளையவர்களிடம் ஒப்புவித்து, மிக்க துயரத்துடன் தம் ஊர் திரும்பினர். ஐயரவர்களின் ஒழுக்கமும், நுட்ப அறிவும், தமிழார்வமும் பிள்ளையவர்களின் மனத்தைக் கவர்ந்தன. ஆதலின், பிள்ளையவர்கள் நூல்களின் நுட்பங்களை அள்ளி அள்ளி இவருக்கீந்தனர். அவற்றை ஐயரவர்கள் வாரி வாரித் தம் மனப்பேழையில் வைத்துப் பூட்டினர். அன்றியும், தம் ஆசிரியரால் இவருக்குச் செல்வர், சான்றோர், கற்றோர் இவர்களின் நட்பும் கிடைத்தது.

இவருக்கு ஆசிரியரிடம் மிக்க அன்பும் மதிப்பும் இருந்தன.

6. கும்பகோணத்தில் இருந்த கலாசாலையில் இவருக்கு 1880-ஆம் ஆண்டு ஆசிரியத் தொழில் கிடைத்தது. இவர் தம் ஆசிரியத் தொழிலை உள்ளன்புடனும், திறமையுடனும் நடத்தி, மாணவருடைய அன்பையும், அதிகாரிகளுடைய மதிப்பையும் பெற்றார்.

7. தம் தமிழ்த்தொண்டை அத்துடன் நிறுத்திக்கொள்ள ஐயரவர்களின் மனம் இடந்தந்திலது. ஓலைச்சுவடிகளாய் அமைந்திருந்த சங்க நூல்களையும் மற்ற நூல்களையும் கண்டார்; "இவற்றைத் தக்க முறையில் அச்சேற்றி, தமிழ்நாட்டினருக்கும் அயல் நாட்டினருக்கும் தமிழ்ச்சுவையையும், பண்டைய புலவரின் புலமையையும் விளங்கச் செய்வதே நாம் இப்போது செய்ய வேண்டுவது," என்னும் உறுதியைக் கொண்டார். இவ்வுறுதிக்கே நாம் இவருக்கு முதற்பரிசளித்தல் வேண்டும்.

8. பலருடைய பரண்களிலும், பேழைகளிலும், வேறு மறைவிடங்களிலும் பொதிந்து கிடந்த ஓலைச்சுவடிகளைத் திரட்டுதற்கு ஐயரவர்கள் மேற்கொண்ட முயற்சி அளவிடற்பாலதன்று. இதன் பொருட்டு இவர் அடைந்த துன்பங்கள் பலப்பல. ஆயினும், இவர் மனமோ, உடலோ, கலக்கத்தையோ, தளர்ச்சியையோ அடைந்திலது. இவர் சுவடியின் வடிவத்தில் ஒரு நூலைக் காணுங்கால்

கடவுளின் உருவத்தைக் கண்டதாகவே மகிழ்வாராம்.

9. இவர் முதல் முதலில் அச்சேற்றிய நூல் சிந்தாமணியாகும். இதனுடைய முதல் பதிப்பு 1887-லும், இரண்டாம் மூன்றும் பதிப்புக்கள் முறையே 1907-ஆம் ஆண்டிலும் 1922-ஆம் ஆண்டிலும் வெளி வந்தன. 1888-ஆம் ஆண்டு பத்துப்பாட்டும், 1892-ஆம் ஆண்டு சிலப்பதிகாரமும், 1898-ஆம் ஆண்டு மணிமேகலையும் அச்சேற்றப்பட்டன; இன்னும் அவ்வப்போது புறநானூறு, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, குறுந்தொகை, நன்னூல் முதலிய நூல்களும் வெளியிட்டனர். இவரைப்போன்று ஏட்டுப்பிரதிகளிலிருக்கும் பாட பேதங்களைக் கண்டுபிடித்து, முன்னுரை, குறிப்புரை, அரும்பதவுரை, விசேடவுரை, சொல்லகராதி முதலியவற்றுடனும், பிழையின்றியும், யாவரும் எளிதாகப் படித்து இன்புறும் முறையிலும் வெளியிடுவது எல்லாருக்கும் எளிய காரியமன்று. இதற்குப் போதுமான மனவுறுதியும், பொறுமை, கல்வி, அறிவு, ஆராய்ச்சி முதலியனவும் இன்றியமையாதனவாகும். இம்முறையில் இப்பெரியார் தமிழிற்கும் தமிழ் நாட்டிற்கும் இலக்கிய உயிரளித்தாரென்றே கூறுதல் வேண்டும். இன்றேல், நம் போன்றோர் தமிழ் இலக்கியங்களாகிய சங்க நூல்களை இத்துணை எளிதில் கற்றற்கும், அவற்றின் பொருளுணர்ந்து இன்புறுதற்கும் இயலுமா? சங்க நூல்கள்தாம் இவ்வளவு வெளிப்படையாக உலகில்

உலவ முடியுமா? நாம் தமிழ் நாட்டின் பண்டைய நிலைகளை அறிந்து பெருமை பாராட்டத்தான் இட மேற்படுமா? இவற்றிற்கெல்லாம் காரணர் யார்? தம் உடல் நலத்தையும், காலக்கழிவையும், பொருள் செலவையும் சிறிதுங் கருதாது தமிழிற்கெனவே உழைத்த நம் ஐயரவர்களே என்பதை யார் மறுக்கக்கூடும்! இத்தகைய பெருந்தகையாருக்கு நம் தமிழகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இவர் புரிந்த பேருதவி மறக்குந் தன்மையதன்று.

10. இவர் 1903-ஆம் ஆண்டிலிருந்து பிரஸிடென்ஸிக் கலாசாலையில் பதினறு ஆண்டுகள் ஆசிரியத் தொழில் புரிந்து வந்தார். அக்காலத்தில் தமிழாசிரியரிடமும் தமிழினிடமும் மாணவருக்கிருந்த மதிப்புக்குறைவு, இவர் காலத்தில் அறவே ஒழிந்தது. இவருடைய உலக அனுபவமும், போதனு முறையும் மாணவரைத் தம் வசப்படுத்தியது மட்டுமே அல்லாமல், அதிகாரிகளையும் மகிழச்செய்தன. யாவரும் இவரிடம் மதிப்பும் அன்பும் காட்டினர். 1919-ஆம் ஆண்டில் இவர் அக்கலாசாலையை விட்டு நீங்கினர். மாணவர்களால் இவருடைய உருவச்சிலை அக்கலாசாலையின் வெளியில் நிறுவப்பட்டுள்ளது. இவர் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் இளமாணவருக்கு நூலறிவையும் உலகறிவையும் ஊட்டி வந்தார். 1924-ஆம் ஆண்டு ராஜா ஸர். அண்ணமலைச் செட்டியார் கலாசாலைக்குத் தலைமை தாங்கி, மூன்று ஆண்டுகள் அக்காரியத்தை மிகத் திறம்பட நடத்தி வந்தார்.

11. இவர் 1905-ஆம் ஆண்டு ஆயிரரூபாய் சன்மானமும், 1906-ஆம் ஆண்டு மகாமகோபாத்தியாயர் பட்டமும் பெற்ருர். இவருக்கு 1917-ஆம் ஆண்டு பாரத தர்ம மகா மண்டலத்தார் திராவிட வித்தியா பூஷணம் என்னும் பட்டத்தையும், 1925-ஆம் ஆண்டு காஞ்சி காமகோடி மடாதிபதிகள் தாக்ஷிணுத்ய கலாநிதி என்னும் பட்டத்தையும் மனமுவந்து அளித்தனர். அந்த ஆண்டிலேயே மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாவில் இவருக்கு 5000 ரூபாய் அடங்கிய பணப்பை ஒன்று வழங்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பகோணக் கல்லூரியின் வைர விழாவின் போது, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரானுல் தரப்பட்ட இவர் உருவச்சிலை அவண் வைக்கப்பட்டது. 1932-ஆம் ஆண்டு சென்னைச் சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழாவில் இவருக்கு இலக்கியப்பேரறிஞர் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

12. இப்பெரியார், தம் ஆசிரியருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியது போன்றே தம் வாழ்க்கை வரலாற்றையும் ஆனந்த விகடனில் எழுதி வந்தார். ஆனுல், அது முற்றுப்பெறுதற்கு முன்பு இவர் இவ்வுலகை விட்டு நீங்கியது வருந்தத்தக்கதாகும்.

13. இப்பெருந்தகையாருக்கு 1935-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 5-ஆம் தேதியன்று சதாபிஷேகம் (எண்பதாம் ஆண்டு விழா) கொண்டாடப் பெற்றது. அப்போது தமிழ் நாடு முழுதும் குதூ

கலித்தது. ஐயரவர்களின் உருவப்படம் ஸெனட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டது. பாராட்டுக் குழு வின் சார்பாக இவருக்கு 3000 ரூபாய் அடங்கிய பண முடிப்பு ஒன்று அளிக்கப்பட்டது.

14. என்றும் அழியாததும் தமிழ்த்தாயின் உள்ளவுவப்பிற்குக் காரணமானதுமான தமிழ்த் தொண்டைப் புரிந்த நம் ஐயரவர்கள், தம் எண்ப தாம் ஆண்டில் இறைவனடியைச் சார்ந்தார். இவர் ஆன்மா பரமான்மாவின் தாளில் ஆனந்தத்துடன் சாந்தமுற்றிருக்கும் என்பது நிச்சயம்.

அருஞ்சொற்பொருள் :

கறையான் - சிதல், எஞ்சி - மிகுந்து, ஆர்வம் - ஆசை, பரிசு - வெகுமதி, பொதிந்து - மறைந்து, சிந்தா மணி - சீவகன் சரிதத்தைச் சொல்லும் நூல், அறவே - முற்றும், திறம்பட - வன்மையுடன், குதூகலிப்பு - மிகு மகிழ்ச்சி, வைரவிழா - அறுபதாம் ஆண்டு கொண்டாடப் படும் கொண்டாட்டம்.

வினாக்கள் :

1. ஐயரவர்களின் இயற்பெயரும் பெற்றோர் பெயர் களும் யாவை?

2. ஏன் சங்ககால நூல்கள் யாவும் நமக்குக் கிடைக்கவில்லை?

3. ஐயரவர்கள் இளமையில் யார் யாரிடம் என் னென்ன நூல்களைப் பயின்றார்?

4. சாமிநாதையரவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களால் பெற்ற நன்மைகள் யாவை?

5. இவர் எங்கெங்கு ஆசிரியத் தொழில் புரிந்தார்?

6. இவர் செய்த சிறந்த தமிழ்த்தொண்டு யாது?

7. ஐயரவர்கட்குக் கிடைத்த பட்டங்களும் பரிசுகளும் யாவை?

8. இவருடைய உருவச்சிலைகள் எங்கெங்கு நிறுவப்பட்டன?

பயிற்சி :

1. தமிழர் எவற்றை நாகரிகம் எனக் கருதுகின்றனர்?

2. பழைய ஓலைச் சுவடிகளை இப்போது எங்கெங்குக் காணலாம்?

3. இலக்கியம் இலக்கணம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

4. திண்ணைப்பள்ளிக்கூடத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்?

5. குறிப்புரை விசேடவுரை இவற்றிற்குள்ள வேறுபாடு யாது?

6. நன்றி மறத்தலைப்பற்றித் திருவள்ளுவர் கருத்து யாது?

இலக்கணம் :

1. கறையான் திறமை, குறையைநீக்கி, இவர் தந்தையார், சீரிய வாழ்க்கை, ஊர் திரும்பினர், இவருக்கு வயது —இவற்றிலுள்ள வேற்றுமைத்தொகை வேற்றுமை விரிகளை எடுத்துக்காட்டி, விரியைத் தொகையாகவும், தொகையை விரியாகவும் மாற்றுக.

2. இப்பாடத்திலுள்ள நான்கு எதிர்மறை வாக்கியங்களையும் நான்கு உடன்பாட்டு வாக்கியங்களையும் எடுத்துக்காட்டுக.

3. இதிலுள்ள அடுக்குத் தொடர்கள் எவை?

4. இரண்டு தன்வினை வாக்கியங்களைப் பிறவினை வாக்கியங்களாக்குக.

# 19. தமிழிசை

1. 'தமிழிசை' என்பதற்கு 'இனிய இசைப் பாட்டு' எனப் பொருள் கொள்ளலாம். தமிழ் எனினும் இனிமை; இசை எனினும் இனிமை. இதனால், மிக்க இனிமைத்தரக்கூடியது எதுவோ, அது தமிழிசை எனக் கூறப்படும். மற்ற மொழிகளைக் காட்டிலும் தமிழுக்கு இசையோடு மிக்க ஒற்றுமை உள்ளது. இது தமிழுக்கு ஓர் அங்கமாய் அமைந்திருப்பதே இதற்குப் போதிய சான்றாகும். தமிழை மூன்றாகப் பிரித்து இசைத்தமிழை இடையில் வைத்திருப்பதால், இசை சிறப்புடையதெனக் கருதப் படுவது மட்டுமேயன்றி, தமிழ் முழுமையிலும் இசை கலந்திருக்கின்றதெனவும் கொள்ளுதல் வேண்டும்,

2. பண்டைய தமிழ் நாட்டில் ஒவ்வொரு தொழிலினருக்கும் ஒவ்வொரு பெயரிடப்பட்டது போன்றே, இசையில் வல்லுநருக்குப் பாணர் எனப் பெயரிட்டனர். அவ்வகுப்பைச் சார்ந்த பெண்பாலுக்குப் பாடினி என்பது பெயர். இவர்கள் பல இடங்களிலும் பரவி இருந்ததுமன்றித் தமிழ் மன்னர் அவைகளையும் அலங்கரித்து வந்தார்கள். குடிகளுக்கும் மன்னருக்கும் இடையே அன்பையும் அருளையும் வளர்த்து வரும் இயல்பும் இவர்களிடம் பொருந்தியிருந்தது.

3. யாவராலும் போற்றப்பட்டு வரும் அவ்வையாரும், இப்பாணர் வகுப்பைச் சார்ந்தவரே. இவர் இன்னிசைப்பாக்கள் செய்யாத செயல்களும்

உண்டோ! அதிகமானுக்கும் தொண்டைமானுக்கும் ஏற்பட்ட வேறுபாட்டை நீக்கி ஒற்றுமையை உண்டாக்கியதும், பாரியின் மகளிர் மணத்திற்கு மூவேந்தரையும் வருவித்ததும், வெட்டி வீழ்த்திய பனந்துண்டத்திலிருந்து, இலை, பூ, காய், பழம் முதலியன உண்டாகுமாறு செய்ததும் அவ்வையாரின் இன்னிசைப் பாடல்களே அல்லவா?

4. ஒருகால் தினைப்புனத்தை மேய வந்த ஓர் யானை அப்புனத்தைக் காக்கும் மங்கையின் இசையில் ஈடுபட்டுத் தன் பசியையும் மறந்தது. வீர ரசம் பொருந்திய பாட்டைக்கேட்ட குதிரை ஒன்று மிக்க வீரத்துடன் பகைவர்மேல் பாய்ந்தது. ஆனாய நாயனார் கானகத்தில் புல்லாங்குழலை இசைத்ததும், பசு நிரைகள் கறித்த புல் வாய் வழி சோர அவர் அருகணைந்து நின்றன. தாய்ப்பசுக்களிடம் பாலைப் பருகிக்கொண்டிருந்த கன்றுகளோ, அச்செயலை விட்டுத் தம்மைத்தாம் மறந்து நின்றன. மயிலினங்கள் ஆடுதலையும், குயிலினங்கள் பாடுதலையும், தேனீக்கள் தேனுண்ணுதலையும் நீங்கி மயங்கி இருந்தன. இச்செய்திகள் யாவும் நம் தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன.

5. இவ்விசைக்கு அடிப்படைகளாயுள்ளன தேனும், பாலும், கன்னலும் கலந்ததெனக் காணும் நாயன்மாரின் தேவார திருவாசகங்களும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களுமேயாகும். இடைக்காலத்தில் தோன்றிய தாயுமானவர் பாடல் திருப்புகழ் முதலியனவும், இக்காலத்தில் உருக்

கொண்ட பாரதியார், வேதநாயகம் பிள்ளை, சம்ஸ்தான வித்துவான் - நாமக்கல் கவிஞர் முதலியவர்களின் பாடல்களும் தமிழிசையின் இனிமைக்கு எடுத்துக்காட்டுக்களே என்பதில் ஐயமின்று.

6. நாட்டுப் பாடல்களும் தமிழிசையைச் சார்ந்தனவே. இப்பாடல்கள் பல சுவைகளையும் பெற்று யாவர் மனத்தையும் கவரத்தக்கனவாயுள்ளன. இவற்றுள் வழக்கு வார்த்தைகளும் இயற்கை உணர்ச்சிகளும் அமைந்திருக்கும். ஆனால், கற்றோர் இவற்றைப் பாமரர் பாட்டுக்கள் என ஒதுக்கி வைத்தனர். அதனாலேயே இவை வளம் பெறாது மறைந்துகொண்டும் வருகின்றன. நம் தமிழ் நாட்டில் சுண்ணமிடிப்பவர், நெல் குற்றுபவர், களை எடுப்பவர் பாடும் இன்னிசைப் பாடல்களும் கவிகளும் கணக்கில் அடங்குவனவோ! இவை எளியார் வாழ்விற்கும் இன்பத்தையூட்டுவனவாகும். இந்நாட்டுப் பாடல்களுக்குக் கவிஞர் தாகூரும், பாரதியாரும், இன்னும் சில இயற்கைப் புலவரும் புத்துயிரளித்தனர். இவற்றின் மெட்டும் எளிதில் பாடக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இதை நாடோடி மெட்டு என்பர். இத்தகைய எளிய பாடல்களைச் சொற்களாலும் பொருளாலும் செம்மை செய்து இளைஞருக்கு இவற்றினிடம் இன்பமும் அன்பும் வளரச் செய்தல் நலம்.

7. இசையானது இயற்கையோடு பொருந்தியது என்பதை நம் தமிழரே முதன்முதலில் கண்டனர். இயற்கையோடு இசைவதே இசை என்ப

தும், அங்ஙனமல்லாதது வசை என்பதும் நம் பண்டையர் எண்ணம். இன்னும் இயற்கையுடன் கலந்து வாழ்க்கை நடத்திய தமிழர், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்களுக்கும் அப்பெயர்களையே கொண்ட பண்களை வகுத்தனர். அதற்கேற்ப இசைக் கருவிகளும் வரையறுக்கப்பட்டன.

8. இசைக்கலை தெய்விகத் தன்மையையும், ஆன்ம ஞானத்தையும், கற்பனை சத்தியையும் வளர்க்கக்கூடியது. இறைவர் இசை வடிவமாய் உள்ளவர். ஆதலின், அவரை அடைய இசையே சிறந்த வழி என அறிஞர் கூறுவர்.

9. இங்ஙனம் இசை பல நலங்களையும் அளித்து மக்களைச் செம்மைப்படுத்துகின்றமையின், நம் சிறுவர் சிறுமியர் இதைக் கற்று உயர்வாராக.

அருஞ்சொற்பொருள் :

பாணர் - பிறரைப் புகழ்ந்து பாடுபவர், ஈடுபட்டு - வசப்பட்டு, நிரைகள் - பசுக்கூட்டங்கள், அடிப்படை - காரணம், எடுத்துக்காட்டுக்கள் - உதாரணங்கள், களை - நெற்பயிரோடு சேர்ந்து வளரும் புல் முதலியன.

வினாக்கள் :

1. இசைக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு யாது?

2. அவ்வையாரின் இன்னிசைப்பாடல்கள் செய்த அற்புதங்கள் யாவை?

3. இசையின் சிறப்பைப்பற்றித் தமிழ் நூல்கள் செப்பும் செய்திகள் யாவை?

4. இசைக்கு அடிப்படைகள் எவை?

5. நாட்டுப் பாடல்களைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

6. இசை இயற்கையோடு பொருந்தியது என்பதை விளக்குக.

## இலக்கணம் :

1. தமிழிசை, அச்செயலை, ஐயமின்று, நாட்டுப் பாடல் - இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

2. மூவேந்தரும், இன்பமும் அன்பும்—இவைகளிலுள்ள உம்மைகளின் பொருள் என்ன?

3. அதற்கேற்ப இசைக்கருவிகளும் வரையறுக்கப் பட்டன.—தடித்த எழுத்திலுள்ளது என்ன வினை? எழுவாய் எது?

4. எட்டாம் பத்திமுதல் வாக்கியத்திலுள்ள வளர்க்கக்கூடியது என்னும் பயனிலையை வளரும் என மாற்றி வாக்கியத்தை அமைக்க.

## பயிற்சி :

1. இப்பாடத்தில் தெரிந்துகொள்ளுவனவற்றைப் பத்து வரிகளில் எழுதுக.

2. ஈடுபாடு, அடிப்படை, எடுத்துக்காட்டுக்கள் - இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

3. கீழ் வருவனவற்றிற்கு எதிர்ப் பதங்கள் கூறுக: ஒற்றுமை, மன்னர், அன்பு, பாணர், வீரன், அருகு, இனிமை, வசை.

4. ஐந்து நிலங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

# செய்யுட்பகுதி

## I. கடவுள் வணக்கம்

கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே!
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா! நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே? 1

—சுந்தரமூர்த்தி நாயனார்

வந்தாய்என் மனம்புகுந்தாய் மன்னி நின்றாய்
நந்தாத செழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!
சிந்தா மணியே! திருவேங் கடமேய
எந்தாய்!இனி யான்உன்னை என்றும் விடேனே. 2

—திருமங்கையாழ்வார்

வானேமகி தலமோசுடர் மதியோவயங் கொளிர்வான்
மீனேவிரி கடலோமழை முகிலோவொரு விதியில்
ஆனநெறி அமைத்தாக்கிய அகிலாண்டவச் சுதனோர்
ஊனுடிய திருமேனிகொண் டுதித்தாருல குவப்ப. 3

மறையார்த்தது மறையோதிய வரம்பார்த்தது ஞானத்
துறையார்த்தது சன்மார்க்கமெய்த் துணிபார்த்தது சுகிர்த
நிறையார்த்தது நலமார்த்தது நிலையாயர க்ஷணிய
முறையார்த்தது கதியாக்கமிம் முதுமாநிலத் துறவே. 4

—H. A. கிருஷ்ணப் பிள்ளை

அதிருங்க ழல்பணிந்துன் அடியேனுன்
அபயம்பு குவதென்று நிலைகாண?
இதயந்த னிலிருந்து க்ருபையாகி
இடர்சங்கை கள்கலங்க அருள்வாயே;

எதிரங்கொ ருவரின்றி நடமாடும்
இறைவன்த னதுபங்கில் உமைபாலா!
பதியெங்கி லுமிருந்து விளையாடிப்
பலகுன்றி லுமமர்ந்த பெருமாளே!

—அருணகிரிநாதர்

### அருஞ்சொற்பொருள்:

1. அருத்தம் - பொருள், பண் - இசை, பரமாய - மேலான, பரஞ்சுடரே - சிறந்த ஒளியே.

2. மன்னி - பொருந்தி, நந்தாத - அழியாத, செழுஞ்சுடரே - அழகிய ஒளியே, நம்பீ - ஆடவருட் சிறந்தவனே, சிந்தாமணியே - தேவமணியே, எந்தாய் - என் தந்தையே.

நம்பீ, சிந்தாமணியே, எந்தாய் - இவை விளிகள்.

3. வயங்கு ஒளி - விளங்குகின்ற ஒளி, மீன் - நட்சத்திரம், அச்சுதன் - அழியாதவன்.

4. வரம்பு - ஒழுங்கு, எல்லை - வழி, சுகிர்தம் - சன்மார்க்கம், நிறை - உறுதிப்பாடு, ரக்ஷணிய முறை - மோட்ச நிலை, கதி - மேலான நெறி, ஆக்கம் - உயர்வு, முதுமாநிலம் - பழைமையான பேருலகம்.

### வினாக்கள்:

1. பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே - இதற்குப் பொருள் கூறுக.

2. இச்செய்யுளிலிருந்து நீ கடவுளின் எத்தன்மைகளை அறிந்துகொள்ளுகின்றனை?

3. திருமங்கையாழ்வார் கடவுளை எவ்வெவ்வாறு விளிக்கிறார்?

4. ஆழ்வாருக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு யாது?

5. 'உதித்தார் உலகுய்ய.' யார்? எப்படி?

6. 'வானோ மகிதலமோ' என்று தொடங்கும் பாடலின் பொருளை எளிய உரை நடையில் எழுதுக.

7. இறைவன் இவ்வுலகில் தோன்றிய போது எவை ஒலித்தன?

8. அவ்வொலிகள் எதைக் குறிப்பனவாகும்?

9. அருணகிரிநாதர் இறைவனை எங்ஙனம் அழைக்கிறார்?

10. இறைவன் தமக்கு எதை அருளவேண்டுமென்பது அருணகிரிநாதரின் கருத்து?

## II. நீதிச் செய்யுள்

### 1. திருக்குறள்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்? 1

மனத்துக்கண் மாசில னாதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற. 2

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 3

அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 4

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 5

அழுக்கா றுடையார்க் கதுசா லும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 6

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும். 7
வறியார்க்கொன் றீவதே யீகை;மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 8
விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 9
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 10

## நூல் வரலாறு:

திருக்குறளைச் செய்தவர் திருவள்ளுவர். இவர் காலம் இடைச் சங்க காலம். இந்நூல் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களைப் பற்றியும் இயம்புகின்றது. எம்மதத்தினரும், எக்காலத்திலும் இன்பத்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொருள்களே இதில் அமைந்துள்ளன. இஃதொரு நீதி நூல். இது பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனாலேயே இதன் சிறப்பு வெளிப்படும்.

## அருஞ்சொற்பொருள்:

1. ஆய - உண்டான, என்-யாது? வால் அறிவன்-பரிசுத்தமான அறிவுடையவன், நல் தாள்-நற்றாள், தொழா அர் - வணங்கமாட்டார், கொல் - அசை.

செய்யுளில் ஓசை குறைந்த போது அவ்வோசையை நிரப்புவதற்காக நெட்டெழுத்துச் சிறிது நீட்டியொலிக்கப்படும். அதற்கு அறிகுறியாக அவ்வெழுத்திற்கினமான

குற்றெழுத்து வரி வடிவில் எழுதப்படும். அதற்கு அளபெடை என்பது பெயர். 'தொழாஅர்' என்னும் சொல்லில் உயிரெழுத்து அளபெழுந்துள்ளதால், இதற்கு உயிரளபெடை என்பது பெயர்.

2. மாசு இலன் - குற்றமற்றவன், ஆதல் - ஆகுக, அனைத்து - அப்படிப்பட்டதே, ஆகுலம் நீர - ஆரவாரத் தன்மையை உடையவை, பிற - அஃது அற்றோர் பேசும் சொற்களும் செய்யும் செயல்களும்.

3. பெறுமவற்றுள் - மக்கள் அடைதற்குரிய சிறந்த பொருள்களுள், அறிவறிந்த - அறிய வேண்டுவனவாகிய உண்மைப் பொருள்களை நன்கு ஆராய்ந்தறிந்த, பேறு - செல்வம்.

4. சார்பு - துணை, மறத்திற்கும் - பாவத்தை நீக்குதற்கும், அஃதே - அவ்வன்பே.

5. தினைத்துணை - தினையரிசி அளவான, பனைத்துணையா - பனம் பழத்தின் அளவாக, பயன் - அவ்வுதவியினால் உண்டாகும் பயனை.

6. அழுக்காறு - பொறாமை, அது சாலும் - அப்பொறாமையொன்றே போதியதாகும், ஒன்னார் - பகைவர் ('ஒன்றார்' என்பதன் மரூஉ.), வழுக்கியும் - தவறியும்.

7. புறங்கூறி - ஒருவர் எதிரில் இல்லாத போது அவரை இகழ்ந்து உரைத்து, பொய்த்து - அவரை நேரில் கண்ட போது புகழ்ந்து பேசி, அறங்கூறும் - தரும நூல்களில் கூறும், ஆக்கம் - பயனை.

8. மற்றெல்லாம் - ஏழைகளுக்குக் கொடாமல் செய்யும் மற்றத் தருமமுற்றும், குறி எதிர்ப்பு - குறிக்கப்பட்ட எதிர்ப்பயன், நீரது உடைத்து - தன்மையுடையதாகும். 'ஈவதே' - என்பதிலுள்ள ஏகாரம் வற்புறுத்திக் கூறுதலால் தேற்றேகாரமாகும்.

9. அனையர் - ஒப்பாவர், இலங்குநூல் - விளங்கிய சாஸ்திரம், ஏனையவர் - கல்லாதவர்.

10. உயர்வு - உயர்ச்சியையே, உள்ளல் - நினைக்கக் கடவர், தள்ளினும் - தம் தீய வினையால் கூடாமல் போயினும், அது - அவ்வுயர்ந்த நோக்கமானது, தள்ளாமை நீர்த்து - அறிவுடையவரால் இகழப்படாத தன்மையுடையது, மற்று - அசை.

## வினாக்கள் :

1. கற்பது எதன்பொருட்டு?
2. 'வாலறிவன்' என்பதற்கு ஏன் 'இறைவன்' எனப் பொருளுரைக்கின்றோம்?
3. 'நற்றாள்' என்பதன் கருத்தென்ன?
4. முதல் செய்யுளில் அசைச்சொல் எது?
5. 'திருக்குறள்' என்பதன் பொருள் என்ன? இதைச் செய்த ஆசிரியர் யார்?
6. குறள், குரல் - இரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது?
7. 'தொழாஅர்'—இதன் இலக்கணம் என்ன?
8. அறத்தின் இலக்கணம் என்ன?
9. 'பிற' என்றது எவற்றை?
10. மனிதர் பெற வேண்டிய பேறுகள் எத்தனை? அவற்றுள் சிறந்த நான்கைக் குறிப்பிடுக.
11. எத்தகையவர்கள் மக்களெனப்படுவார்கள்?
12. 'மக்கட்பேறு'—இதைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
13. 'அன்பு, அறத்திற்கே துணை,' எனக் கூறுபவர் யார்?
14. இன்னும் எதற்கு அன்பு துணையாய் இருக்கிறது?

15 ஏன் சிறு உதவியையும் பெரிதாகக் கொள்ள வேண்டும்? எப்படி?

16. அங்ஙனம் கொள்பவர் யார்?

17. 'துணை'—இஃது இங்கு என்ன பொருளில் இருக்கிறது?

18. 'அது சாலும்'—'அது' என்பது எது?

19. ஒன்றார்க்கு ஒப்பானது யாது?

20. 'தன் வினை தன்னைச் சுடும்,' என்பதைப் போன்று இங்குத் தன்னைக் கெடுப்பது யாது?

21. சாதல் எப்போது நன்மை தரும்?

22. 'புறங்கூறுதல்' என்பது என்ன?

23. அறநூல்கள் இயம்பும் இரண்டு நன்மைகளைக் கூறுக.

24. 'அறம் கூறும்'—இதில் அறம் என்பது என்ன பெயர்?

25. ஈகையின் இலக்கணம் யாது?

26. 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து'—இதை நன்கு விளக்குக.

27. உடல் வன்மையற்றவர்களுக்கு நாம் செய்ய வேண்டுவதாகிய உதவி யாது?

28. கல்லாத மக்களை விலங்கிற்கு ஒப்பாகக் கூறியதற்குக் காரணம் என்ன?

29. 'இலங்கும் நூல்'—எதில் இலங்கும் நூல்?

## 2. திரிகடுகம்

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்ரு னுழவும் - இளையனுய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 1

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை; யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை; இம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. 2

வள்ளன்மை பூண்டான்கட் செல்வமும், உள்ளத்
துணர்வுடையா னோதிய நூலும், புணர்வின்கண்
தக்க தறியுந் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம். 3

### நூல் வரலாறு :

இந்நூலின் ஆசிரியர் நல்லாதனர். இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் மும்மூன்று நீதிகள் சொல்லப்பட்டுள்ளன. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் திரிகடுகம் எனப்படும். அப்பொருள்கள் உடலிற்கு எப்படி நன்மை அளிக்குமோ, அப்படியே இம்மூன்று நீதிகளும் அறிவிற்குப் பயனளிப்பனவாகும்.

### அருஞ்சொற்பொருள் :

1. கிளைஞர் - சுற்றத்தார், பைங்கூழ் - பசிய நெற்பயிர், போற்ருன்-பாதுகாவாதவனுடைய, விளைவின்கண் + போற்ரு-விளைவின்கட்போற்ரு.

2. இருளுலகம் - நரகம், அருள் புரிந்து - அருளை விரும்பி.

3. பூண்டான்கண் - அணியாகக்கொண்ட வள்ளவிடம், புணர்வு - சேர்க்கை, பொத்து + இன்றி-பொத்தின்றி - தொளை இல்லாமல், உணர்வு -தெளிந்த அறிவு.

**வினுக்கள் :**

1. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'-இஃது எந்த நூலில் உள்ளது? முதற்செய்யுளில் இவ்வாக்கியத்தின் கருத்துள்ள சொற்களைக் கூறுக.

2. கட்குடியைப்போன்று செல்வத்தை அழிக்கக் கூடிய செயல்கள் இரண்டு சொல்லுக.

3. 'கிளைஞர்' என்பது இடுகுறிப் பெயரா, காரணப் பெயரா?

4. விளைவு காலத்தில் என்னென்ன முயற்சிகளைச் செய்ய வேண்டும்?

5. பொருளைச் சேகரிப்பதன் கருத்து எதுவாயிருத்தல் வேண்டும்?

6. 'இருளுலகம்' என்பது எது?

7. பிறரோடு எப்படிப் பேசுதல் வேண்டும்?

8. சிறந்த நூல்களை ஏன் படிக்க வேண்டும்?

9. வள்ளன்மையுடையானுக்குப் பெயரென்ன?

10. 'புணர்தல்' என்பதற்கு எதிர்ப்பதம் என்ன?

11. கல்வி கற்பதனல் நமக்கு என்ன உண்டாகும்?

**பயிற்சி :**

1. பொருள் கூறுக:—பைங்கூழ், விளைவின்கண், பெருநூலை, வள்ளன்மை, தக்கது.

2. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:—

பைங்கூழ், இம்மூன்றும், போற்றுனுழவு, உணர்வுடையானேதிய, அறநெறி.

3. 'பொத்தின்றிக் காழ்த்த மரம்' - மூவருக்கும் பொருத்திக் காட்டுக.

## 3. சிறுபஞ்சமூலம்

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்; நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம்; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம்; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு;
நாவிற்கு நன்றல் வசை. 1

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல; நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 2

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளால் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 3

### நூல் வரலாறு :

சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இதன் ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்தைந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர். இவர் சமயம் ஜைனம். இவர் காலம் திருவள்ளுவரின் காலத்திற்குப் பிற்பட்டதாகலாம்.

### அருஞ்சொற்பொருள் :

1. சினை - முட்டை, கூற்றம் - யமன், வலம்படா - வன்மையற்ற, மா-கவரிமான், ஞெண்டு - நண்டு, பார்ப்பு - குஞ்சு, நன்றல் வசை - நன்மையல்லாத இழிசொற்கள்.

2. உகிர் - நகம், வனப்பு - அழகு, செயிர் - குற்றம், நூற்கு இயைந்த - நூலுக்குப் பொருந்திய.

3. பிழைத்தல் - குற்றஞ்செய்தல், நகை - சிரிப்பு, இழைத்த - புரிந்த.

## வினுக்கள் :

1. எவற்றிற்குத் தம் குஞ்சுகளே யமனுய் உள்ளன?

2. கவரிமானுக்குத் தன் மயிரே யமனுதற்குக் காரணம் என்ன ?

3. 'நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில் கொண்ட கருவினும்,' என்பதன் பொருள் என்ன? இதில் எந்த வார்த்தையின் பொருள் உங்கள் செய்யுளுக்குப் பொருந்தும்?

4. எத்தகையோர் நா, வசைச் சொற்களைப் பேசும்?

5. மயிர் வனப்பு முதலியன எதை அழகுபடுத்து வன?

6. எந்த வனப்பிற்கு அடைமொழி கொடுத்துள்ளது?

7. 'நூல்' என்றது எந்த நூலை ?

8. அறநூலை அவசியம் கற்க வேண்டுமென அறி வுடையார் கூறுதற்குக் காரணம் என்ன ?

9. சொல்லின் அழகிற்கும் மற்ற அழகிற்கும் உள்ள வேறுபாடு யாது ?

10. 'குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல ;—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.'

இந்நாலடியார்ச் செய்யுளுக்கும் 'மயிர் வனப்பும்' என்று தொடங்கும் செய்யுளுக்கும் உள்ள வேற்றுமை என்ன ?

11. எது பெருநன்மையைத் தருவது ?

12. 'நகை கெட வாழ்வது' என்பதை நாம் எந்தெந் தச் சொற்களோடு கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்?

13. நல்லன யாவை ?

14. 'பொறுத்தல்' என்பதற்கு உறுப்பிலக்கணம் கூறுக.

15. இரண்டாவது செய்யுளில் எத்தனை வாக்கியங்கள் உள்ளன?

16. முதற்செய்யுளிலுள்ள சினைப்பெயர்கள் எவை?

பயிற்சி :

1. கீழ் வருவன என்ன பெயர்கள்?
கூற்றம், கோடு, உகிர், பெருமை, சிறுமை, பொறுத்தல்.

2. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:—
வனப்பல்ல, நூற்கியைந்த, தீங்கெண்ணி.

## 4. நீதி வெண்பா

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பர்; ஆன்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே;—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி? 1

தீயவர்பாற் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க;—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை? நாடு. 2

எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே;—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ? சாற்று. 3

நூல் வரலாறு :

இது நீதியை உணர்த்துகின்ற நூல் என்பது இதன் பெயரால் விளங்கும். இந்நூலை இயற்றிய ஆசிரியர் இன்னார்

என்பது தெரிந்திலது. சிறந்த நீதிகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதில் பல இடங்களில் உவமேயத்தைத் தக்க உவமானத்தோடு பொருத்திக்காட்டல் மிக அழகாய் இருக்கும்.

### அருஞ்சொற்பொருள்:

1. சிறுமை+உணர்வோர் - சிற்றுணர்வோர், ஆன்றமைந்த - கல்வி கேள்விகளினல் நிறைந்து அடங்கிய, வெற்றி பெறும் - ஜயம் பெறுகின்ற, ஒள் - ஒளி, முற்று+உணர்வோர்—குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்ததால் அவ்வுகரம் கெட்டது.

2. சே+இழையே - செம்மையான அணிகளை அணிந்த பெண்ணே, துன்னற்க - நெருங்க வேண்டா, நண்ணுவரோ - சேருவரோ?

3. இனிது - நல்லது, தரு - விரும்பும் பொருள்களைக் கொடுக்கும் தெய்வ விருக்ஷம், நாமநிதி - சங்கநிதி, (சங்கநிதி, பதுமநிதி என்பவை தேவலோகத்தில் உள்ள பொக்கிஷங்கள்), நயந்து - விரும்பி.

### வினக்கள்:

1. முற்றுணர்ந்தோரிடம் காணப்படும் சிறப்பு என்ன?

2. சிலுசிலுப்பர் - யார்? ஏன்?

3. வெண்கலத்தின் நிறம் என்ன? பித்தளைக்கும் வெண்கலத்துக்கும் உள்ள வேறுபாடு யாது?

4. பொற்கலத்திற்குக் கொடுத்திருக்கும் அடைமொழிகள் யாவை? அவற்றின் பொருள் யாது?

5. இச்செய்யுளின் உவமான உவமேயம் எவை?

6. பாம்பை மக்கள் என் அணுகுவதில்லை?

7. கல்வி யாரைத் தூயராக்குவது இல்லை?

8. கல்வி கற்ற தீயவரை ஏன் அணுகுதல் கூடாது?
9. மேகம் எப்படி மக்களுக்கு உதவி புரிகின்றது?
10. நல்லவர் இயல்பு யாது? நாமநிதி யாருக்கு உரிமையானது?
11. தெய்வ விருக்ஷம் எத்தகையது?
12. நல்லோருக்கு உவமானம் யாது?
13. யாருடைய கல்வி யாருக்குப் பயன்படும்?
14. 'துன்னற்க'—உறுப்பிலக்கணம் கூறுக.
15. எதனால் மேகம் உண்டாகிறது?

பயிற்சி:

பொருள் கூறுக :—

விரி பசும்பொன், ஒண்கலம், சிலுசிலுப்பர், துன்னற்க, சேயிழை, நாமநிதி.

இலக்கணம் :

1. கீழ் வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:—

ஆன்றமைந்த, உண்டோவொலி, தீயவர்பாற்கல்வி, உதவலன்றியே, சேயிழை.

2. கீழ் வருவனவற்றுள் எஃது உவமானம், எஃது உவமேயம்? பொருத்திக் காட்டுக :—

(1) "வெற்றிபெறும் வெண்கலத்தில்........ஒலி?"
(2) "சேயிழையே! தண்ணொளிய............நாடு."
(3) "எல்லோர்....................நாடாரே."

# 5. இனியவை நாற்பது

கயவரைக் கைகழிந்து வாழ்த லினிதே;
உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே;
எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது. 1

கற்றார்முற் கல்வி யுரைத்தல் மிகவினிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே;
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது. 2

நன்றிப் பயன்றூக்கி வாழ்தல் நனியினிதே,
மன்றிற் கொடும்பா டுரையாத மாண்பினிதே;
அன்றறிவா ரியாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியின் நன்கினிய தில். 3

நூல் வரலாறு:

இனியவை நாற்பது பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இதன் ஒவ்வொரு செய்யுளிலுஃம் நன்மையையும் இன்பத்தையும் அளிக்கும் மும்மூன்று பொருள்கள் உண்டு. இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனர் பூதஞ் சேந்தனர் என்பவர்.

அருஞ்சொற்பொருள்:

1. கயவர் - கீழ்மக்கள், கை கழிந்து - நீங்கி, உயர்வு+உள்ளி - உயர்வுள்ளி; முற்றியலுகரத்திற்கு முன் உயிர் வந்ததால் அவ்வுகரம் குற்றியலுகரம் கெடுவது போலக் கெட்டுள்ளது. ஒளி பட - புகழுண்டாக.

2. மிக்காரை - அறிவால் மேம்பட்டவரை, மாண் - மாட்சிமை, எள்+துணை - எட்டுணை; எள்ளளவு. இர

வாது - யாசியாமல், எ + துணை = எத்துணை - எல்லா விதத்தாலும்.

3. தூக்கி - ஆராய்ந்து, மன்றம் - நீதிசபை, கொடும்பாடு - வஞ்சனை, அடைக்கலம் - ஒருவர் ஒருவரை நம்பி அவரிடம் வைத்த பொருள், வெளவாத × அபகரியாத

## வினாக்கள் :

1. கீழ்மக்கள் யார்?

2. ஊக்கம் எதைத் தரும்? 'ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு,' என்ற சொற்றொடரின் கருத்து எந்த அடியிலுள்ளது?

3. ஒருவருக்கு எப்போது புகழுண்டாகும்?

4. ஒருவருக்கு வறுமை உண்டாதற்கு இரண்டு காரணங்கள் கூறுக.

5. 'ஒளி' என்பதற்கு வேறு பொருளென்ன?

6. 'கீழோராயினும் தாழவுரை.'—இப்பொருளைக் கொண்டுள்ள தொடரைக் குறிப்பிடுக.

7. குற்றியலுகரம் ஒன்றைக் குறிப்பிட்டு, அதற்குத் தொடரும் குறிப்பிடுக.

8. யாரிடம் ஒருவர் தாம் கற்ற கல்வியை உரைத்தல் கூடாது?

9. 'மிக்காரை' —எதில் மிக்காரை?

10. 'இரத்தல் இழிவு' என்பதற்கு ஆத்திசூடியிலிருந்து ஓர் உதாரணம் கூறுக.

11. 'நன்றி மறவேல்.'—இந்த வாக்கியத்தின் கருத்து எப்பாட்டில் எந்த அடியில் உள்ளது?

12. நியாயசபையில் ஓரஞ்சொன்னால் என்ன கெடுதிகள் நேரும்? நல்வழியிலிருந்து இதற்கேற்ற உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக.

13. எதைக் கவருதல் கொடிது?

14. நாம் செய்யும் நன்மை தீமைகளை எப்போதும் அறிகின்றவர் யார்?

15. 'தினைத்துணை நன்றி செயினும்' என்னும் திருக்குறளின் கருத்து எப்பாட்டில் எந்த அடியில் உள்ளது?

பயிற்சி:

1. பிரித்துப் புணர்ச்சி விதிகூறுக :—

இகழ்ந்துரையாராகி, கல்வியுரைத்தல், எட்டுணை, எத்துணை, பயன்றாக்கி, அன்றறிவாரியார், நன்றியினன்கினியதில்.

2. பகுபத இலக்கணம் கூறுக :—

கல்வி, பிறத்தல், நன்றி, எளியர்.

## 6. நல்வழி

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 1

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்: வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது ;—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 2

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா ;
பொருந்துவன போமினென்றாற் போகா ;—இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 3

'ஒருநா ளுணவையொழி,' என்றா லொழியாய் ;
'இருநாளைக் கேல்'என்றா லேலாய் ;—ஒருநாளும்
என்னோ வறியாய் ; இடும்பைகூ ரென்வயிறே !
உன்னோடு வாழ்த லரிது ! 4

## நூல் வரலாறு :

இந்நூலை இயற்றியவர் ஔவையார். இவர் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், மூதுரை முதலிய நூல்களையும் செய்துள்ளார். இவர் அதியமான் கொடுத்த நெல்லிக்கனியை உண்டு பன்னாள் உயிர் வாழ்ந்திருந்தனர் எனச் சொல்லுகின்றனர். இவரைப்பற்றி நம் நாட்டிலுள்ள யாவருக்கும் தெரியும். இவர் மிக்க புலமையும் கருணையும் வாய்ந்தவர். இந்நூல் நல்ல நீதி வழிகளைக் கற்பிக்கின்றமையால், இதற்கு இப்பெயர் அமைந்தது.

## அருஞ்சொற்பொருள் :

1. ஏற்றம் - உயர்வு, கண்டீர் - முன்னிலை அசை (பொருளில்லை)

2. வெட்டெனவை - கடுஞ்சொற்கள், மெத்தெனவை - இன்சொற்கள், நெடுமை + இருப்பு + பாரை - நெட்டிருப்புப்பாரை - நீண்ட கட்டபாரை, பாறை - கருங்கல்.

3. நெடுந்தூரம்-நெடுநேரம், துஞ்சுவதே-மாண்டு போவதே, மாந்தர்-மனிதர் (இச்சொல் எப்பொழுதும் பன்மையிலேயே வரும்).

4. ஏல் - ஏற்றுக்கொள், இடும்பை கூர் - துன்பம் மிகுகின்ற, என்னோ-என் துன்பம், அரிது-முடியாது.

## வினாக்கள் :

1. எப்படிப்பட்ட வாழ்வும் ஒருகால் என்ன ஆகும்?
2. தண்ணீருக்கு அருகில் இருக்கின்ற மரத்திற்கும்,

தண்ணீரில்லாத இடத்தில் இருக்கின்ற மரத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

3. முதற்பாட்டில் உள்ள அசைச்சொல் எது?
4. உலகில் எப்பணி சிறந்தது?
5. 'வெட்டெனவை, மெத்தெனவை' எவை?
6. எது பஞ்சிற்பாயாது?
7. பாறையின் குணம் யாது?
8. 'நெக்கு விடும்'—எது? எதற்கு?
9. 'பாரை, பாறை'—பொருளின் வேறுபாட்டை விளக்குக.
10. பாரை எதற்குப் பயன்படும்?
11. எதை வருந்தியழைப்போம்? எதைப் 'போ' என்று தள்ளுவோம்?
12. 'துஞ்சுவது' என்பதற்கு இரு பொருள் யாவை?
13. நெஞ்சத்தின் வேலை யாது?
14. ஒருநாள் உணவை ஒழித்தல், இருநாள் உணவை ஏற்றல் இவ்விரண்டில் செய்ய முடியாதது எது?
15. வயிற்றிற்குக் கொடுத்திருக்கும் அடைமொழிகள் எவை?
16. 'இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம், வன்சொலா லென்றும் மகிழாதே'—என்னும் செய்யுளுக்குத் தகுந்த பொருள், இரண்டாவது செய்யுளில் எந்த வார்த்தைகளில் உள்ளது?
17. 'உன்னோடு வாழ்தல் அரிது'— இது எப்படிப் பட்டவரைப் பார்த்துச் சொல்வது போல இருக்கிறது? பசியை 'நோய்'என்று சொல்வதற்குக் காரணம் என்ன?
18. "உண்பது நாழி; உடுப்பது நான்குமுழம்; எண்ணுவன எண்பது கோடி"—மூன்றாவது செய்யுளில் இக் கருத்துள்ள சொற்களை எடுத்துக்காட்டுக.

பயிற்சி:

1. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:—

அரசறிய, விழுமன்றே, உழுதுண்டு, பஞ்சிற்பாயாது, போமினென்றுற்போகா, தாங்கினைந்து.

2. 'பழுதுண்டு வேறோர் பணிக்கு'—அனுவயப் படுத்துக.

3. மூன்றாவது செய்யுளில் உள்ள பெயர்ச்சொற்கள் இரண்டைக் குறிப்பிடுக.

4. 'உழுதுண்டு'—என்ன எச்சம்?

5. முதல் செய்யுளிலும், நான்காம் செய்யுளிலும் உள்ள எழுவாய் பயனிலைகளைக் கூறுக.

## 7. நன்னெறி

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி? 1

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்;—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றன்றே? விளம்பு. 2

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்;—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு? 3

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணாரே;—வில்லார்

கணையிற் பொலியுங் கருங்கண்ணாய்! நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். 4

## நூல் வரலாறு:

இந்நூல் செய்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காலம் ஏறக்குறைய இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஒருநாள் இவர் கடற்கரையில் இருக்கும் போது அரிய கருத்துக்கள் அமைந்த நன்னெறி என்னும் இந்நூலைச் செய்தனராம். இதில் நாற்பது பாக்கள் உள்ளன. நல்ல நீதிகளைக் கூறும் நூலாதலால், இதற்கு இப்பெயர் அமைந்தது.

## அருஞ்சொற்பொருள்;

1. கீழ்-கீழ்மக்கள், கொண்டு புகல்வது - எடுத்துப் பேசுவது, மலர்ச்சேக்கை - மலராகிய படுக்கை, செழும் பொழில்வாய் - செழுமையாகிய சோலையில்.

2. ஒண்புலவா - அறிவு ஒளி பொருந்திய புலவர், மடவரால் - இளமை பொருந்திய பெண்ணே.

3. செறி - நெருங்கிய, பிறை நுதால் - பிறை போலும் நெற்றியையுடையவளே, வண்ணம் - அழகு, வாள் - ஒளி.

4. கயவர் - மூடர், கனம் நண்ணார் - தம்முடைய பெருமையை இழப்பர், வில்லார் கணையின் பொலியும் - வில்லோடு கூடிய அம்பு போல விளங்குகின்ற, புணை - தெப்பம், நொய்தாம் - எளிதாம், ஒண்பொருள் - கனமுடைய பொருள்.

## வினாக்கள்:

1. எதை நாம் 'பொழில்' என்கிறோம்?
2. மலர் ஏன் வண்டிற்கு இடத்தைத் தருகிறது?

3. கீழ் புகல்வது எது?

4. எதனால் மானிடர் கீழோர் ஆகின்றனர்?

5. மடம் - இதற்கு இரு பொருள் யாவை?

6. கல்வி எதற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது?

7. கண்ணொளி நமக்கு எப்போது பயன்படும்? கண்ணின் எப்பகுதி நமக்குப் பார்வையை அளிக்கிறது?

8. மனிதர் எதில் பெரியவராயிருத்தல் வேண்டும்?

9. எவ்வுறுப்பை நாம் 'நுதல்' எனச் சொல்லுகிறோம்?

10. 'அது பெறார்'—எது பெறார்?

11. ஒருவருக்குப் பழி எப்போது உண்டாகும்?

12. அறிவுடையார் எதற்கு அஞ்சுவார்?

13. இருளுக்கு அஞ்சுவது எது? 'மறை குருட்டுக் கண்'—எதை மறைக்கும் கண்?

14. 'நொய்தாம்'—எது? எப்போது? என்?

பயிற்சி :

1. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக :—

வேம்பன்றோ, விரும்புங்கனி, தம்பாற்செறி, கற்றுணர்ந்த, கருங்கண்ணாய்.

2. ஒற்று மிகுந்ததற்குக் காரணம் கூறுக :—

மலர்ச்சேக்கை, கல்விக்கடலின், குருட்டுக்கண், இருளைக்கண்டு.

3. நான்காஞ்செய்யுளிலுள்ள வினைமுற்றைக்கூறுக.

4. 'உடலின் சிறுமை' என்னும் செய்யுளில் உள்ள எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

5. வாள் விழி - இதற்கு உவமேயமானவர் யார்?

6. இந்நான்கு செய்யுட்களிலுமுள்ள முன்னிலைகளை எடுத்தெழுதி, அவை என்ன முன்னிலைகள் என்பதைக் குறிப்பிட்டு, பொருளும் எழுதுக.

7. இச்செய்யுட்களில் உள்ள குற்றியலுகரங்களை எடுத்தெழுதுக.

8. கீழ், சிறுமை, இருள், நல்லார் - இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் கூறுக.

9. புலவர் - இது எச்சொல்லிலிருந்து பிறந்துள்ளது?

## 8. நீதி நெறி விளக்கம்

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்(து)
உய்த்துணர் வில்லெனி னில்லாகும்;—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னாம்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. 1

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்;—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 2

முற்று முணர்ந்தவ ரில்லை; 'முழுவதூஉங்
கற்றனம்!' என்று களியற்க;—சிற்றுளியால்
கல்லுந் தகரும்; தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால். 3

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்;—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல்; கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. 4

### ஆசிரியர் வரலாறு:

நீதி நெறி விளக்கம் என்பது, 'நீதியோடுங்கூடிய கல்வழியை விளக்குவது' எனப் பொருள்படும்.

இதைப் பாடினவர் குமரகுருபரசுவாமிகள். இவர் ஐந்தாண்டுகள் வரையும் ஊமையராயிருந்து பின்பு திருச்செந்தூர் முருகக்கடவுள் அருளால் ஊமைத் தன்மை நீங்கப் பெற்றார். உடனே இவர் கந்தர் கலி வெண்பா என்னும் ஒரு நூலைப் பாடினார். ஒரு நாள் முருகக்கடவுள் இவர் கனவில் தோன்றி, 'நீ குருபரனாகுக' எனச் செப்பியதாகவும், அன்று முதல் இவருக்குக் குமர குருபரர் என்னும் பெயர் வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது.

இவர் இன்னும் பல நூல்களைச் செய்தனர். இவர் தருமபுரத்திலிருந்த மாசிலாமணி தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றனர். சகலகலா வல்லி மாலை பாடியவரும் இவரே.

அருஞ்சொற்பொருள்:

1. எத்துணையவாயினும் - எவ்வளவினவானாலும், உய்த்து உணர்வு - ஆராய்ந்தறிதல், என்னாம் - என்ன நன்மையைத் தரும்? அஃது - அச்சொல் வன்மை, நாற்றம் - வாசனை.

2. மலரவன் - தாமரை மலரிலுள்ள பிரமன், வண்டமிழ் - வளப்பம் பொருந்திய தமிழ், ஒவ்வான் - ஒப்பாக மாட்டான், வெறுமை உடம்பு - வெற்றுடம்பு, மற்று - அசை, இவர் - புலவர், செய்யும் உடம்பு - புகழ் கொண்டு செய்யும் பயன் நிறைந்த உடம்பு.

3. முற்றும் - கற்க வேண்டிய யாவற்றையும், களியற்க - செருக்கடையற்க, சிறுமை உளி - சிற்றுளி, கல் - மலை, கனங்குழாய் - பருத்த குண்டலமாகிய காதணியை உடையவளே, கொல்லுலை - கருமானுடைய உலைக்களம், தகரும் - உடையும், கூடம் - சம்மட்டி.

4. புறம் நட்டு - வெளியில் நேசம் பாராட்டி, அகம் - மனத்தில், வேர்ப்பார் - பகை கொள்ளுபவர், நச்சுப் பகைமை - விஷத் தன்மையான பகைமையை, கழிபெருங்கண்ணோட்டம் - மிகப் பெரிய தாட்சணியம், பொதிந்து - மறைத்து, நஞ்சு பகைமை - நச்சுப்பகைமை.

## வினுக்கள் :

1. 'இல்லாகும்'—எது? எப்போது இல்லாகும்?
2. இடத்திற்கேற்பப் பொருளை ஆராய்ந்தறியாக் கல்வியால் ஏன் பயனில்லை?
3. சொல்லும் திறமையினுல் என்னென்ன பயன்கள் உண்டாகும்?
4. இயற்கை மலர், பொன்மலர் இரண்டிற்குமுள்ள சிறுமை பெருமைகளைக் குறிப்பிடுக.
5. சொல் வன்மையற்ற கல்வி எந்த மலர்க்கு ஒப்பாகும்?
6. இந்நூலாசிரியர் பேசத் தொடங்கியது எப்போது?
7. மலரவன் யார்? அவன் தொழிலென்ன? அவனுக்கும் கலைமகளுக்கும் எவ்விதமான தொடர்பு சொல்லப்படுகிறது?
8. 'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்'--ஏன்?
9. வெற்றுடம்பு எவற்ருல் ஆக்கிப்படுகிறது?
10. புலவர் செய்யும் உடம்பு எதனுல் ஆனது?
11. 'களியற்க'—ஏன்?
12. கல்வியில் இவ்வுலகம் எந்நிலையிலிருக்கிறது?
13. சம்மட்டி செய்யும் வேலைகள் எவை?
14. 'கண்ணோட்டஞ் செய்யேல்'—எதற்கு?
15. 'கருவி'—எக்கருவி? ஆற்றுவார் யார்?

16. பகைமை ஏன் 'நச்சுப்பகைமை' எனக் கூறப்பட்டது?

17. 'கண்ணோட்டம்' என்பது எது?

18. புண்ணைக் கீறி ஆற்றுவாருக்கு யாரை ஒப்பிடலாம்?

பயிற்சி:

1. 'எத்துணைய'—என்று தொடங்கும் செய்யுளை எத்தனை வாக்கியங்களாகப் பிரிக்கலாம்? அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைகளைக் கூறுக.

2. பிரித்துக் காட்டுக:—அஃதுண்டேல், வெற்றுடம்பு, சிற்றுளி, கண்ணோட்டம்.

3. இரண்டாம் செய்யுளில் உள்ள உவம உருபு எது?

4. எந்தச் செய்யுளில் உயிரளபெடை உள்ளது?

5. மூன்றும் செய்யுளின் பின்னிரண்டடிகளையும் அனுவயப்படுத்துக.

6. 'ஆற்றுவார்'—இது தன்வினையா, பிறவினையா?

7. 'மாயா' என்பது என்ன சொல்?

8. 'கனங்குழாய்' என்பது என்ன முன்னிலை?

# III. கதைச்செய்யுள்

## 1 யானையை வென்ற முயல்

துன்னரு மடவி தன்னிற் றும்பிக ளனேகஞ் சூழப்
பன்னருஞ் சதுர தந்தன் எனுமிறை பண்பின் வாழ்நாள்
அன்னநாள் மழையில் லாமல் அருஞ்சுனை யெல்லாம் வற்ற
உண்ணுநீ ரெங்குண் டென்ன ஒற்றர்பார்த் தோடி வந்தே
'சந்திர சரசு தண்ணீர் ததும்பிட விற்கு' தென்ன,
அந்தநற் சுனையை நாடி யானைகள் அனைத்துஞ் செல்ல,

முந்தியச் சுனையைச் சூழ முயற்சிலீ முகவேந் தஞ்சி
மந்திரி விசயன் தன்னை வரவழைத் துரைக்கு மன்றே. 2

'இற்றைநாள் வரையில் நாமும் இனமுமிச்சுனையைத் தானே
சுற்றியிங் கிருந்தோம்; இந்தத் தும்பிகள் வந்து புக்கால்
மற்றுநா மிருக்க லாகா; வனத்தில்வே றிடமு மில்லை;
உற்றிவ ணிருக்க வேறோ ருபாயநீ நினைப்பாய்,' என்ன 3

'ஆனையை வெல்லு மாறிங் கருமையோ? விடைதா,' என்று
ஞானமந் திரவி சாரம் நனிபெறு விசயன் கூறிச்
சேனைகா வலனு மந்தச் சிலீமுகன் அனுப்ப ஏகிக்
கானில்வே ழக்கூட் டத்தைக் கண்களாற் கண்டு நின்றே 4

'நகைத்துடன் கொல்வர் துட்டர் நாமவர் நடுவிற் பட்டால்;
வகைப்பட வோர்பா னின்றால் வந்தடித் திடுவர்; மாறாய்
மிகைப்பட அவர்கள் கையில் வீறுட னுழுஞ் சும்மா
அகப்படி னம்மை அந்த ஆனை தான் கொல்லு மன்றோ?' 5

என்றுதன் மனத்தி லெண்ணி, 'இதன்கையி லகப்ப டாமல்
நின்றுநாம் வெல்வோம்,' என்று நினைத்தொரு குவட்டி லேறித்
துன்றிய களிற்று வேந்தைத் 'தும்பிநீ சுகமோ?' என்ன,
வென்றிகொள் களிறு கண்டு வியந்து,'நீ யாரோ?' என்ன 6

'இசைநிலா எறிக்குந் திங்கள் ஏவிய தூதன்; என்பேர்
விசயனென் பார்கள்; உன்பால் விடுக்கவந் துற்றேன்' என்ன
அசைவிலா தாகி அந்த ஆனையும் பயந்து நின்றே
'விசயநீ வந்த தென்ன? விளம்பெ'பன விளம்பு மன்றே: 7

'சந்திர சரசென் றெங்கள் சசிபக வான்பே ராலே
இந்தநற் கான கத்தில் இருஞ்சுனை யொன்றுண் டாக்கி
அந்தநற் சுனையி லெங்கள் ஐயனுந் தேவி மாரும்
முந்திய சலக்கி ரீடை முயங்கியே பகலைக் கெல்லாம் 8

'தண்ணறுஞ் சுனைக்குக் காவல் வைத்தெமைத் தாங்கள் போவார்;
விண்ணவ ருலகத் தாரும் விரும்பினுந் தொடப்ப டாது!

நண்ணிய சுனைநீ ருண்ண நாடினை நீயென் றெங்கள்
அண்ணலார் சினந்துன் பக்கல் அனுப்பினர் 'தடுத்தி' என்றே. 9

'தூதுசொல் வாரி யற்கை துங்கவாள் உருவிக் கொண்டு
கோதமாய்க் கேட்பார் முன்னுங் கூறுவ கூறல் வேண்டும்;
யாதவர் கூறி னாலும் இகலினர் தூத ரேனும்
மூதறி வரசர் தூதர் முனியினும் முனியா ரன்றே? 10

'தன்னுடல் வலியி னாலே தான்பெரி யரைப்ப கைத்தால்
பின்னவர் சினந்து வெல்லப் பெற்றுயி ரிழத்தல் வேண்டும்;
அன்னதை நினையா மற்பின் பவர்பகை நினைத்தா ரேனும்
முன்னரே வணங்கிப் போற்றின் முடிவுறா ராவி மன்னோ 11

'மூவரின் முதல்வ ரான முனைவனார் முடிமேல் வாழும்
தேவனைப் பகைத்த சிந்தைச் செயலினை யினித்த டுத்தே
மேவுதண் சுனைமேல் வைத்த வேட்கையை விடுத்திந் நேரம்
போவதே கருமம்,' என்று புத்திகள் பலவுஞ் சொல்லி 12

'இங்கிவை யனைத்தும் நானே இயம்பின னுன்னை வேண்டி;
திங்களம் பகவ னுன்மேற் சினந்தது கொஞ்ச மல்ல!
அங்கவன் சினமும் நானே ஆற்றுவன் அவன்பாற் சென்றே
வெங்களிற் றினத்தி னோடே மீள்கநீ,' என்று கூற 13

தந்தியின் அரசு மந்தச் சசந்தனை நோக்கி, 'நீசொல்
சந்திர னெனுந்தே விந்தத் தடந்தனிற் குடைவதெப்போது?
அந்தவே ளையினில் வந்தங் கவனடி போற்றி யானும்
உய்ந்துமீண் டேகு வேன்'என் றோதலும் முயல்நன் றென்று 14

அன்றிர வுடன்கொண் டேகி அலைபுனற் றடத்திற் றோன்றும்
துன்றுவெண் மதியின் சாயை சுட்டி'நீ காண்க,' என்ன,
நன்றதைக் கண்டு, 'திங்கள் நாதனே' என்றும், 'சூழ்வுற்று
ஒன்றிய வுடுக்கள் அன்னோற் குரியநன் மாதர்' என்றும் 15

ஆனையும் நினைந்து நெஞ்சம் அழிந்துபின் றெளிந்து நின்று
'நானிதை யறியேன் எங்கள் நாதனே! பொறுக்க!' என்று

வானுயர் மதியை நோக்கி வணங்கியே மீண்டு போகக்
கானுறு முயல்க ளெல்லாம் களித்துவாழ்ந் திருந்த அன்றே. 16

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

## அருஞ்சொற்பொருள் :

தும்பிகள் - யானைகள், ஒற்றர் - உளவு பார்த்துச் சொல்பவர், வேழக்கூட்டம் - யானைக்கூட்டம், குவட்டில் - மலையினுச்சியில், துன்றிய - நெருங்கிய, தும்பி - யானை, களிற்று வேந்தை - யானை அரசை, திங்கள் - சந்திரன், விடுக்க - அனுப்ப, விளம்பும் - சொல்லும், தண்ணறுஞ் சுனை - தண்மை + நறுமை + சுனை—குளிர்ச்சியும் வாசனையும் பொருந்திய சுனை, உய்ந்து - பிழைத்து, உடுக்கள் - நட்சத்திரங்கள்.

## வினக்கள் :

1. முயல் யானையை வென்ற சூழ்ச்சிக்கு என்ன பெயர் கொடுக்கலாம்?
2. யானைகள் என் சந்திர சரசுக்குச் சென்றன?
3. விசயன் என் குன்றின்மேல் ஏறிற்று?
4. முயல் யானையினிடம் சந்திரனை எவ்விதம் உயர்த்திக் கூறிற்று?
5. இப்பாடத்தில் சந்திரனுக்கு எத்தனை பெயர்கள் வந்துள்ளன?
6. யானைக்கு வந்துள்ள பெயர்கள் யாவை?
7. இக்கதையிலிருந்து நீ அறிவது யாது?
8. இக்கதையைச் சுருக்கி இருபது வரிகளில் எழுதுக.

## 2. செட்டியும் மகனும்

செட்டியார் கதையே தென்னத் திருந்துமோர் பட்டி னத்தில்
மட்டிலாச் செல்வ ஞன வணிகனுங் குபேர தத்தன்;
கட்டழ குடைய தேவி காமசஞ் சீவி; அந்த
மட்டுலாங் குழலாள் ஈன்ற மைந்தனும் சுனங்க மித்ரன். 1

தேவியும் வணிகன் தானுஞ் சேயொடு செருக்கி வாழ்ந்து
மேவியங் கிருக்கும் நாளில் விரிகடற் கப்ப லேறிப்
போவது கரும மாகப் புந்தியில் வணிக னெண்ணிக்
'காவியங் கண்ணி! நீயுன் கற்பினை விடாதே,' என்றும் 2

சேயினை, 'அபூர்வ வஸ்து சேர்ந்திடில் விடாதே; செம்பொன்
ஆயிரம் கழஞ்சா னுலும் அளித்ததைக் கொள்வாய்' என்றும்
போயினன் கப்ப லேறி; புயலினுற் றிசைபு ரண்டோர்
மாயிருந் தீவு சேர்ந்து வாணிபஞ் செய்தி ருந்தான். 3

அங்கவன் மீண்டு செல்ல அனேகநாள் சென்ற தந்தப்
பைங்கொடி யீன்ற பாலன் படித்தனன் கலைக ளெல்லாம்;
இங்கிது நிற்க; வேருே ரெழில்நக ரத்தில் வாழும்
துங்கமா மறையோ ஞன சோமசன் மாவென் பானும் 4

ஓதினன் கலைக ளெல்லா முலகெலாம் புகழ நித்தம்;
தாதையிங் கிவனேச் சீறத் தாய்தனை நோக்கி, 'யானும்
போதுவன் பரதே சத்தில்; புகலுநின் கணவற்கு,' என்றே
கோதமாய்ச் சொன்ஞன்; பின்னும் கொடுந்தொழில் நினைந்து
மீண்டான். 5

'இவனைநாங் கொல்வோம்,' என்றேஎண்ணியோர் கல்லைக்கொண்டு
கவடமாய்ப் பரணி லேறிக் கரந்தனன்; தாயுங் காணுள்;
தவளநூல் மார்பன் வந்து, 'தனயனுண் டனனே?' என்ருன்;
'அவனைநா மெங்கே காண்போம்! அவன்பர தேசம் போஞன்!' 6

என்னவே கலங்கி, 'மைந்த னேதிறுற் போஞன்?' என்று
தன்னிரு கண்ணீர் வாரச் சதுமறை யோர்னுங் கேட்டான்;

அன்னவ ளழுது கொண்டே, 'அருங்கலை கற்ற பிள்ளை
தன்னையெந் நேரஞ்சீறுந் தன்மையாற் போனான்,' என்றாள்.

பேதையே! நாம்புகழ்ந்தாற் பிள்ளைதான் செருக்கடைந்து
போதனை மறப்பானென்று புத்தியே சொன்னேன்,' என்றான்;
'பாதகம் நினைந்தோம்!' என்று பரணினு மிரங்கி வந்து
தாதைபா தத்தில் வீழ்ந்தான்; தனையனைத் தழுவிக் கொண்டான். 8

மைந்தனும், 'ஐயா! உன்னை வதைத்திட நினைந்த பாவம்
எந்தமா தவத்தி னீங்கும்? எனக்கருள் செய்வாய்' என்ன,
அந்தணன், 'நீபோய் நின்வேட் டகத்திலே சிலநாளுற்றால்
சிந்தையில் நினைந்த பாவந் தீரும்;நீ செல்க,' என்றான். 9

ஏகினான் சோம சன்மா; எதிர்கொடு வந்தா ரந்த
மாகவே தியர்கள், 'எங்கள் மாப்பிள்ளை வந்தான்!' என்றே;
பாகுபால் பருப்பு நெய்தேன் பாயசம் பணியா ரங்கள்
ஓகையாய் விருந்து செய்தார்; உண்டுகொண் டவனி ருந்தான். 10

தினமொரு நீதிப் பாட்டுச் சீட்டினி லெழுதிக் கட்டித்
தனதுமஞ் சத்தின் மேலே தலையணைக் கீழே வைத்தான்;
பினைவர வரவெ றுத்துப் பேசினார்; ஒருநா ளன்னான்
மனைவியை யழைத்து, 'நீதான் வகுக்கவொண் ணாதோ?' என்றார்.

'என்னநான் சொல்ல?' என்றாள்; 'இப்படி நீரி ருந்தால்
பொன்னில்லை செலவுக்கு,' என்று புகலுநீ' எனச்சொன் னார்கள்;
மின்னுமவ் வாறே சொன்னாள்; வேதியன் சீட்டி லொன்றை
அன்னவள் கையி லீந்து,'ஈ தாயிரம் பொன்,'என் றானால். 12

தையலுஞ் சீட்டை வாங்கித் தமையனார் கையி லீந்தே;
'மெய்விலை யாயி ரம்பொன் விற்றுநீ வருக,' என்றாள்;
கையிலே வாங்கி மிக்க கவிதையை வாசித் தந்த
ஐயன்,'ஈ தாயி ரம்பொன் னதிகமே பெறுங்காண்!' என்று

போயினன் பட்ட ணத்திற் புகுந்தனன் சீட்டைக் காட்டி,
ஆயிரம் பொன்னீது' என்றான்; அவரவர் வாங்கிப் பார்த்துப்

'பேய!போ!' என்றார்; கொண்டு பின்னுமோர் தெருவி னிற்றன்
வாயிலில் வரும்போ தந்த வணிகனார் மைந்தன் கண்டான்.

'சீட்டிது விலைசொல்' என்றான்; 'செம்பொனா யிரமாம் ஈது
தாட்டிகர் கொள்வர்,' என்றான்; தானவை யெண்ணி நல்கிச்
சீட்டினை வாங்கிக்கொண்டோர் செய்யபட் டாலே சூழ்ந்து
வீட்டிலே தூங்கு மஞ்ச மேலுறத் தூக்கி வைத்தான். 15

செட்டியு மீரைந் தாண்டு சென்றபின் திரும்பி வந்து
பட்டணக் கரைகண் டோடிப் பாய்களு மிறக்கி நாவாய்
விட்டொரு படகி லேறி வீட்டினிற் கருமம் பார்க்க
ஒட்டியே பாதி யல்லில் ஒளித்துவந் தகத்திற் புக்கான். 16

அன்னையுந் தானுங் கூடி அருந்தியோர் தூங்கு மஞ்சந்
தன்னிலே யுறங்கக் கண்டு தானிவன் சோர னென்று
மின்னும்வா ளுறைக ழித்து வெட்டவே செல்லும் போது
மன்னிய சீட்டுத் தொங்க மற்றிதே தென்று பார்த்தான்.17

பட்டினாற் சூழ்ந்து கட்டிப் பாதுகாப் புற்ற சீட்டை
விட்டுவா சித்தான்;'ஒன் றும் விசாரியா மற்செய்தோர்கள்
கெட்டுமாய்ந் திடுவர்; பின்னுங் கேடற விசாரித்தோர்கள்
மட்டிலாச் செல்வம் பெற்று வாழ்வர்'என் றிருந்த தன்றே. 18

சீட்டினை மெல்ல வைத்துச் செறியிருள் விடிந்த பின்பு
வீட்டினில் வந்தா னந்த மென்கொடி பணிந்து நின்றாள்;
தாட்டிக மைந்தன் தானுந் தாளினில் வீழ்ந்தான்; தன்பெண்
டாட்டியை, 'இவனார்?' என்றான்; 'அனங்கமித் திரனும்' என்றாள். 19

புல்லினன் மோந்து கொண்டான், புதல்வனை யருகிருத்தி
மெல்லியல் தன்னை நோக்கி விளைந்தவா றுரைத்தே, 'இந்த
நல்லசீட் டாற்பி ழைத்தான் நம்பி!' என் றவனை நோக்கிச்
'சொல்லிதேது?' என்று கேட்டான்; சொல்லுவான்
நிகழ்ந்த வண்ணம்: 20

'நீயெனக் குரைத்துப் போன நீதியை நினைந்து கொண்டே
ஆயிரஞ் செம்பொ னீந்தே ஐய !யான் கொண்டேன்,' என்றான்;
சேயினைத் தழுவிக் கொண்டு, 'செம்பொனோர் கோடி யன்றோ
நீயெனக்கு?' என்று கூறி, நேயமாய் வாழ்ந்திருந்தான். 21

பஞ்சதந்திரப் பாடல் வீரமார்த்தாண்ட தேவர்]

## அருஞ்சொற்பொருள்:

மட்டு இலா - அளவற்ற, மட்டு உலாம்-தேன்நிறைந்த, காவி அம் கண்ணி - காவியங்கண்ணி, காவி - கருங்குவளை, அபூர்வம் - நூதனமான, புயல் - பெருங்காற்று, திசை புரண்டு - திக்குத்தவறி, கலைகள் - கல்வி சாத்திரங்கள், துங்கம் - தூய்மையான, கரந்தனன் - மறைந்தனன், தவளம் - வெண்மை, போதனை - தனக்குப் போதிக்கப் பட்ட ஞானககலைகளை, பாதகம் - துரோகம், வேட்டகம்- மாமனார் வீடு, மஞ்சம் - கட்டில், நாவாய் - கப்பல், அல்- இரவு, நம்பி - ஆண்களிற்சிறந்தவன்.

## வினாக்கள்:

1. வணிகன் தூரதேசஞ் செல்லுங்கால் மனைவிக்கும் மகனுக்கும் கூறிய நீதிகள் யாவை?

2. மஞ்சத்தின் மேலே கட்டி வைத்த ஓலை செட்டி மகனுக்கு யாங்ஙனம் கிடைத்தது?

3. அதன் விலை என்ன?

4. அதனால் உண்டான பயன் யாது?

5. அந்தணன் தந்தையின் தன்மை யாது?

6. தந்தையைக் கொல்ல நினைத்த பாவம் எதனால் நீங்குமென அறிவுறுத்தப்பட்டது?

7. இச்சரிதத்தில் நேரவிருந்த கொலைகள் எத்தனை? அவை தடை பட்டதற்குக் காரணங்கள் யாவை?

8. ‘நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.’—இவ் வாக்கியத்திற்கும் இக்கதைக்கும் உள்ள பொருத்தம் யாது?

## 3. பழி வாங்கிய குரங்கு

தவமிகும் அயோத்தி ஆளும்
சந்திர சேனன், தன்சேய்
கவிகளின் ஆடல் காணுங்
கருத்தறிந் தொருசா லைக்கண்
சவிபெறு குரங்க னேகம்
தான்வளர்த் திடுமந் நாளில்
புவிபுகழ் அரசன் ஏவல்
புரிபவர் சண்டை இட்டார். 1

ஒருகுரங் கதுகேட் டுத்தன்
உறவினுக் குரைக்கும்: ‘இப்போர்
பெருகுறில் தீதாம்; மற்றோர்
வனத்தில்நாம் பெயர்வோம்,’ என்ன
உரைசெயக் ‘கிழநின் சொல்கேட்டு
உண்பதை அறோம்’என் றேவா
னரமெலாம் இகழ்ந்து பேச,
நடுங்கியங் கவற்றை விட்டே 2

தன்குடும் பத்தி னோடோர்
கானிடைச் சார்ந்த(து); அப்பால்
பின்பொரு நாளச் சண்டை
பெரிதுற, அவரி லேயோர்
வன்பினன் கொள்ளிக் கட்டை
மற்றவன் மேலே வீச,

முன்புறு குதிரைச் சாலை
மேலது மூண்ட தன்றே. 3

சாலையும் எரிய வாசி
தாம்சில இறந்த ; எண்ணில்
கோலவெம் புரவி தீயிற்
கொண்டன காயம் ; மன்னன்
பாலடைந் ததனைக் காப்போர்
பகர்தலும் அந்நோய் தீர்க்கும்
சீலனை அழைத்து, "மாக்கள்
தீயின்நோய் நீக்கு(க)" என்றான். 4

மருத்துவன், 'குரங்கு நெய்யால்
அன்றிநோய் மாயா(து),' என்றான்.
செருத்தொழில் இறைவன், 'சாலை
சேர்ந்துள குரங்கை எல்லாம்
வருத்தியந் நெய்யைக் கொண்டு
வாசிநோய் வாசியாக்(கு)' என்(று)
உரைத்தனன் ; அவ்வா றேநோய்
ஒழித்தனன் மருத்து நூலோன். 5

'இப்பழி இறையி டத்தே
வாங்குவேன் !' என்று முன்போய்த்
தப்பிய கிழக்கு ரங்கு
தன்மனம் பதைத்தே எண்ணி,
ஒப்பிலாப் பெருங்கா னத்தில்
ஒருகுளம் இருக்கக் கண்டு,
'வெப்புறு பேயோன் றிங்கு
மேவவே வேண்டும் !' என்று 6

எண்ணியக் குளத்திற் கஞ்சத்
தாளினுல் இருநீர் உண்ண,
நண்ணிய பேய்கண் டங்கு
நணுகி, 'நின் பெருமை கண்டுன்
கண்ணெதிர்ப் பட்டேன்,' என்று
கழுத்துறும் மாலே தன்னேத்
துண்ணென எடுத்து நல்க,
வாங்கியே சொலுங்குரங்கே : 7

'எவ்வள(வு) இந்த நீரில்
உனக்குள வலிமை?' என்னச்
'செவ்வியோய்! இந்த நீரில்
ஆயிரம் பேர்சேர்ந் தாலும்
கைவ்வலித் துண்டற் கான
சத்திஎன் கண்ணுண்(டு)' என்ன,
'இவ்விடம் புசிப்பு னக்கே
யான்கொடு வருவன்,' என்றே 8

மாலேயைக் கழுத்திற் பூண்டு
வானரம் அகன்று, வேந்தன்
பாலடைந் திட, அவன்ருன்
பார்த்(து)'இந்த மணியின் மாலே
சீலனே! எங்குச் சம்பா
தித்தனே?' எனக்கு ரங்கு,
'கோலமார் ஒருகா னத்திற்
குளந்தானென் றுளது மன்ன! 9

'அக்குளந் தன்னிற் காலே
அடைந்துமுன் குதிப்போர்க் கெல்லாம்

இக்கதிர் மணிகள் எய்தும்,'
எனச்சொல, 'யானும் எய்தித்
திக்கொளி விரிக்கும் சோதிச்
செழுமணி பெறுவேன்,' என்று
புக்கஅக் குரங்கி னோடும்
போயினன் சேனை சூழ. 10

போனபின், 'இதுவே காலம்!
புகுந்தநின் சேனை எல்லாம்
கானவிர் மலர்த்த டத்தில்
களிப்பொடு குதித்துத் தங்கட்கு
ஆனநல் மணிகள் கொண்ட
பின்னரே அரச! நீயும்
நானுமொண் மணிகள் கோள்வேம்,'
என்றதந் நாகந் தானே. 11

'அப்படி யாக,' என்றே
அரசனும் சேனை யோரைக்
'குப்புறு(க)' என்ன ஓதக்
குதித்தலும், அவரைப் பற்றித்
துப்புறு பூதந் தானும்
தொடர்ந்திழுத் துண்ட(து); அங்கே
தப்புறு வேந்தன் தானும்
தடத்திடைக் காத்தி ருந்தான். 12

நெடும்பொழு தங்குக் காத்தும்
நீரிடைக் குதித்த சேனை
அடங்கலும் வராமை கண்டே
அரசனக் குரங்கை நோக்கி

'தடந்தனில் குதித்த சேனை
சார்ந்தில தென்னே ?' என்றான்;
நடந்தொரு மரத்தின் கொம்பில்
நாகமுன் ஏறிச் சொல்லும்: 13

'கொழிபுகழ் வேந்த னே!எம்
குலத்தையெல் லாம்நீ கொன்ற
பழிதனை வாங்க வந்தேன் ;
முடித்தனன் ; பண்டு நின்சோறு
அழிபசிக் குண்டேன் ஆத
லாலுனை விடுத்தேன் !' என்று
மொழிதர, இரங்கி வேந்தன்
முந்துதன் நகர்புக் கானே. 14

அருஞ்சொற்பொருள்:

1. தவம் - மேன்மை, சேய் - குழந்தை, கவி - குரங்கு, சாலை - இருமருங்கும் மரங்கள் நிறைந்த பாதை, சவி பெறு - அழகு பொருந்திய.

2. பெருகுறில் - பெருகினால், பெயர்வோம் - செல்வோம், அறோம் - விடோம்.

3. கானிடை - காட்டில், வன்பினன் - கொடியன், மூண்டது - பற்றியது.

4. வாசி - குதிரை, கோலம் - அழகு, வெம்புரவி - விரைந்து செல்லக்கூடிய வன்மையுள்ள குதிரை, மாக்கள் - மிருகங்கள்.

5. மருத்துவன் - வைத்தியன், குரக்கு நெய் - குரங்கின் கொழுப்பிலிருந்து ஆக்கிய நெய், மாயாது - நீங்காது, செரு - போர், வருத்தி - கொன்று, வாசியாக்கு - குணமாக்கு, மருத்து நூல் - வைத்திய சாஸ்திரம்.

6. இறை - அரசன், வெப்புறு - கொடுமைவாய்ந்த, மேவ - பொருந்த.

7. கஞ்சத்தாள் - தாமரைத்தண்டு, இருநீர் - மிகுந்த நீர், நணுகி - நெருங்கி, துண்ணென - விரைவாக.

8. செவ்வியோய் - சிறந்தவனே, கை வலித்து - கையால் இழுத்து, புசிப்பு - உணவு.

9. சீலனே - நல்ல குணமுடையவனே, கோலமார் - அழகு பொருந்திய.

10. கதிர் - ஒளி, எய்தும் - கிடைக்கும், திக்கு - திசை, புக்கு - அங்கு வந்து.

11. புகுந்த - வந்த, கான் - வாசனை, அவிர் - விளங்கும், தடம் - குளத்தில், ஒண்மணி - சிறந்த இரத்தினம், நாகம் - குரங்கு.

12. குப்புறுக - குதியுங்கள், துப்பு உறு - வலிமை பெற்ற.

13. அடங்கலும் - முற்றும், சார்ந்திலது - வந்திலது.

14. கொழிபுகழ் - மிகுந்த புகழ், பண்டு - முன்னே, அழிபசி - உடலைத் துன்புறுத்தும் பசி, மொழிதர - சொல்ல, இரங்கி - மனம்நொந்து, புக்கான் - புகுந்தான்.

## வினுக்கள் :

1. சந்திரசேனன் ஏன் குரங்குகளை வளர்த்தான் ?
2. கிழக்குரங்கு சொன்னது என்ன ?
3. குரங்குகள் யாவும் ஏன் கொல்லப்பட்டன ?
4. காட்டிலுள்ள குளத்திற்கு மன்னனை வருவிக்கக் குரங்கு செய்த சூழ்ச்சி யாது?
5. குளத்தில் குதித்த சேனைகள் என்னவாயின ?
6. இறுதியில் குரங்கு அரசனுக்கு என்ன சொல்லிற்று ?

7. இப்பாடத்தில், குரங்கு, குதிரை இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பெயர்கள் எவை?

8. இந்தக் கதையைச் சுருக்கமாக உன் சொந்தச் சொற்களால் எழுதுக.

# IV. பல்சுவை

## 1. சதகச் செய்யுள்

### (1) குமரேச சதகம்

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினும்,
தன்னொளிம ழுங்கிடாது;
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே,
தன்மணங் குன்றிடாது;
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே,
பொலிவெண்மை குறைவுறாது;
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்,
பொருந்துசுவை போய்விடாது;
துங்கமணி சாணையிற் தேய்ந்துவிட் டாலும்
துலங்குகுண மொழியாதுபின்
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும், அவர்களது
தூயநிறை தவறுகுமோ?
மங்களகல்யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாசனே!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

**அருஞ்சொற்பொருள்:**

தழல் - நெருப்பு, குறடு - கட்டை, துங்கம் - தூய்மையான, துலங்கு - பிரகாசிக்கின்ற, குறுகினாலும் - வற்றினாலும்.

வினாக்கள் :

1. பெரியவர் குணம் எப்போது அதிகமாகப் பிரகாசிக்கும் என்பதை இச்செய்யுளிலுள்ள பொருள்களினால் விளக்கிக் காட்டுக.

2. இச்செய்யுளின் உவமான உவமேயங்களைப் பொருத்திக் காட்டுக.

3. குறமங்கை, சுரகுஞ்சரி - இவர் யார்?

## (2) தண்டலையார் சதகம்

கற்றவர்க்குக் கோபமில்லை; கடந்தவர்க்குச்
சாதியில்லை; கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை; நல்லவருக்
கொருகாலும் நரக மில்லை;
கொற்றவருக் கடிமையில்லை; தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்
பெற்றவர்க்குப் பிறப்பில்லை; பிச்சைச்சோற்
றினுக்கில்லைப் பேச்சுத் தானே.

அருஞ்சொற்பொருள் :

1. கடந்தவர்க்கு - முற்றுந்துறந்தவர்க்கு, கூர்ந்த-மிகுந்த, நல்+தவர்க்கு - நற்றவர்க்கு, விருப்பம் - ஆசை, பேச்சு - பெருமை, புகழ்.

வினாக்கள் :

1. விருப்பமில்லை, பிறப்பில்லை—யார் யாருக்கு? என்?

2. பிறப்பு - இதற்கு எதிர்ப்பதம் கூறுக

3. எதற்குப் புகழ் உண்டாதல் இல்லை?

பயிற்சி :

1. பிரித்துக் காட்டுக :—
குப்பிட்டேத்த, நரகமில்லை.
2. இச்செய்யுளில் உள்ள வாக்கியங்கள் எத்தனை ?
3. இதனால் நீ தெரிந்துகொள்வதென்ன ?

## 2. காலத்தை வென்ற கவி

அச்சத்தை ஓட்டி அடிமைத் தளைபோக்கித்
துச்ச நினைவுகளைத் தூரறுத்து — மெச்சவே
ஞாலப் புகழோங்க நாட்டை எழுப்பினான்
காலத்தை வென்ற கவி. 1

எல்லாரும் ஓர்குலமே என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினான்—சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி ; வீரத்
திருவில் வெடித்தெழுந்த தீ. 2

—யோகி சுத்தானந்த பாரதியார்

அருஞ்சொற்பொருள் :

1. அச்சம் - பயம், தளை - விலங்கு, துச்ச நினைவுகள் - அற்பமான எண்ணங்கள், தூர் - வேர், மெச்ச - புகழ.

2. முரசு - பேரிகை, அமரகவி - தெய்வக்கவிஞன்.

வினாக்கள் :

1. கவிக்குக் கொடுத்திருக்கும் அடைமொழி யாது?
2. கவி செய்த உதவி என்ன ?
3. நாட்டை எழுப்பினான்—தடித்த எழுத்திலுள்ள சொல் எதைக் குறிக்கிறது ?

4. சொல்லின் அருவியாய் வந்தான் அமரகவி - இதற்கு விளக்கப் பொருள் கூறுக.

5. இச்செய்யுளை அனுவயப்படுத்தி, எழுவாய் பய னிலைகளைக் குறிப்பிடுக.

6. 'எல்லாரும் ஓர் குலமே'—இக்கருத்தைக் கொண்ட அவ்வையார் பாட்டை எழுதுக.

## 3. விவேக சிந்தாமணி

தண்டா மரையி னுடன்பிறந்துந்
தண்டே னுகரா மண்டூகம்;
வண்டே கானத் திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்;
பண்டே பழகி யிருந்தாலும்
அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றோரே. 1

புத்திமான் பலவா னவான்;
பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலும்
இடரது வந்தே தீரும்;
மற்றொரு சிங்கந் தன்னை
வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற் சாயல்
காட்டிய வுவமை போலாம். 2

### அருஞ்சொற்பொருள் :

1. தண்மை + தாமரை = தண்டாமரை, தண்மை + தேன் = தண்டேன், மண்டூகம் - தவளை, மது - தேன், புல்லோர் - அற்பர்.

**வினுக்கள் :**

1. மண்டூகத்திற்கும், வண்டிற்கும் பிறப்பிடங்கள் எவை?

2. இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

3. வண்டிற்குக் கால்கள் எத்தனை?

4. எவன் பலவான் ஆவான்?

5. துஷ்டன் பலமுள்ளவனுய் இருந்தால், பிறர்க்கு நேரிடும் கெடுதிகள் யாவை?

6. இச்செய்யுளில் உள்ள கதையைச் சுருக்கிச் சொல்லுக.

7. முயல் சிங்கத்தை எதனுல் வென்றது?

8. இங்கு வந்துள்ள உவமையால் நீ அறிந்துகொள்வது யாது?

## 4. தனிப்பாடல்கள்

### அந்தகக்கவி வீரராகவ முதலியார் :

சீராடை யற்றிடும் வைரவன்
வாகனஞ் சேரவந்து
பாராரும் நான்முகன் வாகனந்
தன்னைமுன் பற்றிக்கௌவி!
நாரா யணனுயர் வாகன
மாயிற்று ; நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே
வயிற்றினிற் பற்றினனே. 1

### காளமேகப் புலவர் :

**வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை**

வாரிக் களத்தடிக்கும்; வந்துபின்பு கோட்டைபுகும்;
போரிற் சிறந்து பொலிவாகும் ;—சீருற்ற

செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம். 2

ஒளவையார் :

சித்திரமுங் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம். 3

அருஞ்சொற்பொருள் :

1. வைரவன் வாகனம் - காளபைரவன் வாகனமாகிய நாய், நான்முகன் வாகனம் - பிரமனுடைய வாகனமாகிய அன்னம் (சோறு), நாராயணன் உயர் வாகனம் - விஷ்ணுவினுடைய வாகனமாகிய கருடன், மைவாகனன் - ஆட்டுக்கடாவை வாகனமாகவுடைய அக்கினி (நெருப்பு.)

2. களத்து - நெற்களத்தில்

3. நட்பு - சிநேகம், தயை-கருணை.

விஞக்கள் :

1. 'சீராடை'—என்னும் பாட்டின் பொருளை உரை நடையில் எழுதுக.

2. வைக்கோல், பெரிய யானைக்கு எவ்வெவ்வகையில் ஒப்பாய் உள்ளது?

3. மக்களுக்கு எவை இயற்கையிலேயே அமைய வேண்டும்?

## 5. சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா !—ஊடே
வெள்ளிஓ டமொன்று செல்லுதம்மா !
வானும் கடலாக மாறுதம்மா ! —இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா ! 1

முல்லை மலர்ப்பந்த லிட்டனரோ !—தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ !
வெல்லு மதியின் திருமணமோ !—அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ ! 2

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா !—அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா !
இம்ப ருலகின் இயல்பிதம்மா !—மதிக்கு
இன்னுர் இனியாரு முண்டோஅம்மா ! 3

மாற்றம் உலகின் இயற்கையென—இங்கு
மாந்தரும் கண்டு தெளிந்திடவோ
போற்று மிறைவனிம் மாமதியம்—விண்ணில்
பூத்து நிலவ விதித்தனனே ! 4

அம்புலிக் கூட்டில் முயல்வருமோ ?—ஈதோர்
அண்டப் புளுகோ ? அறியேனம்மா !
பம்பி யெழுமலை அங்குளதும்—மேலைப்
பண்டிதர் கண்ட கனவேஅம்மா ! 5

கூனக் கிழவி நிலவினிலே—ராட்டில்
கொட்டைநூற் கும்பணி செய்வதைஇம்
மாநிலம் கண்டு மகிழ்ந்திடவே—காந்தி
மாமதி யோங்கி வளருதம்மா ! 6

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா !—பின்னர்ச்
செம்பொற் குடம்போலத் தோன்றுதம்மா !
என்ன அதிசயம் பாராயம்மா !—ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா ! 7

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா !—உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா !

தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா !—கண்ணில்
சற்றுந் தெரியாம லாகுதம்மா ! 8
பாலாழி மீது படர்ந்தவெண்ணெய்—ஒரு
பந்தாய் உருண்டு திரண்டதுவோ !
மேலா யுலகில் ஒளிசெயவே—ஈசன்
விண்ணக மிட்ட விளக்கிதுவோ ! 9
இரவைப் பகலா யியற்றுதம்மா !—வெப்பம்
இல்லா திளைப்பெலாம் ஓட்டுதம்மா !
அரவம் விழுங்கினும் அஞ்சாதம்மா !—எங்கள்
ஆண்டவன் சூடும் மணியேயம்மா ! 10
பொன்மரம் காய்த்த கனியிதுவோ !—இந்தப்
பூமகள் ஆடும் கழங்கிதுவோ !
கன்மன முங்கனி கொள்ளக்—கவினொளி
காட்டி விளங்கும் மதியிதுவோ ! 11
கண்ணுதல் உள்ளக் கருணையதோ,—கொற்கைக்
காவலர் கண்ட புகழதுவோ !
மண்ணகஞ் செய்திடு புண்ணியமோ !—இன்று
வானகம் வந்து நிலவுதம்மா ! 12

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்

### அருஞ்சொற்பொருள் :

1. மீன் இனம் - நட்சத்திரக் கூட்டம், வெள்ளி ஓடம் - சந்திரன்.
2. விதானம் - மேற்கட்டி, விண்ணில் - வானத்தில்.
3. அம்புயம் - தாமரை, ஆம்பல் - அல்லி.
4. பூத்து - உண்டாகி, நிலவ - விளங்க.
5. அம்புலி - சந்திரன், பம்பி - பரவி, மேலை - முன்னிருந்த.

6. காந்தி மாமதி - பிரகாசமுடைய சிறந்த சந்திரன்; காந்தியடிகளின் கூர்த்த அறிவு.

7. சிறு வில் - மூன்றும் பிறைச்சந்திரன், செம்பொற்குடம் - பூர்ண சந்திரன் (பௌர்ணமி), இந்திரசாலம் - அற்புதங்களைக் காட்டும் வித்தை.

8. ஆண்டவன் - சிவபெருமான்

9. கொற்கைக் காவலர் - பாண்டியர்

விளுக்கள் :

1. சந்திரனையும் வானத்தையும் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்தியுள்ளார்?

2. நட்சத்திரங்களை எங்ஙனம் சிறப்பித்துள்ளார்?

3. தாமரை, குமுதம் இவற்றிற்கும் சந்திரனுக்கும் உள்ள தொடர்பு யாது?

4. மதியிலுள்ள மருவைப்பற்றிக் கவிஞர் கூறுவன யாவை?

5. எஃது இந்திரசாலம்?

6. சந்திரன் விண்ணில் எந்தெந்த விதமாக ஒளி செய்கிறான்?

7. இறுதி இரண்டு செய்யுட்களின் பொருளைக் கூறுக.

8. இப்பாடல்களில் சந்திரனுக்கு வந்துள்ள பெயர்கள் எவை?

## 6. செந்தமிழ் நாட்டின் சிறப்பு

வேதம் நிறைந்த தமிழ் நாடு;உயர்
 வீரம் செறிந்த தமிழ்நாடு; நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல்இளங்
 கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு 1

காவிரி தென்பெண்ணை பாலா றுதமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி
மேவிய யாறு பலவோ டத்திரு
மேனி செழித்த தமிழ்நாடு. 2

நீலத் திரைக்கடல் ஓரத்தி லேநின்று
நித்தந் தவஞ்செய் குமரிஎல்லை
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு. 3

—பாரதியார்

அருஞ்சொற்பொருள் :

1. செறிந்த - நெருங்கிய, காதல் - அன்பு.

2. பொருனை - தாமிரவருணியாறு

3. மாலவன் குன்றம் - திருமால் மலையாகிய திருவேங்கடம், மண்டி - மிகுந்து.

வினாக்கள் :

1. தமிழ் நாட்டின் சிறப்பு யாது?
2. இங்குக் குறிக்கப்படும் நதிகள் எங்கெங்குள?
3. தமிழ் நாட்டின் எல்லையை விளக்குக.
4. குமரி என்ன செய்கிறாள்?

## 7. இயற்கை வருணனை

### திருக்குற்றாலக் குறவஞ்சி

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றமெங்கும்பரந்துபெண்கள்சிற்றிலைக்கொண்டோடும்;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்:

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்;
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே.

அருஞ்சொற்பொருள் :

திரை - அலைகளையுடைய, முத்தாடும் - முத்துக்களைக் கழங்கென வீசி ஆடும், முற்றம் - குறவர் குடில்களின் வாயில், சிற்றில் - சிறுமியர் மண்ணினாற்கட்டி விளையாடும் சிறு வீடு, வளம் - மலை வளம், கிம்புரி - யானைத் தந்தத்திற்கட்டும் பூண், வெம்பு - காய்ந்த, தேமா - இனிய மாமரத்தின், சண்பக வாசம் - சண்பக மலரின் மணம்.

வினாக்கள் :

1. குற்றாலத்தின் அருவி செய்வன யாவை?
2. குறத்திகளின் வேலை என்ன?
3. குற்றாலமலை வானளாவியிருக்கிறது என்பதை எதனால் அறிகிறோம்?

## 8. திருவரங்கக் கலம்பகம்

மறம் :

கொற்றவன்றன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்!
மற்றதுதான் திருமுகமே ஆனா லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே? மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானால் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்பப் பேசு வாயே.

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## அருஞ்சொற்பொருள் :

கொற்றவன்தன் திருமுகம் - அரசன் அனுப்பிய கடிதம், அரசனுடைய முகம்; குறையுடல் - தலையற்ற முண்டம், மறவர் கொம்பு - மறவர் குலப் பெண், அற்ற வர் - உலகப்பற்றை நீக்கியவர், பெருமாள் தோழன் - பெருமாளுடைய நண்பனாகிய குகன், அவதரித்த - பிறந்த, திருக்குலம் - சிறந்த குலம், இளவரசு - இளவரசன், அரசமரத்தின் கன்று; ஆலின் - ஆலமரத்தின், கொம்பு - பெண், ஏற்ப - பொருந்த.

திருவரங்கக் கலம்பகம் - திருவரங்கத்தில் வீற்றிருக்கும் பெருமாள் மேல் பாடிய கலம்பகம் என்னும் நூல், கலம்பகம் - கலப்பு + அகம். இதில் பதினெட்டு உறுப்புக்கள் இருக்கின்றன.

மறம் - தம் மகளை மணம் பேசுமாறு அரசரால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி, மறவர்கள் தங்கள் மகளை அரசருக்குக் கொடுக்க மறுத்து, அவ்வரசரை இகழ்ந்து கூறுவதாகச் செய்யுள் செய்வது.

## கேள்விகள் :

1. 'கலம்பகம்' என்பது என்ன?

2. செய்யுளில் இரண்டு பொருள் உள்ள சொற்களை எடுத்தெழுதிப் பொருள் கூறுக.

3. மறவர் அரசனால் அனுப்பப்பட்ட தூதுவரிடம் கூறுவன யாவை?

4. இதனால் மறவரைப்பற்றி நீ தெரிந்துகொள்வதென்ன?

## 9. முக்கூடற்பள்ளு

சோதி மாமணி வீதி நெருக்கும்;
சுரும்பு பாடி இரும்பு முருக்கும்;
சாதி நால்வளம் நீதி பெருக்கும்;
தடத்து வாளை குடத்தை நெருக்கும்;
போதில் மேய்ந்திள மேதி செருக்கும்!
புனமெல் லாந்தண் மலர்விண் டிருக்கும்;
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூட லூரெங்க ளூரே.

### நூல் வரலாறு :

'பள்ளு' என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. 'முக்கூடற்பள்ளு' என்னும் பிரபந்தம் திருநெல்வேலி ஜில்லாவில் சித்திராநதி, உப்போடை என்னும் இரண்டும் தாமிர வருணி நதியுடன் கூடும் இடத்திலுள்ள விஷ்ணு ஸ்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் அழகர் பேரில் 17-ஆம் நூற்றாண்டிலிருந்த என்னயினுப் புலவர் என்பவராற் பாடப்பட்டது; சொற்பொருட்சுவை மிக்கது.

### அருஞ்சொற்பொருள்:

சுரும்பு - வண்டு, இரும்பும் உருக்கும் - இரும்பையும் உருகச் செய்யும், தடம் - தடாகம், போதில் - மலர்களில், இளமேதி - இளவெருமை, செருக்கும் - கொழுத்திருக்கும், புனம் - கொல்லை, விண்டிருக்கும் - மலர்ந்திருக்கும், செண்டு - ஓர் ஆயுதம்.

### கேள்விகள் :

1. முக்கூடலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் என்ன?

2. அக்கடவுள் சிறப்பு யாது?

3. அந்நாட்டின் வளப்பத்தைக் கூறுக.

4. இச்செய்யுளின் பொழிப்பை இரண்டு வாக்கியங்களில் எழுதுக.

## 10. தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
எந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்;
பிரம தேவன் கலையிங்கு நீரே! 1

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைநெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே! 2

பாட்டுஞ் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!

நாட்டிலேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பமும் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே!
—பாரதியார்

அருஞ்சொற்பொருள்:

அரும்பும்-தோன்றும், இசைக்கின்றேன்-பொருந்துமாறு செய்கிறேன், நன்செய் - நெல் விளை நிலம், இழை - பஞ்சு நூல், தேட்டம் - கவலை.

வினாக்கள்:

1. இச்செய்யுளில் கவிஞர் யார் யார் தொழில்களைப் பற்றிப் பேசுகிறார்?

2. இவர் கற்றவரைப் பார்த்துக் கூறுவன யாவை?

3. பூமியைக் குறிக்கும் வேறு இரண்டு சொற்கள் எவை?

4. இச்செய்யுட்களின் கருத்தைச் சுருக்கி எழுதுக.

## 11. விடுகதை

வளர்ந்தொருவன் நீண்டொருவன்
கலையுடுத்துப் பூமுடித்துக்
கச்சணிந்து கனகமதில்
பலர்கண்கள் மேல்நோக்கக்
கரணங்கள் போடுகிறான்
கண்ணியனைக் கண்டுசொல்லே. 1

அறுப்புண்டு கட்டுண்டு அழகு செய்வாள்;
முனையுண்டேல் அனைவருமே கௌரவிப்பர்;
முனைகுறைந்தால் பெண்டிரெலாம் சீச்சீயென்பர்;
சொன்னாலும் பேர்கொஞ்சம் வேலைக்காரி. 2

உள்ளே முத்துப் பதித்ததுபோல்
மேலே மஞ்சள் குளித்ததுபோல்
செம்பு நிறையக் கெம்பம்மா
தேர்ந்தே இதனைச் சொல்லம்மா. 3

பச்சைக் கன்னிகள் நான்குபேர் ;
பவளக் கன்னிகள் நான்குபேர் ;
மஞ்சள் கன்னிகள் நான்குபேர் ;
நீலக் கன்னிகள் நான்குபேர் ;
இப்பதினாறு பேருக்கும் இரண்டே நாயகர் 4

தோட்டத்தின் அலங்காரி;
துரைமகளும் சிங்காரி;
கையதனில் அடங்கிடுவள் ;
கச்சேரி ஏறிடுவள். 5

விடை :

1. காற்றாடி, 2. துடைப்பம், 3. மாதுளம்பழம், 4. சொக்கட்டான், 5. வெற்றிலை.

# எழுத்து வேறுபாடும் பொருள் வேறுபாடும்

## ரகர றகர பேதம்:

1. அரம் - ஓர் ஆயுதம்
   அறம் - ஈகை, தருமம், கடமை.
2. அரை - பாதி இடை
   அறை - சிறு வீடு
3. உரவு - அறிவு
   உறவு - சுற்றம்
4. எரி - தீ
   எறி - வீசு
5. கரந்து - மறைந்து
   கறந்து - பால் கறந்து
6. கரை - எல்லை, முடிவு
   கறை - குற்றம்
7. குரல் - ஓசை
   குறள் - சிறுமை, திருவள்ளுவர் பாடிய நூல்
8. கூரை - வீட்டின் மேற்புறம்
   கூறை - புதுப்புடைவை
9. நிரை - ஒழுங்கு, வரிசை
   நிறை-எடை, உறுதிப்பாடு
10. பாரை - கட்டபாரை
    பாறை - கற்பாறை
11. புரம் - நகரம்
    புறம் - வெளியிடம்
12. பொரி - நெற்பொரி
    பொறி - செல்வம், தீப்பொறி
13. மரம் - விருட்சம்
    மறம் - பாவம், வீரம்
14. மரித்தல் - இறத்தல்
    மறித்தல் - தடுத்தல்
15. மரை - மான், தாமரை
    மறை - வேதம்

## லகர ளகர பேதம்:

1. அலை - திரை, கடல்
   அளை - வெண்ணெய், தயிர்
2. கலை - சாஸ்திரம்
   களை - அயர்வு. புல்
3. கொல் - கொல்லன், வதை, அசைச்சொல்
   கொள் - ஒரு வகைத் தானியம்
4. தோல் - சருமம்
   தோள் - புஜம்
5. நல்லார் - நல்லவர், பெண்டிர்
   நள்ளார் - பகைவர்
6. புலி - மிருகம்
   புளி - புளியமரம், ஒரு சுவை.
7. புல் - அற்பம், புல்லு
   புள் - பறவை
8. வலை - மீன் முதலியவற்றை அகப்படுத்துங் கருவி
   வளை - கைவளை, சங்கு, நுழை வழி (Hole)
9. வலி - பாதை
   வளி - காற்று
10. வால் - தோகை, பரிசுத்தம்
    வாள் - அரிவாள்
11. விலக்கு - நீக்கு
    விளக்கு - தீபம்
12. வேல் - வேலமரம், வேலாயுதம்
    வேள் - முருகக்கடவுள், மன்மதன்.

9.4.97



## ணகர னகர பேதம்:

1. தண்மை - எளிமை, குளிர்ச்சி
   தன்மை - குணம், இயல்பு
2. பணி - ஆபரணம், கட்டளை, வேலை.
   பனி - குளிர்ச்சி
3. பண் - இசைப்பாட்டு
   பன் - சொல்லு
4. புணை - தெப்பம்
   புனை - அலங்கரி, அழகு செய்
5. புண் - இரணம் (Wound)
   புன் - இழிவு
6. மணம் - வாசனை, கலியாணம்
   மனம் - நெஞ்சம்.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
135584
T3
031
N49U

RSR/124

